பூமி: 21 சுற்று: 311 ஐப்பசி 18

# தினபூமி

thinaboomi.com

RNI Regn. No. 61494/94

வேலூர், செவ்வாய், நவம்பர் 04, 2025

சென்னை ▸ மதுரை ▸ திருச்சி ▸ கோவை ▸ நெல்லை ▸ சேலம் ▸ வேலூர் ▸ புதுச்சேரி

பக்கம் 8 ₹ 3.00



**ஆப்கானிஸ்தானில் ஏற்பட்ட திடீர் நிலநடுக்கத்தில் சிக்கி 10 பேர் உயிரிழப்பு: 260 பேர் காயம்**

....2-ம் பக்கம்

**பீகார் மாநில முதல்வராக நவ.18-ல் பதவியேற்பேன்: தேஜஸ்வி யாதவ் நம்பிக்கை**

...3-ம் பக்கம்

**முதல் முறையாக உலகக்கோப்பை வென்ற இந்திய மகளிர் அணிக்கு பி.சி.சி.ஐ. ரூ.51 கோடி பரிசுத்தொகை**

....6-ம் பக்கம்





தமிழக முதல்வர் மு.க.ஸ்டாலின் நேற்று தருமபுரி நகராட்சிக்கு அருகிலுள்ள ஏ.ரெட்டிஅள்ளி கிராமம், சோகத்தூர் பஞ்சாயத்திற்குட்பட்ட பகுதிகளில் 10 ஏக்கர் பரப்பளவில் 39.14 கோடி ரூபாய் மதிப்பீட்டில் நடைபெற்று வரும் தருமபுரி நகராட்சி புதிய பேருந்து நிலையத்தின் கட்டுமானப் பணிகளை பார்வையிட்டு ஆய்வு செய்தார். இந்த ஆய்வின்போது அமைச்சர்கள் எ.வ.வேலு, எம்.ஆர்.கே.பன்னீர்செல்வம், ஆர்.ராஜேந்திரன், எஸ்.எஸ்.சிவசங்கர், முன்னாள் அமைச்சர் பழனியப்பன், மாவட்ட கலெக்டர் ரெ.சதிஷ் மற்றும் உள்ளாட்சி அமைப்பின் பிரதிநிதிகள், அரசு உயர் அலுவலர்கள் உடனிருந்தனர்.

### எஸ்.ஐ.ஆர். பெயரில் தேர்தல் ஆணையம் சதிச்செயலில் ஈடுபடுகிறது:

# தருமபுரி திருமண விழாவில் முதல்வர் ஸ்டாலின் பேச்சு

## பா.ஜ.க.வின் எந்த சதித்திட்டங்களும் தமிழகத்தில் எடுபடாது எனவும் உறுதி

தருமபுரி, நவ. 04-

**வாக்காளர் பட்டியல் சிறப்பு திருத்த பணி என்ற பெயரில் தேர்தல் ஆணையம் சதிச்செயலில் ஈடுபட்டு வருகிறது என்று தெரிவித்துள்ள முதல்வர் மு.க.ஸ்டாலின், தமிழகத்தில் பா.ஜ.க.வின் எந்த சதித்திட்டங்களும் எடுபடாது என்றும், பீகாரில் கூறியதை பிரதமர் மோடி இங்கு பேசுவாரா என்றும் அவர் கேள்வி எழுப்பியுள்ளார்.**

**முதல்வர் பங்கேற்பு...**

தருமபுரி மக்களவை உறுப்பினர் மணி இல்ல திருமண விழா தருமபுரியில் பென்னாகரம் சாலையில் நேற்று (நவம்.3ம் தேதி) நடந்தது. இந்நிகழ்ச்சியில் முதல்வர் ஸ்டாலின் பங்கேற்று திருமணத்தை நடத்தி வைத்தார். பின்னர் விழாவில் பேசிய முதல்வர் கூறியதாவது: "அனைத்துக் கட்சிக் கூட்டம் ஒன்றை நடத்தி முக்கிய தீர்மானங்களை நிறைவேற்றிய கையோடு இந்த திருமணத்திற்கு வந்திருக்கிறேன். வாக்காளர் பட்டியல் சிறப்பு திருத்த பணி என்ற பெயரில் தேர்தல் ஆணையம் தீய மற்றும் சதிச் செயலில் ஈடுபட்டு வருகிறது. அதைத் தடுப்பதற்காகவே அனைத்துக் கட்சி கூட்டம் நடத்தி தீர்மானம் நிறைவேற்றி இருக்கிறோம்.

**அவகாசம் தேவை....**

வாக்காளர் பட்டியல் சிறப்பு தீவிர திருத்தப் பணிக்கு உரிய அவகாசம் தேவை, பதற்றத்துடன் இந்தப் பணியை செய்ய வேண்டியது இல்லை என்றும் வலியுறுத்தி உள்ளோம். உண்மையான வாக்காளர்களை நீக்கும் தந்திர செயலாகவே இதை பார்க்கிறோம். பீகாரிலும் இதுவே நடந்தது. இளம் தலைவர் ராகுல் இதை கடுமையாக எதிர்த்துள்ளார். இது தொடர்பான அனைத்துக் கட்சிக் கூட்டத்திற்கு அ.தி.மு.க. உள்ளிட்ட சில கட்சிகள் வரவில்லை.

**இரட்டை வேடம்...**

ஆனால், வாக்காளர் பட்டியல் சிறப்பு தீவிர திருத்தப் பணி தொடர்பாக எதிர்க்கட்சியான அ.தி.மு.க.வுக்கு சந்தேகமும் இருக்கிறது. இது அவர்களின் இரட்டை வேடத்தைக் காட்டுகிறது. பா.ஜ.க.வின் பாதம் தாங்கியாக எடப்பாடி பழனிசாமி இருக்கிறார். பா.ஜ.க. இது போன்ற எந்த சதிச் செயலில் ஈடுபட்டாலும் தமிழகத்தில் காலூன்ற முடியாது. தன்னை எல்லோருக்குமான பிரதமர் என்று பீகாரில் கூறிக் கொள்ளும் பிரதமர் மோடி வாக்கு அரசியலுக்காக அங்கு நாடகம் நடத்தி வருகிறார்.

**தைரியம் உள்ளதா?**

தமிழகத்தில் வந்து இவ்வாறு பேசுவதற்கு அவருக்கு தைரியம் உள்ளதா? பா.ஜ.க.வினர் என்ன சதி செய்தாலும், அவதூறு பரப்பினாலும், போலியான தகவல்களைப் பரப்பினாலும் 2026 தமிழகத்தில் மீண்டும் திமுக ஆட்சி தான் அமையும். தமிழக மக்கள் மீதான நம்பிக்கையில் இதைக் கூறுகிறேன். துணையாக இருப்பீர்கள் என நம்புகிறேன். 2021-ல் கொத்தடிமை அ.தி.மு.க.விடம் இருந்து தமிழகத்தை மீட்டோம். 2026-ல் பா.ஜ.க. மற்றும் அ.தி.மு.க. கூட்டணியிடம் இருந்து தமிழகத்தை மீட்போம். தமிழக தம்பதிகள் தங்களுக்கு பிறக்கும் குழந்தைகளுக்கு அழகான தமிழில் பெயரிட்டு அழைத்து மகிழுங்கள்" என்று முதல்வர் பேசினார். இந்நிகழ்ச்சியில் அமைச்சர்கள் எம்.ஆர்.கே பன்னீர்செல்வம், எ.வ.வேலு, சிவசங்கர், ராஜேந்திரன், விசிக தலைவர் திருமாவளவன், தருமபுரி எம்.பி மணி உள்ளிட்ட பலர் கலந்து கொண்டனர்.

**புதிய பேருந்து பணி...**

தொடர்ந்து தருமபுரியில் ரூ.40 கோடி மதிப்பீட்டில் நடைபெற்று வரும் புதிய பேருந்து நிலையப் பணிகளையும், தடங்கம் பகுதியில் புதிய சிப்காட் வளாகம் அமைக்கும் பணிகளையும் முதல்வர் ஸ்டாலின் நேரில் பார்வையிட்டு ஆய்வு செய்தார். அதன் பின்னர் தனி விமானம் மூலம் சென்னை புறப்பட்டுச் சென்றார்.

### தமிழகத்தில் எஸ்.ஐ.ஆர்.-க்கு தடை கோரி

# சுப்ரீம் கோர்ட்டில் தி.மு.க. மனு தாக்கல்

புதுடெல்லி, நவ. 04-

**தமிழகத்தில் எஸ்.ஐ.ஆர்.க்கு தடை கோரி தி.மு.க. சார்பில் சுப்ரீம் கோர்ட்டில் மனு தாக்கல் செய்யப்பட்டுள்ளது.**

தமிழ்நாட்டில் வாக்காளர் பட்டியல் சிறப்பு தீவிர திருத்தப் பணிகள் (எஸ்.ஐ.ஆர்.) இன்று (4-ந்தேதி) முதல் தொடங்கும் என்று இந்திய தேர்தல் ஆணையம் அறிவித்து உள்ளது. இதையொட்டி ஒவ்வொரு மாவட்ட கலெக்டர்களும் வாக்காளர் பட்டியல் திருத்தப் பணிகளை எவ்வாறு செயல்படுத்த வேண்டும் என்று தேர்தல் ஆணையர் ஞானேஷ் குமார் பல்வேறு ஆலோசனைகளை வழங்கி இருக்கிறார்.

அதன் அடிப்படையில் வாக்காளர் பட்டியல் திருத்தப் பணிகள் நடைபெற உள்ளது.

வாக்காளர் பட்டியல் சிறப்பு தீவிர திருத்தத்தை அவசர அவசரமாக செய்யக் கூடாது. நவம்பர், டிசம்பர் மாதங்களில் வடகிழக்கு பருவ மழை பெய்து வரும் காலத்தில் வாக்காளர் பட்டியல் திருத்தப் பணிகளை செய்வது சிரமம். எனவே கால அவகாசம் கொடுத்து செய்ய வேண்டும். இப்போது இதை செய்வது சரியானது அல்ல என்று தி.மு.க. மற்றும் அதன் கூட்டணி கட்சிகள் வலியுறுத்தின. ஆனாலும் தேர்தல் ஆணையம் இந்த கோரிக்கையை ஏற்றுக் கொள்ளவில்லை. திட்டமிட்டபடி வாக்காளர் பட்டியல் சிறப்பு தீவிர திருத்தம் பணிகள் நடைபெறும் என்று அறிவிக்கப்பட்டு அதற்கான பணிகள் நடைபெற்று வருகிறது.

இதைத் தொடர்ந்து வாக்காளர் பட்டியல் சிறப்பு தீவிர திருத்தப் பணிகளுக்கு எதிராக நேற்று அனைத்து கட்சி கூட்டம் நடத்தப்பட்டது. அக்கூட்டத்தில் ஜனநாயக, சட்ட விரோதமான எஸ்.ஐ.ஆர். நடவடிக்கையை தேர்தல் ஆணையம் நிறுத்தி வைக்க வேண்டுமென தீர்மானம் நிறைவேற்றப்பட்டது. இந்நிலையில், தேர்தல் ஆணையத்தின் எஸ்.ஐ.ஆர். நடவடிக்கைக்கு தடை விதிக்கக் கோரி சுப்ரீம் கோர்ட்டில் தி.மு.க. சார்பில் நேற்று மனுத் தாக்கல் செய்யப்பட்டது. எஸ்.ஐ.ஆர். நடவடிக்கைக்கு எதிராக கட்சிகள் சார்பில் சுப்ரீம் கோர்ட்டில் வழக்கு தொடர்வது என நேற்று முன்தினம் நடந்த அனைத்துக் கட்சிக் கூட்டத்தில் தீர்மானம் நிறைவேற்றப்பட்டு இருந்த நிலையில் மனு தாக்கல் செய்யப்பட்டுள்ளது குறிப்பிடத்தக்கது.

### தகுதியான வாக்காளர்களை கண்டறிய

# தமிழ்நாட்டில் வாக்காளர் பட்டியல் திருத்த பணிகள் இன்று தொடக்கம்

சென்னை, நவ. 04-

**தகுதியான வாக்காளர்களை மட்டும் வாக்காளர் பட்டியலில் இடம் பெற செய்ய தமிழகம் முழுவதும் 234 சட்டசபை தொகுதிகளிலும் இன்று முதல் டிசம்பர் 4-ம் தேதி வரை வாக்காளர்களை கணக்கெடுக்கும் பணி நடைபெற உள்ளது.**

வாக்காளர் படியலில் இறந்தவர்கள், முகவரி மாறியவர்களின் பெயர்கள் இடம் பெற்று உள்ளன. பல வாக்காளர்களின் பெயர்கள் ஒன்றுக்கும் மேற்பட்ட தொகுதிகளிலும் உள்ளன. எனவே தகுதியான வாக்காளர்களை மட்டுமே பட்டியலில் இடம் பெற செய்ய வேண்டும். போலி வாக்காளர்களை நீக்க வேண்டும் என்பதற்காக வாக்காளர் பட்டியல் சிறப்பு தீவிர திருத்த பணியை மேற்கொள்ள இந்திய தேர்தல் ஆணையம் முடிவெடுத்து உள்ளது.

அதன்படி, தமிழகம் மற்றும் புதுச்சேரியில் உள்ள அனைத்து சட்டசபை தொகுதிகளிலும் இன்று முதல் டிசம்பர் 4-ம் தேதி வரை வாக்காளர்களை கணக்கெடுக்கும் பணியை அரசியல் கட்சிகளின் பூத் ஏஜெண்டுகள் துணையுடன் அரசு ஊழியர்கள் மேற்கொள்ள உள்ளனர்.

இதைத்தொடர்ந்து வரைவு வாக்காளர்கள் பட்டியல் டிசம்பர் 9-ம் தேதியும் இறுதி வாக்காளர் பட்டியல் பிப்ரவரி 7-ம் தேதியும் வெளியிடப்பட உள்ளன. இதற்கு முதல்வர் மு.க.ஸ்டாலின் தலைமையில் நடந்த அரசியல் கட்சிகளின் கூட்டத்தில் எதிர்ப்பு தெரிவிக்கப்பட்டுள்ளது. வாக்காளர் பட்டியல் சிறப்பு தீவிர திருத்த பணியை ஒத்திவைக்க வேண்டும் என்று சுப்ரீம் கோர்ட்டில் வழக்கு தொடர முடிவு செய்யப்பட்டுள்ளது.

வாக்காளர் பட்டியல் சிறப்பு தீவிர திருத்தம் தொடர்பாக தமிழக தலைமை தேர்தல் அதிகாரி அர்ச்சனா பட்நாயக் கூறியதாவது:- தமிழகத்தில் 2002 மற்றும் 2005- ஆண்டுகளில் வெளியிடப்பட்ட இறுதி வாக்காளர் பட்டியலின்படி வாக்காளர் கணக்கெடுப்பு பணி இன்று முதல் தொடங்க உள்ளது. இந்த பட்டியல்கள் ஓட்டுச்சாவடி அலுவலர்களிடம் உள்ளன. இந்த பட்டியல்களுடன் அனைத்து வீடுகளுக்கும் ஓட்டுச்சாவடி அலுவலர்கள் செல்லப்போவது இல்லை. எந்தெந்த வீடுகளில் 2002 மற்றும் 2005-ம் ஆண்டு வாக்காளர் பட்டியலில் பெயர் உள்ளதோ அந்த வீடுகளுக்கு மட்டுமே செல்வார்கள்.

அந்த வீடுகளில் யாராவது

(கடைசி பக்கம் பார்க்க)

### அரசியல் பொதுக்கூட்ட விதிமுறைகள்:

# மூத்த அமைச்சர்கள் தலைமையில் நவ.6-ல் அனைத்துக்கட்சி கூட்டம்

சென்னை, நவ. 04-

**தமிழகத்தில் அரசியல் கட்சிகளின் பொதுக் கூட்டங்களுக்கான விதிமுறைகளை வகுக்க மூத்த அமைச்சர்கள் தலைமையில் வருகிற நவம்பர் 6-ம் தேதி அனைத்துக் கட்சி கூட்டம் நடைபெறும் என தமிழ்நாடு அரசு அறிவித்துள்ளது. இதற்காக தமிழகத்தில் அங்கீகரிக்கப்பட்ட கட்சிகளுக்கு அழைப்பு விடுக்கப்பட்டுள்ளது.**

தமிழகத்தில் த.வெ.க. தலைவர் விஜய் கலந்து கொண்ட கரூர் பிரசாரத்தில் கூட்ட நெரிசலில் சிக்கி 41 பேர் பலியான சம்பவம் நாடு முழுவதுமே பெரும் அதிர்வலைகளை ஏற்படுத்தியது. இதையடுத்து தமிழகத்தில் அரசியல் கட்சிகளின் பொதுக் கூட்டங்கள் மற்றும் பிரசாரங்களுக்கான விதிமுறைகள் வகுக்கப்படும் என்று முதல்வர் மு.க. ஸ்டாலின் கூறியிருந்தார். அதன்படி இந்த விதிமுறைகளை வகுக்க அரசியல் கட்சிகளின் ஆலோசனைகளைப் பெற வருகிற நவம்பர் 6 ஆம் தேதி அனைத்துக் கட்சிக் கூட்டம் நடத்த தமிழக அரசு முடிவெடுத்துள்ளது.

இதற்காக தேர்தல் ஆணையத்தால் அங்கீகரிக்கப்பட்ட கட்சிகள், பாராளுமன்ற, சட்டமன்றத்தில் பிரதிநிதித்துவம் உள்ள கட்சிகளுக்கு அழைப்பு விடுக்கப்பட்டுள்ளது.

மூத்த அமைச்சர்கள் தலைமையில் இந்த கூட்டம் நடைபெறும் என்று தகவல் தெரிவிக்கப்பட்டுள்ளது.

# எஸ்.ஐ.ஆர். பணிகள் குறித்து அச்சப்பட தேவையில்லை

## உயர் நீதிமன்றத்தில் தேர்தல் ஆணையம் உறுதி

சென்னை, நவ. 04-

**வாக்காளர் பட்டியல் சிறப்பு தீவிர திருத்த பணிகள் குறித்து யாரும் அச்சம் கொள்ள தேவையில்லை. இப்பணிகள் எதிர்ப்பார்த்தைவிட சிறப்பாக மேற்கொள்ளப்படும் என தேர்தல் ஆணையம், சென்னை உயர் நீதிமன்றத்தில் உறுதி அளித்துள்ளது.**

சென்னை தியாகராய நகர், தாம்பரம் தொகுதிகளில் உள்ள வாக்காளர் பட்டியலில் இடம்பெற்றுள்ள இறந்தவர்கள், புலம்பெயர்ந்தவர்கள், தகுதியற்றவர்கள் மற்றும் இரட்டை பதிவு செய்யப்பட்ட வாக்காளர்களின் பெயர்களை பட்டியலில் இருந்து நீக்க வேண்டும் என அளித்த விண்ணப்பத்தை பரிசீலிக்க தேர்தல் ஆணையத்திற்கு உத்தரவிடக் கோரி, தி.நகர் முன்னாள் எம்.எல்.ஏ. சத்தியநாரணயன் மற்றும் தாம்பரம் தொகுதியைச் சேர்ந்த அதிமுக வழக்கறிஞர் விநாயகம் ஆகியோர் சென்னை உயர் நீதிமன்றத்தில் வழக்குகள் தாக்கல் செய்திருந்தனர்.

இந்த வழக்குகள் தலைமை நீதிபதி ஸ்ரீவஸ்தவா மற்றும் அருள்முருகன் அடங்கிய அமர்வில் விசாரணைக்கு வந்த போது, தேர்தல் ஆணையம் தரப்பில் ஆஜரான நிரஞ்சன் ராஜகோபால், ஆண்டுதோறும் ஜனவரி மாதம் வாக்காளர் பட்டியல் சிறப்பு திருத்தப்பணிகள் நடைபெறும் என்றும், ஒவ்வொரு தேர்தலுக்கு முன்பும் வாக்காளர் சிறப்பு திருத்தப்பணிகள் நடைபெறும் என்றும் குறிப்பிட்டார்.

தற்போது தமிழகம் உள்பட 12 மாநிலங்களில் சிறப்பு தீவிர திருத்தப் பணிகள் மேற்கொள்வது தொடர்பாக அக்டோபர் 27 ம் தேதி தேர்தல் ஆணையம் அறிவிப்பு வெளியிட்டுள்ளது. அதனடிப்படையில், இன்று முதல் சிறப்பு தீவிர திருத்தப் பணிகள் தொடங்கப்பட உள்ளன.

இப்பணிகள் முழுமையான வாக்காளர் பட்டியலை மாற்றியமைக்கப்பட உள்ளதாக தெரிவித்தார். ஒவ்வொரு வாக்காளருக்கும் படிவங்கள் வழங்கப்பட்டு, பூர்த்தி செய்த படிவங்களை சரிபார்த்து டிசம்பர் மாதம் 9-ம் தேதி சிறப்பு தீவிர திருத்த பணிகள் அடிப்படையில் வரைவு வாக்காளர் பட்டியல் வெளியிடப்படும். அப்போது வரைவு பட்டியலுக்கு ஆட்சேபம் தெரிவிக்கலாம் என்றும் அதை முழுமையாக பரிசீலித்த பிறகே இறுதி வாக்காளர் பட்டியல் வெளியிடப்படும் எனவும் குறிப்பிட்டார்.

1950-ம் ஆண்டுக்கு பிறகு 10 முறை சிறப்பு தீவிர திருத்தப் பணிகள் நடத்தப்பட்டுள்ளதாகவும், தமிழகத்தில் 2005-ம் ஆண்டிற்கு பின் 20 ஆண்டுகளுக்கு பின் சிறப்பு தீவிர திருத்தப் பணிகள் மேற்கொள்ளப்படுவதாகவும் தெரிவித்தார். வாக்காளர் பட்டியல் சிறப்பு தீவிர திருத்தப்

(கடைசி பக்கம் பார்க்க)

### தெலுங்கானா மாநிலத்தில் கோர சம்பவம்:

# பேருந்து மீது லாரி மோதி 24 பேர் பலி

ஐதராபாத், நவ. 04-

**தெலுங்கானாவில் அரசு பேருந்து மீது லாரி மோதிய விபத்தில் 24 பேர் பலியான சம்பவம் அங்கு சோகத்தை ஏற்படுத்தியுள்ளது.**



தெலுங்கானாவின் ரங்காரெட்டி மாவட்டத்தில் செவல்லா காவல் நிலையத்திற்கு உட்பட்ட கானாப்பூர் கேட் பகுதியில் நேற்று காலை அரசு பேருந்து ஒன்று சென்று கொண்டிருந்தது. இந்நிலையில், பேருந்து மீது டிப்பர் லாரி ஒன்று மோதி விபத்து ஏற்பட்டது. இந்த சம்பவத்தில், பேருந்துதில் இருந்த 17 பேர் சம்பவ இடத்திலேயே பலியானார்கள். பலர் காயமடைந்தனர்.

பாரதீய ராஷ்டீரிய சமிதியின் தலைவரான தெலுங்கானா முன்னாள் முதல்வர் சந்திரசேகர ராவ் இந்த விபத்துக்கு இரங்கல் தெரிவித்து உள்ளார். உரிய இழப்பீடு வழங்கவும் வலியுறுத்தி உள்ளார். இதேபோன்று, முதல்வர் ரேவந்த் ரெட்டியும் சம்பவத்திற்கு இரங்கல் தெரிவித்து உள்ளதுடன், சம்பவ பகுதிக்கு உடனடியாக செல்லும்படி அதிகாரிகளுக்கு உத்தரவிட்டு உள்ளார். தேவையான நிவாரண நடவடிக்கைகளை மேற்கொள்ளும்படியும் அறிவுறுத்தி உள்ளார். இந்நிலையில், மருத்துவமனைகளில் தீவிர சிகிச்சை பலனின்றி பலர் உயிரிழந்தனர். இதனால், பலி எண்ணிக்கை 24 ஆக உயர்ந்துள்ளது.

**மார்க்கெட் விலை நிலவரம்**



| BSE | NSE |
|---|---|
| 39.78 | 41.25 |
| பாயிண்ட் 83,978.49 | பாயிண்ட் 25,763.35 |



**தங்கம்**
1 சவரன் ₹90,800
1 கிராம் ₹11,350



**வெள்ளி**
1 கிலோ ₹168,000
1 கிராம் ₹168.00

**டாலர்** ₹88.76

**பெட்ரோல்** ₹100.75
**டீசல்** ₹92.34



# ஆப்கானில் திடீர் நிலநடுக்கம்: 10 பேர் உயிரிழப்பு: 260 பேர் காயம்

**காபூல், நவ. 04-**

ஆப்கானிஸ்தானில் நிலநடுக்கத்திற்கு 10 பேர் உயிரிழுந்தனர் 260 பேர் படுகாயம் அடைந்தனர்.



போரால் கடுமையாக பாதிக்கப்பட்டு மீண்டு வருகிற ஆப்கானிஸ்தான் நாட்டு மக்களுக்கு இயற்கையும் சவால் விட்டு வருகிறது. அந்நாட்டின் வடக்கே அமைந்த சமங்கன் என்ற மலைப்பாங்கான மாகாணத்தில் நேற்று அதிகாலை சக்தி வாய்ந்த நிலநடுக்கம் ஏற்பட்டது. 5.23 லட்சம் பேர் வசிக்க கூடிய மஜார்-இ-ஷெரீப் என்ற நகரில் நிலநடுக்கம் மையம் கொண்டிருந்தது.

இது ரிக்டர் அளவுகோலில் 6.3 ஆக பதிவாகி உள்ளது. இதனால், வீடுகள், கட்டிடங்கள் குலுங்கின. அதிகாலையில் மக்கள் உறங்கி கொண்டிருந்த, இருள் சூழ்ந்த நேரத்தில் நிலநடுக்கம் ஏற்பட்டு உள்ளது. இதனால், மக்கள் தப்பி செல்ல முடியாத நிலையும் காணப்பட்டது. இதுதொடர்பான வீடியோ ஒன்றும் வைரலாகி வருகிறது.

இதுபற்றி ஆப்கானிஸ்தான் நாட்டின் தலீபான் பாதுகாப்பு அமைச்சகம் கூறும்போது, பால்க் மற்றும் சமங்கன் மாகாணங்கள் அதிகம் பாதிக்கப்பட்டு உள்ளன. இதனால், எண்ணற்றோர் பலியாகி இருக்க கூடும் என அஞ்சப்படுகிறது என தெரிவித்துள்ளது. இதனை தொடர்ந்து, ராணுவத்தின் மீட்பு மற்றும் அவசரகால உதவி குழுக்கள் உடனடியாக சென்று மக்களை மீட்கும் பணியில் ஈடுபட்டு வருகின்றனர். காயமடைந்த நபர்களை சிகிச்சைக்கு கொண்டு சென்றனர். அமெரிக்காவி

ன் புவியியல் அமைப்பு ஆரஞ்சு அலர்ட்டுக்கான எச்சரிக்கையை வெளியிட்டு உள்ளது. இதனால், 10 பேர் பலியாகி உள்ளனர். 260 பேர் காயம் அடைந்துள்ளனர்.

# தமிழகத்தில் வெப்பநிலை உயரும்: வானிலை ஆய்வு மையம் தகவல்

**சென்னை, நவ. 04-**

தமிழகத்தில் இன்று வெப்பநிலை அதிகரிக்கும் என வானிலை ஆய்வு மையம் தெரிவித்துள்ளது.

நேற்று முன்தினம் (02-11-2025) மத்திய கிழக்கு வங்கக்கடல் மற்றும் அதனை ஒட்டிய மியான்மார் கடலோரப்பகுதிகளில் நிலவிய காற்றழுத்த தாழ்வு பகுதி, நேற்று (03-11-2025) காலை 08.30 மணி அளவில் அதே பகுதியில் நிலவுகிறது. இது அடுத்த 24 மணி நேரத்தில், வடக்கு- வடமேற்கு திசையில் நகர்ந்து மியான்மார் - பங்களாதேஷ் கடற்கரையை ஒட்டி நகரக்கூடும்.

நேற்று முன்தினம் (02-11-2025) வடகிழக்கு அரபிக்கடல் மற்றும் அதனை ஒட்டிய பகுதிகளில் நிலவிய காற்றழுத்த தாழ்வு பகுதி இன்று (03-11-2025) காலை 05.30 மணி அளவில் வலுவிழந்தது. 03-11-2025 மற்றும் 05-11-2025: தமிழகத்தில் ஒரிரு இடங்களிலும், புதுவை மற்றும் காரைக்கால் பகுதிகளிலும் இடி, மின்னலுடன் கூடிய லேசானது முதல் மிதமான மழை பெய்யக்கூடும். 06-11-2025 மற்றும் 09-11-2025: தென் தமிழகத்தில் ஒருசில இடங்களிலும், வடதமிழகத்தில் ஒரிரு இடங்களிலும் புதுவை மற்றும் காரைக்கால் பகுதிகளிலும் லேசானது முதல் மிதமான மழை பெய்யக்கூடும்.

இன்று 04-11-2025: தமிழகம், புதுவை மற்றும் காரைக்கால் பகுதிகளில் ஒரிரு இடங்களில் அதிகபட்ச வெப்பநிலை 2-4° செல்சியஸ் இயல்பை விட அதிகமாக இருக்கக்கூடும் என தெரிவிக்கப்பட்டுள்ளது.

## இந்தியாவின் சிறந்த முதல்வர் யார்?

# மு.க.ஸ்டாலின் பெயரை கூறிய தேஜஸ்வி யாதவ்

**பாட்னா, நவ. 04-**

இந்தியாவின் சிறந்த முதல்வர் மு.க.ஸ்டாலின் என்று தேஜஸ்வி யாதவ் கூறினார்.

பீகார் மாநில சட்டசபைக்கு 2 கட்டமாக அடுத்த மாதம் 6 மற்றும் 11-ம் தேதிகளில் வாக்குப்பதிவு நடைபெறுகிறது. அங்கு நிதிஷ்குமார் தலைமையில் ஐக்கிய ஜனதா தளம்-பா.ஜ.க. கூட்டணி ஆட்சி நடைபெற்று வருகிறது. ஆட்சியை தக்கவைத்துக் கொள்ளும் ஆர்வத்தில் ஆளும் தேசிய ஜனநாயக கூட்டணி தீவிரமாக பணியாற்றி வருகிறது. ஆட்சியைக் கைப்பற்றும் வேட்கையில் எதிர்க்கட்சியான தேஜஸ்வி யாதவின் ஆர்.ஜே.டி-காங்கிரசின் மகாபந்தன் கூட்டணி பிரசாரத்தில் ஈடுபட்டு வருகிறது.

சட்டமன்ற தேர்தலை ஒட்டி தனியார் செய்தி தொலைக்காட்சி சேனலுக்கு தேஜஸ்வி யாதவ் பேட்டி அளித்தார். அந்த பேட்டியில் இந்தியாவின் சிறந்த முதலமைச்சராக நீங்கள் யாரைக் கருதுகிறீர்கள்? சிலர் இன்னமும் மோடிஜியின் பெயரையும் சொல்கிறார்கள். சிலர் முலாயம் சிங்கின் பெயரைச் சொல்கிறார்கள். சிலர் அகிலேஷ் யாதவின் பெயரையும் சொல்கிறார்கள். சிலர் அரவிந்த் கெஜ்ரிவாலின் பெயரையும் சொல்கிறார்கள். ஆகையால் இப்போது இருப்பவர்களில் யார் சிறந்த முதலமைச்சர் என்று நீங்கள் நினைக்கிறீர்கள் என்று கேள்வி எழுப்பப்பட்டது.

அதற்கு பதில் அளித்த தேஜஸ்வி, "இப்போது இருப்பவர்களில் எனக்கு ஸ்டாலின் என்று தோன்றுகிறது. நம்முடைய (பீகார்) முதலமைச்சர் வெளிநாடுகளுக்குச் சென்று முதலீடுகளைக் கொண்டு வருவதை நான் பார்க்கவில்லை. முதலீட்டைக் கொண்டுவருவதற்காக அவர் எதுவும் செய்வதில்லை. ஆனால், ஸ்டாலின் அவர்கள் முயற்சி செய்கிறார். அவர் முதலீட்டாளர்கள் மாநாடுகளை நடத்துகிறார், முதலீடுகளைக் கொண்டு வருகிறார்'' என்று தெரிவித்தார். இந்த வீடியோவை திமுகவினர் தற்போது இணையத்தில் வைரலாக்கி வருகின்றனர்.



தமிழ்நாடு துணை முதல்வர் உதயநிதி ஸ்டாலின் தலைமையில் வேலூர் மாவட்ட ஆட்சித் தலைவர் அலுவலக கூட்டரங்கில் அனைத்து துறை பணிகள் குறித்த ஆய்வுக் கூட்டம் நடைபெற்றது.

## அமெரிக்கா வரி விதிப்பு எதிரொலி:

# இந்தியாவுடன் வர்த்தக உறவை மேற்கொள்ள கனடா திட்டம்

**வாஷிங்டன், நவ. 04-**

அமெரிக்காவை மட்டும் நம்பி இருக்க முடியாது என்று நிலைப்பாட்டை அடுத்து இந்தியாவுடன் வர்த்தக உறவு குறித்து கனடா பிரதமர் உறுதி அளித்துள்ளார்.

அமெரிக்காவின் வரி விதிப்பு விவகாரம் தொடர்பாக கனடா வெளியிட்ட விளம்பரம் சர்ச்சையானது. இதையடுத்து கனடாவுடனான அனைத்து விதமான வர்த்தக பேச்சுவார்தையை நிறுத்துவதாக அமெரிக்க அதிபர் டிரம்ப் அறிவித்தார். இந்த நிலையில் கனடா பிரதமர் மார்க் கார்னி அளித்துள்ள பேட்டியில் கூறி இருப்பதாவது:-

உலகின் பிற நாடுகளுடன் உறவை கட்டியெழுப்ப முடிவு செய்துள்ளோம். உலக பொருளாதாரத்தில் 60 சதவீத பங்களிப்பை வழங்கும் ஆசிய பசிபிக் பகுதியில் உள்ள நாடுகளுடன் உறவை மேம்படுத்துவதை விட சிறந்த இடம் வேறு இல்லை.

இந்தியாவுடனான உறவில் நாங்கள் முன்னேற்றம் அடைந்து வருகிறோம், இந்தியாவுடனான வர்த்தக உறவுக்கு முக்கியத்துவம் கொடுக்கிறோம். இந்திய பிரதமர் மோடியை சந்தித்தது இல்லை. ஆனால் எங்களது வெளியுறவு துறை மந்திரி உள்ளிட்ட பிற மந்திரிகள் இந்தியாவுடன் பேச்சு வார்த்தை நடத்தி வருகின்றனர். வெளிநாடுகளுடன் சிறந்த உறவை வலுப்படுத்துவது மிகவும் அவசியமாகும். அமெரிக்காவை மட்டுமே நம்பி இருக்கும் தன்மையை மாற்ற வேண்டும். இது ஒரே இரவில் நடக்காது என எனக்கு தெரியும். நாங்கள் மிக விரைவில் முன்னேறி வருகிறோம் என்றார்.

# பவதாரிணி நினைவாக இசைக்குழு: இளையராஜா

**சென்னை, நவ. 04-**

பவதாரிணி நினைவாக இசைக்குழுவை இசையமைப்பாளர் இளையராஜா அறிமுகம் செய்தார்.

இசையமைப்பாளர் இளையராஜாவின் மகள் பவதாரிணி. பின்னணி பாடகியான இவர், உடல்நலக் குறைவு காரணமாக கடந்த ஆண்டு கொழும்பில் காலமானார். அவரது மறைவுக்குப் பிறகு நடைபெற்ற நினைவேந்தல் கூட்டத்தில் மகள் பவதாரிணிக்காக, ஆர்கெஸ்ட்ரா ஒன்றை உருவாக்கத் திட்டமிட்டிருப்பதாகக் கூறியிருந்தார் இளையராஜா.

இந்நிலையில் தற்போது அதற்கான அறிவிப்பை தனது எக்ஸ் தள பக்கத்தில் வெளியிட்டுள்ளார். திறமை, விருப்பம் உள்ளவர்கள் இதற்கு விண்ணப்பிக்குமாறும் இளையராஜா கோரியுள்ளார். இது தொடர்பாக அவர் வெளியிட்டுள்ள பதிவில் `என்னுடைய மகள் பவதராணியின் நினைவாக, 'பவதா மகளிர் ஆர்கெஸ்ட்ரா'வை உருவாக்க முடிவெடுத்திருப்பதை அறிவிப்பதில் மகிழ்ச்சி அடைகிறேன். இதற்காக திறமையுள்ள பெண் பாடகர்கள், இசைக் கலைஞர்கள் எங்களை தொடர்பு கொள்ளலாம். விருப்பம் உள்ளவர்கள் *allgirlsorchestra@gmail.com* என்கிற மெயிலுக்கு தங்களின் விவரங்களை அனுப்பலாம்' என தெரிவித்துள்ளார்.

தினபூமியில் விளம்பரம் செய்து பயன் பெறுங்கள்

# 45 பாலஸ்தீனர்கள் உடல்கள் ஒப்படைப்பு

**டெல் அவீவ், நவ. 04-**


பாலஸ்தீனர்களின் 24 பேர் உடல்களை இஸ்ரேல் ஒப்படைத்தது.

இஸ்ரேல்- காசா (ஹமாஸ்) இடையே போர் நிறுத்தம் ஏற்பட்டுள்ளது. இதன் முதல் கட்டமாக பிணைக் கைதிகள் மற்றும் பிணைக் கைதிகள் உடல்களை ஹமாஸ் ஒப்படைக்க வேண்டும். அதேபோல் இஸ்ரேல் சிறையில் உள்ள பாலஸ்தீன கைதிகள் மற்றும் பாலஸ்தீனர்களின் உடல்களை இஸ்ரேல் ஒப்படைக்க வேண்டும். உயிரோடு இருந்த 20 பிணைக்கைதிகளை ஹமாஸ் விடுவித்தது. அதன்பின் 2023ஆம் ஆண்டு தாக்குதலில் உயிரிழந்த இஸ்ரேலியர்களின் உடல்களை ஒப்படைத்து வருகிறது.

அதனடிப்பையில் நேற்றிரவு 2023 அக்டோபர் 7ஆம் தேதி தாக்குதல் நடத்தப்பட்டபோது உயிரிழந்த 3 இஸ்ரேல் ராணுவ வீரர்களின் உடல்களை ஹமாஸ் ஒப்படைத்தது. இதனைத் தொடர்ந்து 45 பாலஸ்தீனர்களின் உடல்களை இஸ்ரேல் ஒப்படைத்துள்ளது. இந்த உடல்கள் நாசர் மருத்துவமனையில் வைக்கப்பட்டுள்ளது. போர் நிறுத்தம் ஏற்பட்ட கடந்த மாதம் அக்டோபர் 10ஆம் தேதியில் இருந்து, இதுவரை ஹமாஸ் 20 பிணைக்கைதிகளின் உடல்களை ஒப்படைத்துள்ளது. இன்னும் 8 உடல்களை ஒப்படைக்க வேண்டியுள்ளது.

சிலநாட்களுக்கு ஒரு முறை ஒன்று அல்லது இரண்டு உடல்களை ஹமாஸ் அனுப்பி வைக்கிறது. வேகமாக உடல்களை அனுப்பி வைக்க இஸ்ரேல் வலியுறுத்துகிறது. மேலும், சில உடல்கள் பிணைக்கைதிகள் உடல்கள் இல்லை எனக் கூறுகிறது. காசா முழுவதும் பேரழிவு ஏற்பட்டுள்ளதால், உடல்களை ஒப்படைக்கும் பணி சிக்கலாக உள்ளதாக ஹமாஸ் தெரிவித்துள்ளது. ஹமாஸ் அனுப்பும் ஒவ்வொரு உடலுக்கும், இஸ்ரேல் 15 பாலஸ்தீனர்களின் உடல்களை அனுப்ப வேண்டும்.

## 04-11-2025



# இன்றைய ராசி பலன்கள்

**மேஷம்:-** வரவுக்கு மிஞ்சிய செலவுகள் ஏற்படும். வாகனங்களில் செல்கையில் வேகத்தைக் குறைத்து, விபத்தினைத் தவிர்க்கவும். உறவுகளிடையே நல்லுறவு ஏற்படுத்த முயலவும்.

**ரிஷபம்:-** படிப்பில் வெற்றிகள் படிப்படியாய் வரும். பிரிந்த தம்பதிகள் ஒன்று சேர்ந்து மகிழ்வர். பலவழிகளிலும் பணவரவு அதிகரிக்கும். பெண்களால் இலாபம் ஏற்பட மனம் மகிழும்.

**மிதுனம்:-** செய்தொழிலில் புதிய உத்வேகம் பிறக்கும். அரசுப்பணியில் உள்ளவர்கள் பணியில் பணிவும், துணிவும் இருந்தால் முன்னேற்றம் ஏற்படும். பெண்களால் இலாபமும், போகமும் உண்டு.

**கடகம்:-** தெய்வ நம்பிக்கையும், பாக்கிய விருத்தியும் ஏற்படும். கோவில் திருப்பணிகளில் விருப்பம் அதிகரிக்கும். வாழ்க்கையில் வசந்த காலமென நல்ல திருப்பங்கள் ஏற்படும்.

**சிம்மம்:-** அரசு அதிகாரிகளிடம் பணிவோடு நடந்தால் முன்னேற்றம் ஏற்படும். மனைவியின் கலகத்தால் வீட்டில் குழப்பங்கள் ஏற்படலாம். இழப்பைத் தவிர்க்க உங்கள் பொருள்களைக் கவனமாகப் பாதுகாக்கவும்.

**கன்னி:-** புதிய தொழில் பயிற்சி மற்றும் கல்வியில் தேர்ச்சி ஏற்படும். வாக்கு வன்மையால் சம்பாத்தியம் உயரும். வியாபாரத்தில் எதிர்பார்த்த அளவு ஏற்படும் தன வரவால் சந்தோஷம் நிலவும்.

**துலாம்:-** எதிர்பார்த்த தனவரவுகள் வந்து ஏற்றம் தரும். மனதில் சொந்த வீடு வாங்கும் எண்ணம் உருவாகி, தக்க தருணத்தில் நல்ல நண்பர்களின் கடனுதவி கிடைக்கும்.

**விருச்சிகம்:-** உங்கள் திறமை முழுக்கக் காட்டிப் பணி புரிந்தாலும் உயர்அதிகாரிகள் குறையே சொல்வர். விபத்துக்களைத் தவிர்க்க, வேகம் குறைத்து வாகனங்களில் நிதானமாகச் செல்லவும்.

**தனுசு:-** வீட்டில் திருட்டைத் தவிர்க்க விழிப்புடன் இருத்தல் அவசியம். தாயின் உடல்நிலையில் அக்கறை தேவை. காரியத்தடைகள், பணயிழப்புகள் ஏற்படலாம்.

**மகரம்:-** பணவரவுகள் அதிகரிப்பால் மனதில் உற்சாகமும் அதிகரிக்கும். குழந்தைகள்பால் அன்பும், அவர்களின் முன்னேற்றத்தில் ஆர்வமும் ஏற்படும். மனைவியின் உதவிகள் மகிழ்ச்சி அளிக்கும்.

**கும்பம்:-** குடும்பத்தாரிடம் வீண் வாக்குவாதத்தில் ஈடுபடாது அனுசரித்துச் செல்வது அமைதி அளிக்கும். தோல்விகளைக் கண்டு துவண்டுவிடாதீர்கள். தீவிரமாக முயன்றால் வெற்றி நிச்சியம்.

**மீனம்:-** பொருளாதார நிலை போற்றும்படியாய் இருக்கும். வசீகரமான பேச்சால் வருமானம் கூடும். வருமான உயர்வால் வளமும் அதிகரிக்கும். விரும்பிய வாகனத்தில் வெளியூர் செல்வீர்கள்.

# வாக்காளர்களின் பெயர்களை தேர்தல் ஆணையம் எவ்வாறு நீக்க முடியும்..?

## மத்திய அமைச்சர் எல்.முருகன் கேள்வி

**சென்னை, நவ. 04-**

வாக்காளர்களின் பெயர்களை அவர்களின் அனுமதியின்றி தேர்தல் ஆணையம் எவ்வாறு நீக்க முடியும்? என எல்.முருகன் கேள்வி தெரிவித்தார்.

பீகார் மாநிலத்தை தொடர்ந்து நாடு முழுவதும் வாக்காளர் பட்டியல் சிறப்பு தீவிர திருத்த (எஸ்.ஐ.ஆர்.) நடவடிக்கைக்கான ஆயத்த பணிகள் நடைபெற்று வருகின்றன. தமிழ்நாடு உள்பட 12 மாநிலங்கள் மற்றும் யூனியன் பிரதேசங்களில் இரண்டாம் கட்டமாக வாக்காளர் பட்டியல் சிறப்பு தீவிர திருத்த பணிகள் மேற்கொள்ளப்படும் என தேர்தல் ஆணையம் அறிவித்துள்ளது.

இதற்கிடையில், வாக்காளர் பட்டியல் சிறப்பு தீவிர திருத்தம் என்ற பெயரில் தமிழக மக்களின் வாக்குரிமையை பறிக்கும் சதி திட்டம் நடைபெறுவதாக கூறி இதற்கு எதிராக போராடிட, முதல்-அமைச்சர் மு.க.ஸ்டாலின் அனைத்து கட்சி கூட்டத்திற்கு அழைப்பு விடுத்தார். இதன்படி நேற்று முன்தினம் சென்னை தியாகராய நகரில் முதல்-அமைச்சர் தலைமையில் அனைத்து கட்சி கூட்டம் நடைபெற்றது. இதில் தி.மு.க. கூட்டணி கட்சிகள் உள்ளிட்ட பல வேறு கட்சியினர் பங்கேற்ற நிலையில், நாம் தமிழர், த.வெ.க., பா.ம.க. உள்ளிட்ட 20-க்கும் மேற்பட்ட கட்சிகள் பங்கேற்கவில்லை.

இந்த நிலையில், ஊழல் குற்றச்சாட்டுகளை திசைதிருப்ப தி.மு.க. அரசு நாடகம் நடத்துகிறது என மத்திய மந்திரி எல்.முருகன் விமர்சித்துள்ளார். இது குறித்து சென்னையில் செய்தியாளர்களிடம் பேசியபோது அவர் கூறியதாவது;-

சட்டமன்ற தேர்தலுக்கு முன் எஸ்.ஐ.ஆர். நடத்தப்பட வேண்டும். இன்னும் 6 மாதங்கள் உள்ளன. உண்மையான வாக்காளர்கள் விடுபடக்கூடாது. அதே நேரத்தில் போலி வாக்குகள், நகல் வாக்குகள் மற்றும் இறந்தவர்களின் வாக்குகள் வாக்காளர் பட்டியலிலிருந்து நீக்கப்பட வேண்டும். எனவே, எஸ்.ஐ.ஆர்.-ஐ புதுப்பிப்பது காலத்தின் தேவை. எஸ்.ஐ.ஆர். மேற்கொள்ளப்படும்போது தமிழ்நாட்டைச் சேர்ந்த அதிகாரிகள், பூத் நிலை அதிகாரிகள் உட்பட அனைவரும் உடனிருப்பார்கள். எஸ்.ஐ.ஆர்.-ஐ தி.மு.க. எதிர்க்கிறது, அப்படியானால் அது மாநில அரசு ஊழியர்களை நம்பவில்லை என்று அர்த்தமா?

வாக்காளர்களின் பெயர்களை அவர்களின் அனுமதியின்றி தேர்தல் ஆணையம் எவ்வாறு நீக்க முடியும்? எஸ்.ஐ.ஆர். இன்னும் தொடங்காதபோது இது போன்ற குற்றச்சாட்டுகளை எவ்வாறு கூற முடியும்? அனைவரும் வாக்காளர்கள் தான். சிறுபான்மை அல்லது பெரும்பான்மை வாக்காளர்கள் என்று எதுவும் இல்லை. தயவுசெய்து இதை அரசியலாக்க வேண்டாம். ஊழல் குற்றச்சாட்டுகளை எதிர்கொள்ளும் போதெல்லாம் மக்களை தவறாக வழிநடத்துவதும், அவர்களின் கவனத்தை திசை திருப்ப நாடகம் நடத்துவதும் தி.மு.க.வின் வழக்கமாகும். பண மோசடி குற்றச்சாட்டில் இருந்து மக்களை திசை திருப்ப தி.மு.க. விரும்புகிறது. இவ்வாறு எல்.முருகன் தெரிவித்துள்ளார்.

## பணமோசடி வழக்கில்

# அனில் அம்பானியின் சொத்துக்கள் முடக்கம்

**டெல்லி, நவ. 04-**

பணமோசடி வழக்கு தொடர்பாக அனில் அம்பானியின் ரூ. 3 ஆயிரம் கோடி சொத்துக்கள் முடக்கம் செய்து உதவியாளரை அமலாக்கத்துறை அதிகாரிகள் கைது செய்தனர்.

இந்தியாவில் முன்னணி தொழிலதிபர்களில் ஒருவரான முகேஷ் அம்பானியின் சகோதரர் அனில் அம்பானி. இவருக்கு சொந்தமான, 'ராகாஸ்' நிறுவனங்களுக்கு, 'யெஸ்' வங்கி 3,000 கோடி ரூபாய் கடன் வழங்கியது. ஒரு நிறுவனத்தின் பெயரில் பெற்ற கடன், சட்டவிரோதமாக மற்ற நிறுவனங்களுக்கு மாற்றம் செய்துள்ளதாக அனில் அம்பானி மீது குற்றச்சாட்டு எழுந்தது. விசாரணையில், அனில் அம்பானி ரூ.17 ஆயிரம் கோடி பண மோசடி செய்து விட்டதாக இரண்டு வழக்குகளை சி.பி.ஐ., பதிவு செய்தது.

சட்டவிரோத பணப் பரிமாற்ற தடுப்பு சட்டத்தின் கீழ் அமலாக்கத்துறையும் வழக்குப் பதிவு செய்துள்ளது. இவரது வீடு, அலுவலகம் உட்பட 35க்கும் மேற்பட்ட இடங்களில், அமலாக்கத்துறை சோதனை நடத்தியது. அவருக்கு அமலாக்கத்துறை நேரில் ஆஜர் ஆகுமாறு சம்மன் அனுப்பி இருந்தது.

அவர் அமலாக்கத்துறை அலுவலகத்தில் நேரில் ஆஜர் ஆகி விளக்கம் அளித்தார். அதேவேளை, அனில் அம்பானியின் உதவியாளரும், ரிலையன்ஸ் குழுமத்தின் நிர்வாக இயக்குநருமான அசோக் குமாரை அமலாக்கத்துறை அதிகாரிகள் கடந்த சில நாட்களுக்குமுன் கைது செய்தனர்.

இந்நிலையில், பணமோசடி வழக்கில் அனில் அம்பானியின் 3 ஆயிர்ம கோடி சொத்துக்களை அமலாக்கத்துறை முடக்கியுள்ளது.

முடக்கப்பட்ட சொத்துக்களில் மும்பையில் உள்ள 66 ஆண்டுகல் பழமையான அம்பானியின் வீடு , அவரது குழும நிறுவனங்களுக்கு சொந்தமான பிற குடியிருப்பு கட்டிடங்கள், வணிக வளாகங்களும் அடக்கம் என தெரிவிக்கப்பட்டுள்ளது.

# பஹ்ரைன் அமைச்சர் இந்தியா வருகை

**டெல்லி, நவ. 04-**

பஹ்ரைன் வெளியுறவுத்துறை அமைச்சர் அப்துல்திப் பின் ரஷித் அல்சானி இந்தியா வந்துள்ளார்.

இந்தியா - பஹ்ரைன் 5-வது உயர்மட்ட கூட்டு ஆணைய கூட்டம் இந்தியாவில் நடைபெற உள்ளது. இந்த கூட்டத்தில் பங்கேற்க பஹ்ரைன் வெளியுறவுத்துறை அமைச்சர் அப்துல்திப் பின் ரஷித் அல்சானி நேற்று முன்தினம் இந்தியா வந்துள்ளார். டெல்லி வந்த அவரை இந்திய அதிகாரிகள் வரவேற்றனர்.

அப்பதுல்திப் பின் ரஷித் அல்சானி நேற்று மத்திய வெளியுறவுத்துறை அமைச்சர் ஜெய்சங்கரை சந்திக்கிறார். இந்த சந்திப்பின்போது இருநாட்டு உறவு, சர்வதேச அரசியல் சூழ்நிலை, வர்த்தகம் உள்பட பல்வேறு விவகாரங்கள் குறித்து இரு நாட்டு தலைவர்களும் ஆலோசனை நடத்த உள்ளனர்.

# அமெரிக்காவில் மானியம் திடீர் நிறுத்தம்: உணவு கிடைக்காமல் ஏழைகள் அவதி

**வாஷிங்டன், நவ. 04-**

அமெரிக்காவில் மானியம் நிறுத்தப்பட்டதால் உணவு கிடைக்காமல் ஏழைகள் அவதியடைந்து வருகின்றனர்.

அமெரிக்காவில் பெண்கள், குழந்தைகளின் ஊட்டச்சத்து பாதுகாப்பை உறுதி செய்ய கடந்த 1975-ம் ஆண்டு கூட்டாட்சி துணை ஊட்டச்சத்து உதவி திட்டம் தொடங்கப்பட்டது. அதன்படி உணவு வாங்குவதற்காக குறைந்த வருமானம் கொண்ட குடும்பங்களுக்கு உதவித்தொகை வழங்கப்படுகிறது. இந்த திட்டத்தால் சுமார் 4 கோடி பேர் பயன்பெற்று வருகின்றனர்.

ஆனால் இந்த திட்டத்துக்கான மானியத்தை நிறுத்துவதாக அமெரிக்க வேளாண் துறை சமீபத்தில் அறிவித்தது. இதனால் ஏழை மக்கள் பலரும் உணவு கிடைக்காமல் அவதிப்படுகின்றனர். எனவே தன்னார்வ தொண்டு நிறுவனங்கள் சார்பில் ஆங்காங்கே இலவச உணவுகள் வழங்கப்படுகின்றன. அதனை நீண்ட வரிசையில் காத்திருந்து வாங்கி செல்லும் நிலைக்கு ஏழைகள் தள்ளப்பட்டு உள்ளனர்.

# தங்கம் விலை மீண்டும் உயர்வு

**சென்னை, நவ. 04-**

சென்னையில் தங்கம் விலை கடந்த சில நாள்களாக ஏற்ற, இறக்கமாக இருந்து வருகிறது. இந்த நிலையில், வாரத்தின் முதல் நாளான திங்கள்கிழமை தங்கம் விலை சவரனுக்கு ரூ.320 உயர்ந்து விற்பனையானது. அதன்படி, ஆவரண தங்கத்தின் விலை கிராமுக்கு 40 ரூபாய் உயர்ந்து ஒரு கிராம் ரூ.11ஆயிரத்து 350-க்கு விற்பனையானது.

அதேசமயம் சவரனுக்கு 320 ரூபாய் உயர்ந்து ஒரு சவரன் ரூ.90ஆயிரத்து 800-க்கு விற்பனையானது. மேலும் வெள்ளி விலையும் நேற்று உயர்ந்து விற்பனையானது. நேற்றும் கிராமுக்கு 2 ரூபாய் உயர்ந்து ஒரு கிராம் வெள்ளி 168 ரூபாய்க்கும் கிலோவுக்கு இரண்டாயிரம் ரூபாய் உயர்ந்து பார் வெள்ளி ஒரு லட்சத்து 68 ஆயிரம் ரூபாய்க்கும் விற்பனையானது.

**மரம் வளர்ப்போம் மழை பெறுவோம்**

## தெலுங்கானா விபத்தில் 24 பேர் பலி:
# உயிரிழந்தவர்கள் குடும்பத்தினருக்கு பிரதமர் மோடி நிவாரணம் அறிவிப்பு

டெல்லி, நவ. 04-

தெலுங்கானா மாநிலத்தில் நடந்த விபத்தில் உயிரிழந்தவர்கள் குடும்பத்தினருக்கு தலா ரூ.2 லட்சம் நிவாரணம் அளிக்கப்படும் என்று பிரதமர் மோடி தெரிவித்தார்.



தெலுங்கானா மாநிலம் ரங்காரெட்டி மாவட்டம் கானாப்பூர் கேட் பகுதியில் ஜல்லி கற்கள் ஏற்றி வந்த லாரி அரசு பஸ் மீது மோதியது. இந்த கோர விபத்தில் 24 பேர் உயிரிழந்தனர். மேலும், 10 பேர் படுகாயமடைந்தனர். தகவலறிந்து விரைந்து சென்ற மீட்புக்குழுவினர் படுகாயமடைந்தவர்களை மீட்டு அருகில் உள்ள மருத்துவமனையில் சிகிச்சைக்கு அனுமதித்துள்ளனர்.

இந்நிலையில், தெலுங்கானா விபத்தில் உயிரிழந்தவர்களின் குடும்பத்தினருக்கு பிரதமர் மோடி இரங்கல் தெரிவித்துள்ளார். இது தொடர்பாக அவர் வெளியிட்ட அறிக்கையில், தெலுங்கானா மாவட்டம் ரங்காரெட்டி மாவட்டத்தில் ஏற்பட்ட விபத்து சம்பவத்தால் மிகுந்த மனவேதனை அடைந்தேன். இந்த கடினமான சூழ்நிலையில் உறவினர்களை இழந்து வாடு குடும்பத்தினருடன் நான் துணை நிற்கிறேன். காயமடைந்தவர்கள் விரைவில் குணமடைய பிரார்த்திக்கிறேன். உயிரிழந்துள்ளவர்களின் குடும்பத்தினருக்கு தலா ரூ. 20 லட்சமும், காயமடைந்தவர்களின் குடும்பத்தினருக்கு தலா ரூ. 50 ஆயிரமும் நிவாரணம் வழங்கப்படும். என தெரிவிக்கப்பட்டுள்ளது.

## கோவையில் 3 பேர் கொண்ட கும்பலால்
# மாணவி பாலியல் வன்கொடுமை: எடப்பாடி பழனிசாமி கண்டனம்

சென்னை, நவ 04-

கோவையில் மாணவி பாலியல் வன்கொடுமை செய்யப்பட்ட சம்பவம் அதிர்ச்சியை ஏற்படுத்தியுள்ளது என்றும், பெண்கள் பாதுகாப்பை தி.மு.க. அரசு குழிதோண்டி புதைத்துவிட்டதாகவும் எடப்பாடி பழனிசாமி குற்றஞ்சாட்டியுள்ளார்.



கோவை விமான நிலையம் அருகே நேற்று முன்தினம் இரவு ஆண் நண்பருடன் பேசிக்கொண்டிருந்த கல்லூரி மாணவி 3 பேர் கொண்ட கும்பலால் கடத்தி கூட்டு பாலியல் வன்கொடுமை செய்யப்பட்டார். இந்த சம்பவம் தமிழகம் முழுவதும் அதிர்வலைகளை ஏற்படுத்தியுள்ள நிலையில் மாணவியை கூட்டு பாலியல் வன்கொடுமை செய்துவிட்டு தப்பியோடிய குற்றவாளிகளை போலீசார் தேடி வருகின்றனர்.

இந்நிலையில், பெண்கள் பாதுகாப்பை தி.மு.க. அரசு குழிதோண்டி புதைத்துவிட்டதாக அ.தி.மு.க. பொதுச்செயலாளர் எடப்பாடி பழனிசாமி விமர்சனம் செய்துள்ளார். இது தொடர்பாக அவர் வெளியிட்ட எக்ஸ் பதிவில், 2.11.2025 அன்று இரவில், கோவை விமான நிலையத்தின் பின்புறம் நண்பர்களுடன் பேசிக் கொண்டிருந்த கல்லூரி மாணவியை, மூன்று இளைஞர்கள் தாக்கி கடத்திச் சென்று பாலியல் வன்கொடுமை செய்த நிலையில், வன்கொடுமைக்குப் பிறகு பாதிப்புக்குள்ளான மாணவியை தனியார் கல்லூரி பின்புறம் தூக்கி எறிந்துவிட்டு தப்பிச் சென்றுள்ளனர் என்றும், பாதிப்புக்குள்ளான அம்மாணவி, 3.11.2025 அன்று அதிகாலையில் காவல்துறையினரால் மீட்கப்பட்டு, தனியார் மருத்துவமனையில் மருத்துவ சிகிச்சை பெற்று வருவதாக வரும் செய்திகள் தமிழகத்தில் காவல்துறை என்று ஒன்று உள்ளதா? என்ற கேள்வியை அனைவரிடமும் எழுப்பியுள்ளது.

பெண்கள் பாதுகாப்பை குழிதோண்டி புதைத்துவிட்ட ஸ்டாலின் மாடல் தி.மு.க. அரசுக்கு எனது கடும் கண்டனம். அஇஅதி.மு.க. ஆட்சியில் இந்தியாவிலேயே பெண்கள் பாதுகாப்பாக வாழத் தகுந்த மாநிலங்களில் முதன்மை மாநிலமாக தமிழ்நாடு விளங்கியது. குறிப்பாக,

எனது தலைமையிலான ஆட்சியில், இந்தியாவிலேயே பெண்கள் பாதுகாப்பாக வாழத்தகுந்த மாநிலங்களில் தமிழ்நாடு முதலிடமும், பெரு நகரங்களில் சென்னை முதலிடமும், நகரங்களில் கோயம்புத்தூரும் தொடர்ந்து இடம் பெற்று வந்தன. அம்மா அரசின் ஆட்சியில் பெண்கள் பாதுகாப்பு 100 சதவீதம் உறுதி செய்யப்பட்டது.

விடியா தி.மு.க. அரசு பெண்களை பாதுகாக்கும் என்று நம்ப வேண்டாம் என்று சில மாதங்களுக்கு முன்பு அஇஅதி.மு.க. சார்பில் கண்களில் பெப்பர் ஸ்பிரே அடிக்கும் கருவி, டார்ச், உள்ளிட்ட பாதுகாப்பு பொருட்கள் அடங்கிய பெட்டகத்தை பெண்களுக்கு வழங்கும் நிகழ்ச்சியை நான் சென்னையில் தலைமைக் கழகத்தில் துவக்கி வைத்தேன். தொடர்ந்து கழக நிர்வாகிகள் தமிழகம் முழுவதும் வழங்கினர். விடியா தி.மு.க. ஆட்சியில், தமிழகத்தில் பெண்கள் தங்களுக்கு தாங்களே பாதுகாப்பை உருவாக்கிக்கொள்ள வேண்டும்.

கோவை விமான நிலையம் பின்புறம் கல்லூரி மாணவிக்கு பாலியல் வன்கொடுமை செய்தவர்கள் யாராக இருந்தாலும், அவர்களை உடனடியாக கண்டுபிடித்து, சட்டத்தின் பிடியில் நிறுத்தி, கடும் தண்டனை வாங்கித்தர காவல்துறைக்கு பொறுப்பு வகிக்கும் முதல்வர் மு.க.ஸ்டாலினை வலியுறுத்துகிறேன். இவ்வாறு தெரிவிக்கப்பட்டுள்ளது.

## இலங்கை கடற்படையால் கைது செய்யப்பட்ட
# தமிழக மீனவர்கள் 35 பேரை விடுவிக்க த.வெ.க. தலைவர் விஜய் வலியுறுத்தல்

சென்னை, நவ. 04-

எல்லை தாண்டி மீன்பிடித்தாக கூறி தமிழக மீனவர்கள் 35 பேர் கைது செய்யப்பட்டுள்ள நிலையில்,அவர்களை உடனே விடுவிக்க நடவடிக்கை எடுக்க வேண்டும் என்று த.வெ.க. தலைவர் விஜய் வலியுறுத்தியுள்ளார்.



தமிழகம் மற்றும் புதுச்சேரி துறைமுகங்களில் இருந்து மீன்பிடிக்க சென்ற மீனவர்களை ரோந்து பணியில் ஈடுபட்டு இருந்த இலங்கை கடற்படையை சேர்ந்தவர்கள் தடுத்து நிறுத்தினர். எல்லை தாண்டி மீன் பிடித்தனர் என கூறி மீனவர்கள் 35 பேரை கைது செய்தனர்

அவர்களிடம் இருந்து 3 விசைப்படகுகள், ஒரு நாட்டுப்படகு ஆகியவற்றையும் கடற்படையினர் பறிமுதல் செய்தனர். நாட்டுப்படகில் இருந்த 4 மீனவர்கள், 3 விசைப்படகுகளில் இருந்த 31 பேர் என மொத்தம் 35 மீனவர்கள் கைது செய்யப்பட்டதுடன், அவர்களை காங்கேசன்துறை கடற்படை முகாமுக்கு இலங்கை கடற்படையினர் அழைத்து சென்றுள்ளனர். அவர்கள் தமிழகத்தின் நாகை மாவட்டம் மற்றும் புதுச்சேரியின் காரைக்கால் பகுதியை சேர்ந்தவர்களாக இருக்கலாம். இதன்பின்னர் அவர்கள் நீதிமன்றத்தில் நேற்று ஆஜர்படுத்தப்பட உள்ளனர்.

இந்நிலையில், இலங்கை கடற்படையால் கைது செய்யப்பட்டுள்ள 35 மீனவச் சகோதரர்களை உடனடியாக விடுவிக்க வேண்டும் என்று தமிழக வெற்றிக் கழகத்தின் தலைவர் விஜய் அறிக்கை ஒன்றினை வெளியிட்டுள்ளார். அதில், "தமிழகம் மற்றும் புதுச்சேரியைச் சேர்ந்த நம் மீனவச் சகோதரர்கள் 35 பேர், இலங்கைக் கடற்படையால் கைது செய்யப்பட்டுள்ளதாகவும் அவர்களுக்குச் சொந்தமான மூன்று விசைப்படகுகள் மற்றும் ஒரு நாட்டுப் படகு பறிமுதல் செய்யப்பட்டுள்ளதாகவும் செய்திகள் வந்திருப்பது மன வேதனையை அளிக்கிறது. கைது செய்யப்பட்டுள்ள நம் மீனவச் சகோதரர்கள் 35 பேரையும் உடனடியாக விடுவிக்க வேண்டும்.

அவர்களது படகுகளையும் மீட்டுத்தர வேண்டும். மற்ற மாநில மீனவர்கள் மீது காட்டும் அக்கறையைப் போலவே எங்கள் மீனவர்கள் மீதும் காட்டி, இதற்கான நடவடிக்கைகளை ஒன்றிய அரசு தாமதமின்றி உடனடியாக எடுக்க வேண்டும். ஒன்றிய அரசுக்கு உரிய அழுத்தத்தைத் தமிழக அரசும் தாமதிக்காமல், உண்மையாகத் தர வேண்டும். இனி இதுபோல நடக்காமல் இருக்க, இதற்கு ஒரு நிரந்தரத் தீர்வை ஒன்றிய அரசும் தமிழக அரசும் காண வேண்டும் எனத் தமிழக வெற்றிக் கழகத்தின் சார்பாக அழுத்தமாக வலியுறுத்துகிறேன் என்று தெரிவிக்கப்பட்டுள்ளது.

## கரூர் விவகாரம் தொடர்பாக
# சி.பி.ஐ. அதிகாரிகள் சம்மன் கொடுக்க வந்தனர்: த.வெ.க.

சென்னை, நவ. 04-

கரூர் விவகாரம் தொடர்பாக சி.சி.டி.வி. உள்ளிட்ட வீடியோ ஆதாரங்களை ஒப்படைக்குமாறு கேட்டுள்ளனர் என த.வெ.க. நிர்வாகி நிர்மல் குமார் கூறினார்.

கரூரில் த.வெ.க. தலைவர் விஜய் கடந்த செப்டம்பர் மாதம் 27-ம் தேதி அன்று மேற்கொண்ட பிரசார கூட்ட நெரிசலில் சிக்கி 41 பேர் பலியான வழக்கை சி.பி.ஐ. அதிகாரிகள் விசாரித்து வருகிறார்கள். சம்பவம் நடைபெற்ற கரூர் வேலுச்சாமிபுரம் பகுதி சி.பி.ஐ. அதிகாரிகளின் விசாரணை வளையத்தில் வைக்கப்பட்டு உள்ளது.

இந்தநிலையில் சென்னை த.வெ.க. அலுவலகத்தில் சுமார் ஒரு மணி நேரம் நடைபெற்ற சி.பி.ஐ. அதிகாரிகளின் விசாரணை நிறைவு பெற்றது. இதனை தொடர்ந்து த.வெ.க. நிர்வாகி நிர்மல் குமார் செய்தியாளர் சந்திப்பில் கூறியதாவது:-

கரூர் விவகாரத்தில் சி.பி.ஐ. அதிகாரிகள் சம்மன் கொடுக்க த.வெ.க. அலுவலகம் வந்தனர். போட்டோ, சி.சி.டி.வி. ஆதாரங்கள் உள்ளிட்டவற்றை ஒப்படைக்கும்படி சி.பி.ஐ. அதிகாரிகள் கேட்டனர். பரப்புரை வாகனத்தில் இருந்த சி.சி.டி.வி. ஆதாரங்கள் உள்ளிட்டவற்றை 3 நாட்களில் தருவோம். எங்களிடம் சி.பி.ஐ. அதிகாரிகள் விசாரணை செய்யவில்லை. சம்மன் கொடுத்தால் விசாரணைக்கு ஆஜராவோம் என்றார்.

## ராஜஸ்தானில் சோகம்:
# அடுத்தடுத்து வாகனங்கள் மீது லாரி மோதி விபத்து: 12 பேர் பலி

ஜெய்ப்பூர், நவ. 04-

ராஜஸ்தானில் அடுத்தடுத்து கார் - வாகனங்களின் மீது லாரி மோதிய விபத்தில் 12 பேர் பலியான சம்பவம் அங்கு சோகத்தை ஏற்படுதியுள்ளது.

ராஜஸ்தான் மாநிலம் ஜெய்ப்பூர் அருகே ஹர்மதா பகுதியில் நேற்று (திங்கள்கிழமை) பிற்பகல் சாலையில் சென்று கொண்டிருந்த லாரி, கட்டுப்பாட்டை மீறிச் சென்றதில் கார் உள்ளிட்ட பல வாகனங்கள் மீது மோதியது. தகவலறிந்த தீயணைப்புப் படையினர், காவல்துறையினர் சம்பவ இடத்திற்கு விரைந்து மீட்புப்பணியில் ஈடுபட்டுள்ளனர்.

இந்த விபத்தில் இதுவரை 12 பேர் உயிரிழந்துள்ளதாக ஜெய்ப்பூர் காவல்துறை தகவல் தெரிவித்துள்ளது. மேலும் காயமடைந்த சிலர் மருத்துவமனையில் தீவிர சிகிச்சைப் பிரிவில் அனுமதிக்கப்பட்டுள்ளனர். லாரி சுமார் 300 மீட்டர் கட்டுப்பாட்டை இழந்து சென்றதாகவும் 15க்கும் மேற்பட்ட வாகனங்கள் மீது மோதியதாகவும் தகவல் தெரிவிக்கப்பட்டுள்ளது. இதுகுறித்து காவல்துறையினர் விசாரணை மேற்கொண்டு வருகின்றனர்.

## த.வெ.க. தலைவர்
# விஜய் பிரசார வாகனத்தை ஆய்வு செய்ய சி.பி.ஐ. அதிகாரிகள் திட்டம்

சென்னை, நவ. 04-

த.வெ.க. தலைவர் விஜய் பிரசார வாகனத்தை சி.பி.ஐ. அதிகாரிகள் ஆய்வு செய்ய திட்டமிட்டுள்ளனர்.

கரூரில் த.வெ.க. தலைவர் விஜய் கடந்த செப்டம்பர் மாதம் 27-ந் தேதி அன்று மேற்கொண்ட பிரசார கூட்ட நெரிசலில் சிக்கி 41 பேர் பலியான வழக்கை சி.பி.ஐ. அதிகாரிகள் விசாரித்து வருகிறார்கள். சம்பவம் நடைபெற்ற கரூர் வேலுச்சாமிபுரம் பகுதி சி.பி.ஐ. அதிகாரிகளின் விசாரணை வளையத்தில் வைக்கப்பட்டு உள்ளது.

கரூரில் சி.பி.ஐ. அதிகாரிகள் முகாமிட்டு விசாரணை நடத்தி வரும் வேளையில் சி.பி.ஐ. அதிகாரிகளின் ஒரு குழு சென்னை பனையூரில் உள்ள த.வெ.க. அலுவலகத்தில் நிறுத்திவைக்கப்பட்டிருக்கும் விஜய் பிரசார வாகனத்தை விரைவில் ஆய்வு செய்து, அதில் உள்ள கண்காணிப்பு கேமராவில் பதிவான காட்சிகளை கைப்பற்ற திட்டமிட்டுள்ளதாக தகவல்கள் வெளியாகி உள்ளது.

இந்த வழக்கில் பொதுச்செயலாளர் புஸ்சி ஆனந்த், இணை செயலாளர் நிர்மல்குமார், கரூர் மாவட்ட செயலாளர் மதியழகன் ஆகியோர் பெயர்களை சி.பி.ஐ. அதிகாரிகள் சேர்த்துள்ளனர். விஜய்யின் பிரசார வாகன ஆய்வின்போது, த.வெ.க. அலுவலகத்தில் வைத்து புஸ்சி ஆனந்த், நிர்மல்குமாரிடம் விசாரணை நடத்துவதற்கும் சி.பி.ஐ. அதிகாரிகள் திட்டமிட்டுள்ளதாக கூறப்படுகிறது.

# ஒரே மாதத்தில் யு.பி.ஐ. பரிவர்த்தனையில் ரூ. 27.28 லட்சம் கோடி பண பரிமாற்றம்

புதுடெல்லி, நவ. 04-




ஒரே மாதத்தில் யு.பி.ஐ. பரிவர்த்தனையில் ரூ.27.28 லட்சம் கோடி பண பரிமாற்றம் செய்யப்பட்டு புதிய சாதனை படைக்கப்பட்டுள்ளது.

யு.பி.ஐ. பயன்பாடு மக்களிடயே அதிகரித்து வருகிறது. சிறிய பெட்டிக்கடை முதல் ஷாப்பிங் மால் என அனைத்து இடங்களிலும் யுபிஐ மூலமாக தற்போது பணபரிமாற்றம் நடைபெறுகிறது. ஒரு 'கிளிக்' மூலமாகவே பணம் அனுப்பவும் பெறவும் உதவுவதால், இது இந்தியாவில் மிகவும் பிரபலமான பண பரிவர்த்தனை சேவையாக வளர்ந்துள்ளது.

இந்தநிலையில் கடந்த அக்டோபர் மாதத்தில் நாட்டில் மேற்கொள்ளப்பட்ட யு.பி.ஐ. பரிவர்த்தனைகள் குறித்து தேசிய பணப்பரிவர்த்தனை கழகம் தகவல் தெரிவித்துள்ளது. அதன்படி கடந்த மாதத்தில் யு.பி.ஐ. மூலமாக மொத்தம் 2 ஆயிரத்து 70 கோடி பரிவர்த்தனைகள் மேற்கொள்ளப்பட்டுள்ளது. இது அதற்கு முந்தைய செப்டம்பர் கணக்கை காட்டிலும் 3.6 சதவீதம் அதிகமாகும்.

இந்த பரிவர்த்தனைகள் மூலமாக ரூ.27.28 லட்சம் கோடி பண பரிமாற்றம் நடந்தது. இது இதுவரை இல்லாத சாதனை ஆகும். இது அதற்கு முந்தைய மாதத்தை காட்டிலும் 9.5 சதவீதம் அதிகமாகும். தினமும் சராசரியாக 66.8 கோடி பரிவர்த்தனைகள் யு.பி.ஐ. மூலமாக மேற்கொள்ளப் பட்டுள்ளன. ஜி.எஸ்.டி. வரியில் சீர்திருத்தம் மற்றும் பண்டிகை கால எதிரொலி காரணமாக இந்த நிலை ஏற்பட்டதாக விளக்கம் தெரிவிக்கப்பட்டுள்ளது.

# விடுபட்டவர்களுக்கு மகளிர் உரிமைத்தொகை எப்போது..?
## துணை முதல்வர் உதயநிதி தகவல்

சென்னை, நவ. 04-

விடுபட்டவர்களுக்கு வரும் டிசம்பர் மாதம் முதல் மகளிர் உரிமைத்தொகை வழங்கப்படும் என்று துணை முதல்வர் உதயநிதி ஸ்டாலின் தெரிவித்தார்.



ராணிப்பேட்டை மாவட்டத்தில் 72 ஆயிரம் பயனாளிகளுக்கு ரூ.296.46 கோடி மதிப்பிலான நலத்திட்ட உதவிகளை துணை முதல்வர் உதயநிதி திங்கள்கிழமை வழங்கினார். அப்போது பேசிய அவர், தமிழகத்தில் ஒரு கோடியே 20 லட்சம் மகளிர் கலைஞர் மகளிர் உரிமைத்தொகை திட்டத்தில் பயனடைந்துள்ளனர். தமிழகத்தில் கோடியே 20 லட்சம் மகளிருக்கு கலைஞர் மகளிர் உரிமைத் தொகை வழங்கப்பட்டு வருகிறது.

விடுபட்டவர்களுக்கு வரும் டிசம்பர் மாதம் முதல் உரிமைத் தொகை வழங்கப்படும் என்று தெரிவித்தார். முன்னதாக ராணிப்பேட்டை மாவட்டத்திற்கு வருகை தந்த உதயநிதிக்கு மாவட்டம் நிர்வாகம் சார்பிலும், மாவட்ட திமுக சார்பிலும் தமிழக கைத்தறி மற்றும் துணி நூல் துறை அமைச்சர் ஆர்.காந்தி, மாவட்ட ஆட்சியர் ஜெ.யு.சந்திரகலா ஆகியோர் தலைமையில் சிறப்பான வரவேற்பு அளிக்கப்பட்டது.

தொடர்ந்து ராணிப்பேட்டை நகராட்சி வளாகத்தில் காமராஜர் தங்கிய நினைவு இல்லத்தை திறந்து வைத்து பார்வையிட்டார். இதையடுத்து ராணிப்பேட்டை ஜி.கே. உலக பள்ளியில் இறகு பந்து உள்விளையாட்டரங்கத்தை துணை முதல்வர் உதயநிதி ஸ்டாலின் திறந்து வைத்தார். தொடர்ந்து ராணிப்பேட்டை மாவட்ட அரசு நலத்திட்ட உதவிகள் வழங்கும் விழாவில் 72880 பயனாளிகளுக்கு ரூ.296.46 கோடி மதிப்பிலான பல்வேறு துறை சார்ந்த நலத்திட்ட உதவிகளை வழங்கியும், ரூ.68.7 கோடி மதிப்பிலான புதிய திட்டப்பணிகளுக்கு அடிக்கல் நாட்டியும், முடிவுற்ற திட்டப் பணிகளை துவக்கி வைத்து சிறப்புரை ஆற்றினார்.

இந்த விழாவில் கைத்தறி துறை அமைச்சர் ஆர். காந்தி, அரக்கோணம் நாடாளுமன்ற உறுப்பினர் எஸ். ஜெகத்ரட்சகன், மாவட்ட ஆட்சியர் சந்திரகலா, மாவட்ட காவல் கண்காணிப்பாளர் அய்மன் ஜமால், ஆற்காடு எம்எல்ஏக்கள் ஜெ. எல். ஈஸ்வரப்பன்,ஏ.எம். முனிரத்தினம் மற்றும் அனைத்து துறை சார்ந்த அலுவலர்கள், பொதுமக்கள், பயனாளிகள், கட்சி நிர்வாகிகள் உள்ளிட்டோர் திரளாக கலந்து கொண்டனர்.

## பீகார் மாநில முதல்வராக
# நவ.18-ல் பதவியேற்பேன்: தேஜஸ்வி யாதவ் நம்பிக்கை

பாட்னா, நவ. 04-

பீகாரில் 'இன்டியா' கூட்டணி வெற்றி பெற்று ஆட்சி அமைப்பது உறுதி என்றும், நவம்பர் 18-ஆம் தேதி பிகார் முதல்வராகப் பதவியேற்பேன் என்று ராஷ்ட்ரீய ஜனதா தளம் (ஆர்.ஜே.டி.) தலைவர் தேஜஸ்வி யாதவ் தெரிவித்தார்.



ஆர்.ஜே.டி., காங்கிரஸ், இடதுசாரிகள் அங்கம் வகிக்கும் கூட்டணியின் முதல்வர் வேட்பாளராக தேஜஸ்வி முன்னிறுத்தப்பட்டுள்ளார். பாட்னாவில் செய்தியாளர்களைச் சந்தித்த அவர் கூறியதாவது: முதல்வர் நிதீஷ் குமாரின் ஐக்கிய ஜனதா தளம் வேட்பாளர் கொலை வழக்கில் கைது செய்யப்பட்டுள்ளார். தேர்தல் நேரத்திலும் மிகவும் மோசமான சம்பவங்கள் இந்த ஆட்சியில் அரங்கேறி வருகின்றன.

பீகாருக்கு பிரசாரம் மேற்கொள்ள வந்துள்ள பிரதமர் மோடி இதைக் கருத்தில் கொண்டு பதிலளிக்க வேண்டும். பீகாரில் குற்றச் சம்பவங்கள் நிகழாத நாளே இல்லை என்பதே இங்குள்ள நிலவரம். எங்கள் கூட்டணி ஆட்சி அமைத்ததும் இந்த நிலை மாறும். நவம்பர் 14-ஆம் தேதி தேர்தல் முடிவுகள் வெளியாக இருக்கிறது.

அதில் எங்கள் கூட்டணி மிகப்பெரிய வெற்றியைப் பெறும். நவம்பர் 18-ஆம் தேதி பிகார் முதல்வராகப் பதவியேற்பேன். நவம்பர் 26 முதல் ஜனவரி 26 முதல் பீகாரில் குற்றச் செயல்களில் ஈடுபடுவோர், சட்டம்-ஒழுங்கை மீறுபவர்களுக்கு எதிராக தீவிர நடவடிக்கை எடுக்கப்படும். குற்றச் செயல்களில் ஈடுபட்டவர்கள் அனைவரும் ஜாதி, மத வேறுபாடு இன்றி சிறையில் அடைக்கப் படுவார்கள் என்றார்.

பா.ஜ.க. பதில்: இது தொடர்பாக முன்னாள் மத்திய அமைச்சரும், பாஜக தலைவருமா ராஜீவ் பிரதாப் ரூடி கூறுகையில், 'தேஜஸ்வி செய்தியாளர்களிடம் ஒரு தகவலைக் கூறியுள்ளார். ஆனால், உண்மையில், தேர்தல் முடிந்த உடன் வெளிநாட்டுக்குச் சென்று பொழுதைக் கழிப்பதற்காக அவர் விமான டிக்கெட் முன்பதிவு செய்துள்ளதாக எனக்குத் தகவல் கிடைத்துள்ளது.

பிகார் மக்கள் முதல்வர் நிதீஷ் குமார் மீது முழு நம்பிக்கை வைத்துள்ளனர். எனவேதான் தேஜஸ்வி தேர்தலுக்குப் பிறகு வெளிநாட்டுக்குச் சென்று ஓய்வெடுக்க விமான டிக்கெட் முன்பதிவு செய்துள்ளார்' என்றார்.

# பீகாரில் வாக்காளர் பட்டியல் திருத்தம் இந்திய ஜனநாயகத்தின் ஒரு மைல்கல்
## தலைமை தேர்தல் ஆணையர் பெருமிதம்

பாட்னா, நவ. 04-

பீகாரில் வாக்காளர் பட்டியல் திருத்த இயக்கம் சுத்திகரிப்பு பயிற்சி என்றும், இந்திய ஜனநாயகத்தின் ஒரு மைல்கல் என்றும் தலைமைத் தேர்தல் ஆணையர் ஞானேஷ் குமார் கூறியுள்ளார்.



ஐ.ஐ.டி. கான்பூரில் நிறுவப்பட்ட நாளில் நடைபெற்ற கூட்டத்தில் ஞானேஷ்குமார் உரையாற்றினார். உலகின் மிகப்பெரிய வாக்காளர் பட்டியல் சுத்திகரிப்பு பயற்சி பீகாரில் மட்டும் நடத்தப்பட்டது. மேலும் இந்த இயக்கம் 12 மாநிலங்களில் 51 கோடி வாக்காளர்களுக்கு நீட்டிக்கப்பட்டவுடன், அது தேர்தல் ஆணையத்திற்கும் நாட்டிற்கும் ஒரு வரலாற்றுச் சாதனையாக இருக்கும்.

இந்த செயல்முறை நாடு முழுவதும் நிறைவடையும் போது, மக்கள் தேர்தல் ஆணையத்தைப் பற்றி மட்டுமல்ல, இந்தியாவின் ஜனநாயக உரிமையைப் பற்றியும் பெருமைப்படுவார்கள். தேர்தல் ஆணையம் சமீபத்தில் சிறப்புத் தீவிர திருத்தம் (SIR) நவம்பர் முதல் பிப்ரவரி வரை 12 மாநிலங்கள் மற்றும் யூனியன் பிரதேசங்களில் - கேரளம், தமிழ்நாடு, புதுச்சேரி மற்றும் மேற்கு வங்கத்திலும் நடத்தப்படும் என்று அறிவித்தது. இவை அனைத்தும் 2026 இல் சட்டப்பேரவைத் தேர்தல்களை நடத்தத் திட்டமிடப்பட்டுள்ளன.

ஐ.ஐ.டி.-கான்பூரின் முன்னாள் மாணவன் நான். ஐஐடியில் கழித்த நான்கு ஆண்டுகளும் என் வாழ்க்கையின் மிகவும் துடிப்பான, மறக்க முடியாத ஆண்டுகள் என்றார். பீகார் தேர்தல் வெளிப்படைத்தன்மை, செயல்திறன் மற்றும் எளிமை ஆகியவற்றில் புதிய தரங்களை அமைக்கும் என்றும், மற்ற ஜனநாயக நாடுகளுக்கு ஒரு முன்மாதிரியாக மாறும் என்றும் அவர் நம்பிக்கை தெரிவித்தார். 243 உறுப்பினர்களைக் கொண்ட பீகார் சட்டமன்றம் நவம்பர் 6 மற்றும் நவம்பர் 11 ஆகிய தேதிகளில் இரண்டு கட்டங்களாகத் தேர்தல் நடைபெறுகிறது. வாக்கு எண்ணிக்கை நவம்பர் 14 அன்று நடைபெறும்.

தினபூமியில் விளம்பரம் செய்து பயன் பெறுங்கள்

### தலைவர்கள் சொல்வதை படிங்க....




துப்பாக்கி முனையில் ஒருவரை முதல்வர் வேட்பாளராக்க சொல்லி யாரும் மிரட்ட முடியாது. காங்கிரஸ் இதை ஒருபோதும் செய்ததில்லை. மோடி இந்த நாட்டின் பிரதமர்; அவர் இதுபோன்ற விஷயங்களைச் சொல்வது நகைப்புக்குரியது. இது அவரது நிலையைக் காட்டுகிறது.

- கார்கே



முதல்வருக்கு எஸ்.ஐ.ஆர் என்றாலே அலர்ஜிதான்; மக்களை திசைதிருப்பவே எஸ்.ஐ.ஆருக்கு எதிராக தி.மு.க. சார்பில் அனைத்துக்கட்சி கூட்டம் நடத்தப்பட்டது. அ.தி.மு.க.வைப் பொறுத்தவரை கண்மூடித்தனமாக ஒரு திட்டத்தை ஆதரிக்க மாட்டோம். தேர்தல் ஆணையத்தின் வாக்காளர் பட்டியல் சிறப்பு திருத்தம் நல்ல விஷயம்.

- ஜெயக்குமார்



நமது அரசியலமைப்பு அளித்த வாக்களிக்கும் உரிமையை பறிக்கும் வகையில் தேசிய ஜனநாயகக் கூட்டணி செயல்பட்டு வருகிறது. பீகாரில் 65 லட்சத்துக்கும் மேற்பட்டோரின் வாக்குகள் பறிக்கப்பட்டுள்ளன. வாக்குரிமை போய்விட்டால் பிறகு எதுவும் இருக்காது. வாக்கு திருட்டு என்பது மக்களுக்கு எதிரான பெரிய சதி.

- பிரியங்கா



தொடர்ந்து இலங்கை கடற்படையினரால் தமிழக மீனவர்கள் கைது செய்து வருகின்ற சம்பவங்கள் கடலுக்கு மீன் பிடிக்க செல்லும் அனைத்து மீனவர்கள் மத்தியில் அச்சத்தை ஏற்படுத்தி உள்ளது. தற்போது கைது செய்யப்பட்ட 35 மீனவர்களை உடனடியாக விடுவிக்கும் முயற்சியை மத்திய, மாநில அரசுகள் உடனே எடுக்கப்பட வேண்டும்.

- ராமதாஸ்

## சென்னை மாதவரம் மண்டலத்தில் ரூ.1.49 கோடி மதிப்பீட்டில் அமைக்கப்பட்டுள்ள புதிய விளையாட்டு மைதானம்: மேயர் ஆர்.பிரியா திறந்து வைத்தார்



**சென்னை,நவ.04**

சென்னை மாதவரம் மண்டலத்தில் ரூ.1.49 கோடி மதிப்பீட்டில் அமைக்கப்பட்டுள்ள புதிய விளையாட்டு மைதானத்தைத் திறந்து மேயர் ஆர்.பிரியா வைத்தார்.மேலும், ரெட்டேரி, புழல் உபரிநீர் கால்வாய் மற்றும் மணலி ஏரி ஆகியவற்றில் மேற்கொள்ளப்பட்டுள்ள மழைக்கால முன்னெச்சரிக்கை நடவடிக்கைகள் குறித்து பார்வையிட்டு ஆய்வு மேற்கொண்டார்.

மேயர் ஆர். பிரியா மாதவரம் மண்டலம், வார்டு-28க்குட்பட்ட கொல்கத்தா ஷாப் தெருவில் மூலதன நிதியின் கீழ், ரூ.1.49 கோடி மதிப்பீட்டில் புதிதாக அமைக்கப்பட்டுள்ள விளையாட்டு மைதானத்தை மக்கள் பயன்பாட்டிற்குத் திறந்து வைத்து, கால்பந்து வீரர்களுடன் கலந்துரையாடி, அவர்களுக்கு விளையாட்டு உபகரணங்களை வழங்கினார்.

35,241 சதுர அடி பரப்பளவில் அமைக்கப்பட்டுள்ள இந்த விளையாட்டு மைதானத்தில் கால்பந்து, கைப்பந்து, பூப்பந்து, கபடி மற்றும் குழந்தைகள் விளையாட்டு மைதானங்கள், திறந்தவெளி உடற்பயிற்சிக் கூடம், கண்காணிப்பு கேமரா ஆகியவை அமைக்கப்பட்டுள்ளன. இதன் மூலம் முத்துமாரியம்மன் கோவில் தெரு, உடையார் தோட்டம், பாண்டியன் தெரு, திருவள்ளுவர் தெரு ஆகிய பகுதிகளைச் சார்ந்த மக்கள் பயனடைவார்கள்.

இதனைத் தொடர்ந்து, மாண்புமிகு மேயர் அவர்கள் எம்.ஜி.ஆர். நகரில் உள்ள ரெட்டேரியில் அமைக்கப்பட்டுள்ள தடுப்புச்சுவர், மதகு பராமரிப்புப் பணி, ஏரியிலிருந்து வெளியேறும் நீர் தடையின்றி செல்வதற்கு ஏற்படுத்தப்பட்டுள்ள கட்டமைப்புகள் குறித்துப் பார்வையிட்டு ஆய்வு மேற்கொண்டார். ஏரியின் உபரிநீர் வெளியேறும் கால்வாய் பகுதிகளில் கூடுதலான பாதுகாப்பு நடவடிக்கைகள், முன்னெச்சரிக்கை நடவடிக்கைகள் மேற்கொள்ள அலுவலர்களுக்கு அறிவுறுத்தினார். பின்னர், வார்டு-23க்குட்பட்ட மாதவரம் ரெட்ஹில்ஸ் பிரதான சாலையில் புழல் உபரிநீர் செல்லும் கால்வாயில் இணைக்கப்பட்டுள்ள வி.எஸ். மணி நகரிலிருந்து எம்.ஆர்.எச். சாலை வரை புதிதாக கட்டப்பட்டுள்ள மழைநீர் வடிகால் கட்டமைப்புகளையும், மோட்டார் மூலம் மழைநீர் வெளியேற்றப்படுவதற்காக அமைக்கப்பட்டுள்ள கட்டமைப்புப் பணிகளையும் பார்வையிட்டு ஆய்வு செய்து, வடகிழக்குப் பருவமழையை எதிர்கொள்வதற்கு அனைத்து நிலையிலும் தயார்நிலையில் இருந்திட அலுவலர்களுக்கு அறிவுறுத்தினார்.

தொடர்ச்சியாக, மணலி மண்டலம், வார்டு-20க்குட்பட்ட மணலி ஏரியில் அம்ருத் 2.0 திட்ட நிதியில் ரூ.4.73 கோடி மதிப்பில் மேற்கொள்ளப்பட்டுள்ள தொழில் நுட்ப முறையில் கரைகளைப் பலப்படுத்துதல், தடுப்புச் சுவர் கட்டுதல், ஏரி வரத்துக் கால்வாய், ஏரி வடிகால் ஆகிய புனரமைப்புப் பணிகளைப் பார்வையிட்டு ஆய்வு செய்தார். இப்பணிகள் அனைத்தும் நிறைவுற்ற பின் பொதுமக்கள் பயன்பெறும் வகையில் நடைபாதை அமைத்தல், குழந்தைகள் விளையாட்டுத் திடல் ஏற்படுத்துதல், பூங்கா ஏற்படுத்துதல், ஏரியில் படகு சவாரி ஏற்படுத்துதல், பசுமை வெளி அமைத்தல் உள்ளிட்ட கட்டமைப்புகளை ஏற்படுத்தி மணலி ஏரியினை சிறந்த சுற்றுலாத் தலமாக மாற்றுவதற்கான நடவடிக்கைகளை மேற்கொள்ள தொடர்புடைய அலுவலர்களுக்கு அறிவுறுத்தினார்.

இந்த ஆய்வுகளின்போது, மாதவரம் சட்டமன்ற உறுப்பினர் திரு.எஸ்.சுதர்சனம், வடக்கு வட்டார துணை ஆணையாளர்கட்டா ரவி தேஜா, மண்டலக்குழுத் தலைவர்எஸ்.நந்தகோபால், மாமன்ற உறுப்பினர்கள் கனிமொழி சுரேஷ், அ.சந்திரன், .ப.ராஜன் மற்றும் அலுவலர்கள் உடனிருந்தனர்.



**சென்னை மாநகராட்சி ஆணையரும், மாவட்ட தேர்தல் அலுவலருமான குமரகுருபரன் தலைமையில் வாக்காளர் பட்டியல் சிறப்பு தீவிர திருத்தம் மேற்கொள்வது தொடர்பான அரசியல் கட்சி பிரதிநிதிகளுடான ஆலோசன கூட்டம் நடந்தது. இதில் கூடுதல் மாவட்ட தேர்தல் அலுவலர்கள் கற்பகம், ஜெயசீலன், ரஷ்மி சித்தார்த், மாவட்ட கலெக்டர் பிரதிவிராஜ் உள்ளிட்ட அலுவலர்கள் கலந்து கொண்டனர்.**

## திருவொற்றியூர்,எண்ணூர் மீனவ கிராமங்களில் ஏரியாசபை கூட்டம்



**திருவொற்றியூர் நவ.04.**


தமிழகத்தில் ஆண்டுதோறும் 5 முறை கிராம சபை கூட்டம் நடத்தப்படும் என தமிழக முதல்வர் தெரிவித்து இருந்தார். இதில் அக்டோபர் 2 ஆம் தேதி நடத்தப்பட வேண்டிய கிராம சபை கூட்டம் பருவ மழை புயல் காரணமாக தள்ளி வைக்கப்பட்ட நிலையில் தமிழகத்தின் அனைத்து பகுதிகளிலும் கிராம சபை கூட்டம் நடத்த வேண்டும் என முதல்வர் உத்தரவிட்டிருந்தார். முதலமைச்சர் உத்தரவை தொடர்ந்து சென்னை திருவொற்றியூர் மண்டலத்திற்கு உட்பட்ட 5 ஆவது வார்டு ஏரியாசபை கூட்டம்நடைபெற்றது.

திருவொற்றியூர் நெடுஞ்சாலையில் அமைந்துள்ள தனியார் திருமண மண்டபத்தில் முன்னாள் வார்டு கவுன்சிலரும் திமுக வட்டகழக செயலாளருமான கே.பி.சொக்கலிங்கம் தலைமையில் நடைபெற்ற கிராம சபை கூட்டத்தில் பாரதியார் நகர், சின்ன எர்ணாவூர், கோபி நகர், காந்தி நகர், பாரத் நகர், நெய்தல் நகர், கலைஞர் நகர் மற்றும் 10க்கும் மேற்பட்ட மீனவ கிராமங்கள் உட்பட சுமார் 31 கிராம ங்களை சேர்ந்த வர்கள் இந்த கிராம சபை கூட்டத்தில் கலந்து கொண்டனர். 31 கிராம மக்களுக்கு தேவையான பிரச்சனைகள் குறித்து விவாதிக்கப்பட்ட நிலையில் அனைத்து பிரச்சனைகளும் சம்பந்தப்பட்ட அதிகாரிகளிடம் தெரிவித்து உடனடியாக செய்து தரப்படும் என கே.பி. சொக்க லிங்கம் தெரிவித்தார்.

இந்த கூட்டத்தில் அயலக அணி மாவட்ட அமைப்பாளர் எஸ்.டி.சங்கர், தலைமை கழக பேச்சாளர் வாசு கருணா பகுதி பிரதிநிதிகள் விவேகானந்தன், அவைத்தலைவர் சார்லஸ், பொருளாளர் பாபு, துணை செயலாளர் ரமேஷ், பகுதி பிரதிநிதிகள் பாரூக், கஜேந்திரன்சின்ன எர்ணாவூர் தலைவர் கோவிந்தசாமி ஆகியோர் கலந்து கொண்டனர்.

தின பூமி நாளிதழில் விளம்பரம் செய்து பயன் பெறுங்கள்

## புதியதாக பொறுப்பேற்றுள்ள மகளிர் தொண்டர் அணியினர் ஒன்றிய செயலாளரிடம் வாழ்த்து பெற்றனர்



**காஞ்சிபுரம், நவ. 4 --**

காஞ்சிபுரம் அடுத்த வெம்பாக்கம் கிழக்கு ஒன்றியத்தில் தி.மு.க., சார்பில் புதியதாக பொறுப்பேற்றுள்ள மகளிர் தொண்டர் அணியினர், ஒன்றிய செயலாளர் என். சங்கரை நேரில் சந்தித்து வாழ்த்து பெற்றனர்.தமிழகத்தில் சட்ட சபை தேர்தல் நெருங்கிக் கொண்டு இருக்கிறது. இந்நிலையில் ஆளும் கட்சி - எதிர்க்கட்சி - கூட்டணி கட்சியினர் என, அனைவரும் தங்களது கட்சிகளை பலப்படுத்தும் பணியை துவக்கி விட்டனர். இளம் வாக்காளர்களை கண்டறிந்து, அவர்களுக்கு ஓட்டு உரிமையை பதிவு செய்து கொடுப்பது. இளைஞர்களுக்கு புதிய பொறுப்பு வழங்குதல். 100 வாக்காளர்களுக்கு ஒரு நபரை நியமித்தல். மகளிர் குழுக்களை நேரில் சந்தித்தல். அவர்களுக்கு தேவையான பணிகளை முன் நின்று எடுத்து செய்தல் ஆகிய பணிகளை எந்தெந்த கட்சியினர் கையில் எடுக்க துவங்கி விட்டனர். காஞ்சிபுரம் அடுத்த வெம்பாக்கம் தி.மு.க.,வின் கிழக்கு ஒன்றியத்தில் இது போன்ற பணிகள் மும்முரமாக நடந்து வருகின்றன. இங்குள்ள ஒன்றிய செயலாளர் என்.சங்கர், மாவட்ட அயலக அணி துணைத் தலைவர் எம். கே.கார்த்திகேயன் ஆகியோர் இரவு -- பகலாக கட்சிப் பணியை திட்டமிட்டு செய்து வருகின்றனர். இந்த ஒன்றியத்தில் தி.மு.க.,வில் மகளிர் தொண்டர் அணியில் புதிய பொறு ப் பா ள ர் களை தலைமை கழகம் நியமித்துள்ளது.

அந்த வரிசையில் மகளிர் தொண்டர் அணி அமைப்பாளராக அறிவுக்கொடியும், துணை அமைப்பாளர்களாக சித்ரா, திவ்யா, தரணி, ஷர்மிளா, மாரியம்மாள் ஆகிய ஐந்து பேரை நியமிக்கப்பட்டுள்ளனர். இவர்கள் நேற்று மரியாதை நிமிர்த்தமாக வெம்பாக்கம் கிழக்கு ஒன்றிய செயலாளர் என்.சங்கர், மாவட்ட அயலக அணி துணைத் தலைவர் எம்.கே.கார்த்திகேயன் ஆகியோரை நேரில் சந்தித்து வாழ்த்து பெற்றனர். இந்த வாய்ப்பை நன்கு பயன்படுத்திக் கொண்டால் கட்சியில் இருந்து இன்னும் கூடுதல் பொறுப்புக்கள் உங்களுக்கு தானாகவே வந்து சேரும் என, ஒன்றிய செயலாளர் என். சங்கர், புதியவர்களை வாழ்த்தி அனுப்பி வைத்தார்.



**சென்னை, எழும்பூரில் அமைச்சர் பி.கே.சேகர்பாபு தலைமையில் சென்னைப் பெருநகர் பகுதியிலுள்ள ஏரி, கால்வாய் மற்றும் சாலை ஓரங்களில் குடியிருக்கும் குடும்பங்களுக்கு மாற்று இடம் வழங்குவது தொடர்பாக உயர் அலுவலர்களுடன் விரிவான ஆலோசனைக் கூட்டம் நடைபெற்றது. இக்கூட்டத்தில் மேயர் ஆர்.பிரியா, கூடுதல் தலைமைச் செயலாளர்கள் டாக்டர் ஜெ.ராதாகிருஷ்ணன், காகர்லா உஷா, , சிஎம்டிஏ உறுப்பினர் கோ.பிரகாஷ், மாநகராட்சி ஆணையர் ஜெ.குமரகுருபரன், நீர்வள ஆதாரத்துறை செயலாளர்ஜெ.ஜெயகாந்தன் கலந்து கொண்டனர்.**

## தாய்லாந்து, மலேசியாவில் இருந்து கடத்திய ரூ.2 கோடி மதிப்பிலான தங்ககட்டிகள் பறிமுதல்: 3 பயணிகள் கைது

**சென்னை நவ 04-**

தாய்லாந்து தலைநகர் பாங்காக்கில் இருந்து ஏர் ஏசியா பயணிகள் விமானம் கடந்த 30ம் தேதி நள்ளிரவு சென்னை விமான நிலையத்திற்கு வந்தது. அதில் வந்த பயணிகளை சுங்க அதிகாரிகள் கண்காணித்தனர்.

**தங்க கட்டி பறிமுதல்**

அப்போது சென்னையை சேர்ந்த சுமார் 30 வயது ஆண் பயணி, சுற்றுலாவிசாவில் தாய்லாந்து சென்று விட்டு, இந்த விமானத்தில் சென்னைக்கு திரும்பி வந்தார்.சுங்கத்துறை ஏர் இன்டெலிஜென்ட் அதிகாரிகளுக்கு அவர் மீது சந்தேகம் ஏற்பட்டது. அவரிடம் விசாரித்தபோது கேள்விகளுக்கு சரிவர பதிலளிக்கவில்லை. இதையடுத்து அவருடைய உடைமைகளை சோதித்தனர். உடைமைகளில் எதுவும் இல்லை. சந்தேகம் தீராமல் அந்த பயணியை தனி அறைக்கு அழைத்துச் சென்று ஆடைகளை களைந்து, முழுமையாக பரிசோதித்த போது, அவருடைய உள்ளாடைக்குள் சிறிய சிலிண்டர் வடிவிலான மூன்று உருளைகளை மறைத்து வைத்திருந்தார்.

அதிகாரிகள் அதை எடுத்து திறந்து பார்த்தனர். அதனுள் 24 கேரட் சுத்தமான தங்க பசை மறைத்து வைத்திருந்ததை கண்டுபிடித்தனர். மொத்தம் சுமார் முக்கால் கிலோ சுத்தமான தங்க பசை இருந்தது. அதன் சர்வதேச மதிப்பு ரூ.90 லட்சம். இதை தொடர்ந்து, சுங்கத்துறை அதிகாரிகள் தங்கபசையை பறிமுதல் செய்து, கடத்தல் பயணியை கைது செய்து விசாரித்து வருகின்றனர்.

மலேசிய தலைநகர் கோலாலம்பூரில் இருந்து தனியார் பயணிகள் விமானம் நேற்று காலை சென்னை விமான நிலையத்திற்கு வந்தது. அப்போது சென்னையைச் சேர்ந்த 2 ஆண் பயணிகள், மலேசியாவிற்கு சுற்றுலா பயணிகளாக சென்று விட்டு திரும்பி வந்தனர்.

இருவரின் உடைமைகளிலும் இருந்து 820 கிராம் தங்கக் கட்டிகளை பறிமுதல் செய்தனர். இவை 24 கேரட் சுத்தமான தங்கம் என்று தெரிய வந்தது. இதன் சர்வதேச மதிப்பு சுமார் ரூபாய் ஒரு கோடி. சுங்கத்துறை அதிகாரிகள் அவர்களை கைது செய்தனர்.

## டிஜிட்டல் கைது மோசடி மும்பை போலீஸ் அதிகாரி போல் நடித்து ரூ.19.92 லட்சம் பறித்த இரண்டு பேர் கைது

**சென்னை நவ 04-**

சென்னை அசோக்நகர் 19வது அவென்யூவில் வசிக்கும் சந்தோஷ் (33). தனியார் நிறுவன ஊழியர். கடந்த ஆகஸ்ட் 12ம் தேதி காலை, ஒரு மொபைல் எண்ணிலிருந்து சந்தோஷை அழைத்தவர் தன்னை கொரியர் நிறுவன ஏஜென்ட் என அறிமுகம் செய்துள்ளார்.

உங்கள் ஆதார் விவரங்களை யாரோ பயன்படுத்தி சந்தேகத்திற்குரிய பொருட்களை கொரியர் மூலம் அனுப்பியுள்ளனர். மும்பை அந்தேரி கிளை சைபர் க்ரைம் போலீசார் அந்த பார்சலை சோதனை செய்தனர். அதில் 4 காலாவதியான பாஸ்போர்ட்கள், 3 வங்கி கிரெடிட் கார்டு, 2 கிலோ துணிகள், போதை மருந்துகள் என பார்சலின் மொத்த மதிப்பு ரூ.96,710.'' இது பயங்கரவாத நடவடிக்கைகளுக்கான சட்டவிரோத பண பரிமாற்றம். உங்கள் மீது வழக்கு பதிவு செய்யப்படும்'' என்று பயமுறுத்தியுள்ளார். ''எம்.எச் சாலையில் மும்பை காவல் துறை'' என்ற ஸ்கைப் ஐடியிலிருந்து சந்தோஷுக்கு வீடியோ அழைப்பு வந்தது. அதில் ஒருவர் போலீஸ் சீருடையில், தன்னை மும்பை சைபர் க்ரைம் போலீஸ் கமிஷனர் என்று அறிமுகப்படுத்திக் கொண்டார்.இந்திய போதைப்பொருள் கட்டுப்பாட்டு பணியகம் மற்றும் புலனாய்வு அமலாக்க துறை இந்த வழக்கை விசாரித்து வருகிறது. நீங்கள் விசாரணைக்கு ஒத்துழைத்தால் சான்றிதழ் வழங்கி உங்களை விடுவிக்கலாம். வழக்கிலிருந்து விடுவிக்க பணம் கட்ட வேண்டும் என்று கூறியுள்ளார்.

சந்தோஷ் மறுத்ததால் அந்த நபர் வங்கியில் தனிநபர் கடன் வாங்கி அனுப்புங்கள் என பயமுறுத்தி மொத்தம் ரூ.19,92,921 பணத்தை மோசடி செய்பவர்களின் பல்வேறு வங்கி கணக்குகளுக்கு ஆன்லைன் மூலம் அனுப்ப வைத்தனர்.இதுகுறித்து செப்டம்பர் 24, 2024 அன்று சந்தோஷ் தெற்கு மண்டல சைபர் க்ரைம் காவல் நிலையத்தில் புகார் அளித்தார். சென்னை காவல் ஆணையர் அருண் நடவடிக்கை எடுக்க உத்தரவிட்டார். நரேஷ் கல்யாண் ராவ் ஷிண்டே (20), ஸ்ரீகாந்த் சுரேஷ் ராவ் கத்கர் (34) என்ற 2 பேர் கைது செய்தனர். பிறகு நீதிமன்றத்தில் ஆஜர்படுத்தி சிறையில் அடைக்கப்பட்டனர்.



**வளசரவாக்கம் மண்டலம் 147 வது வார்டுக்கு உட்பட்ட ஆலப்பாக்கம் அரசு உயர்நிலைப் பள்ளியில் கூடுதல் வகுப்பறை கட்டிடத்தை மாமன்ற உறுப்பினர்ரமணிமாதவன் திறந்து வைத்தார்.உடன் பொற்றோர் ஆசிரியர் சங்க தலைவர் எஸ்.ஜி.மாதவன், க.பிருந்தாவனன், பொதுநல சங்க தலைவர் லயன் ஏ.ஆர்.டில்லிபாபு,இ.வேணு, ரவிக்குமார், ஜெயக்குமார், இ.நாகேந்திரன், முனுசாமி உள்ளனர்.**

## மயிலாப்பூர் பகுதியில் ஹெராயின் போதைப்பொருள் வைத்திருந்தவர் கைது

**சென்னை நவ 04-**

சென்னை மயிலாப்பூர் காவல் நிலைய ஆய்வாளர் தலைமையிலான காவல் குழுவினருக்கு கிடைத்த ரகசிய தகவலின்பேரில், காவல் குழுவினர் நேற்று காலை, மயிலாப்பூர், சாந்தோம் தேவாலயம் பின்புறமுள்ள பகுதியில் கண்காணித்து, அங்கு சந்தேகப்படும்படி நின்றிருந்த ஒரு நபரை விசாரணை செய்தபோது, முன்னுக்குப் பின் முரணாக பதிலளித்தார். சந்தேகம் அதிகரிக்கவே அவரை சோதனை செய்தபோது, அவர் ஹெராயின் என்ற போதைப்பொருளை சிறிய பிளாஸ்டிக் குப்பிகளில் அடைத்து ஹெராயின் குப்பிகளை விற்பனை செய்ய வைத்திருந்தது தெரியவந்தது. அதன்பேரில், மயிலாப்பூர் காவல் நிலையத்தில் வழக்குப் பதிவு செய்து, போதைப்பொருள் வைத்திருந்த எதிரி குத்துஸ் மியா, பெஜிமாரா, மேற்கு திரிபுரா என்பவரை கைது செய்தனர். அவர்களிடமிருந்து சுமார் 35 கிராம் எடை கொண்ட 51 ஹெராயின் குப்பிகள் பறிமுதல் செய்யப்பட்டது.

## திருமங்கலம் பகுதியில் சூதாட்டத்தில் ஈடுபட்ட 10 பேர் கைது

**சென்னை நவ 04-**

சென்னை திருமங்கலம் காவல் நிலைய ஆய்வாளர் தலைமையிலான காவல் குழுவினருக்கு கிடைத்த ரகசிய தகவலின் பேரில், காவல் குழுவினர் நேற்று முன் தினம் இரவு, திருமங்கலம், திருவல்லீஸ்வரர் நகர், இளங்கோ தெருவில் உள்ள ஒரு வீட்டை கண்காணித்தபோது, அங்கு சிலர் பணம் வைத்து சீட்டுக்கட்டுகளுடன் சூதாட்டத்தில் ஈடுபட்டது உறுதி செய்யப்பட்டது. அதன்பேரில் மேற்படி இடத்தில் பணம் வைத்து சூதாட்டத்தில் ஈடுபட்ட வீட்டு உரிமையாளர் 1.மரிய ஜான், 2.குமார், 3.அப்துல் அமீது, 4.மஞ்சுநாதன், 5.ஜெகதீஷ், , உட்பட 10 பேரை கைது செய்தனர். அவர்களிடமிருந்து சூதாட்டத்திற்கு பயன்படுத்திய பணம் ரூ.20,500 மற்றும் சீட்டு கட்டுகள் பறிமுதல் செய்யப்பட்டது. இது தொடர்பாக, திருமங்கலம் காவல் நிலையத்தில் வழக்குப் பதிவு செய்து, கைது செய்யப்பட்ட 10 பேரை மீதும் உரிய சட்ட நடவடிக்கை எடுக்கப்பட்டது.

## திருமங்கலத்தில் வீட்டை உடைத்து கொள்ளையடித்த பிரபல ரவுடி கைது

**சென்னை நவ 04-**

சென்னை திருமங்கலம் பகுதியை சேர்ந்தவர் பாலமுகுந்தன்(57). இவர் திருமங்கலம் குற்றப்பிரிவு காவல் நிலையத்தில் கொடுத்துள்ள புகாரில், ''எனது வீட்டின் பூட்டை உடைத்து 16 ஆயிரம் ரூபாய், வெள்ளி டம்ளர், 2 செல்போன்கள் மற்றும் உண்டியலில் சேர்த்து வைத்திருந்த சில்லறை காசுகளை கொள்ளையடுத்து சென்றுவிட்டனர்' என்று தெரிவித்திருந்தார்.இதன் அடிப்படையில், இன்ஸ்பெக்டர் முத்து தலைமையில் போலீசார் வழக்குபதிவு செய்து கண்காணிப்பு கேமராக்களை ஆய்வு செய்தபோது 3 பேரின் அடையாளம் தெரிந்தது. இதைவைத்து பாடி டிவிஎஸ். காலனி பகுதியை சேர்ந்த பிரபல கொள்ளையன் ஆகாஷ்(20) மற்றும் இவரது கூட்டாளிகளான 2 சிறுவர்களை கைது செய்தனர். இவர்களிடம் இருந்து 16 ஆயிரம் ரூபாய், வெள்ளி டம்ளர், 2 செல்போன்கள் மற்றும் சென்ட் பாட்டில்கள், பட்டாக்கத்தி ஆகியவற்றை பறிமுதல் செய்தனர்.பின்னர் ஆகாஷை நீதிமன்றத்தில் ஆஜர்படுத்தி புழல் சிறையில் அடைத்தனர். இரண்டு சிறுவர்களை சென்னை கெல்லீஸ் உள்ள சிறுவர்கள் சீர்திருத்தப் பள்ளியில் சேர்த்தனர்.

## கே.கே நகரில் தொழிலாளி தற்கொலை

**சென்னை நவ 04**

மேற்கு கே.கே., நகர் மாரியம்மன் கோவில் தெருவைச் சேர்ந்தவர் சுரேஷ், 48. இவர், அதேபகுதியில் பேன்சி ஸ்டோர் நடத்தி, வீடுவீடாக பால் பாக்கெட் விற்பனை செய்யும் தொழில் செய்கிறார்.இவரது மனைவி மேகனா, 38, இவர்களுக்கு இரு மகள்கள் உள்ளனர். சுரேஷ் குடும்ப தேவைக்காக வாங்கிய கடன் தொகையை திரும்ப செலுத்த முடியாமல், மன உளைச்சலில் இருந்துள்ளார்.நேற்று காலை 4மணிக்கு வழக்கம் போல், பால் போடுவதற்காக வீட்டை வீட்டு வெளிவந்துள்ளார். சுரேஷ் வெகு நேரமாகியும் பால் போட வராததால், அவரது தம்பி பழனி மாதவன், பேன்சி கடை அருகில் சென்று பார்த்துள்ளார். அப்போது, கடைக்குள் சுரேஷ் துாக்கிட்டு தற்கொலை செய்தது தெரிந்தது. இதுகுறித்த, கே.கே., நகர் போலீசார் விசாரிக்கின்றனர்.

## ஆலந்தூர் பகுதியில் போதைப்பொருட்கள் வைத்திருந்த 4 பேர் கைது

சென்னை,நவ.04

சென்னையில்போதைப்பொருள்தடுப்பு நுண்ணறிவுப்பிரிவு காவல் ஆய்வாளர் தலைமையிலான காவல் குழுவினருக்கு கிடைத்த ரகசிய தகவலின்பேரில், தனிப்படையினர் மற்றும் புனித தோமையர் மலை காவல் ஆய்வாளர் சுரேஷ் தலைமையிலான காவல் குழுவினர் ஒருங்கிணைந்து நேற்று முன் தினம் ஆலந்தூர், மடுவங்கரை பாலம் அருகே கண்காணித்து, அங்கு சந்தேகப்படும்படி நின்றிருந்த 4 பேரை விசாரணை செய்து, சோதனை செய்தபோது, அவர்கள் ஓஜி கஞ்சா மற்றும் கஞ்சா ஆகிய போதைப்பொருட்களை மறைத்து வைத்திருந்தது தெரியவந்தது.அதன்பேரில், புனித தோமையர் மலை காவல் நிலையத்தில் வழக்குப் பதிவு செய்து, போதைப்பொருள் வைத்திருந்த எதிரிகள் 1.வள்ளுவர் மனோஜ்குமார், 2.பெர்னார்டு டிசில்வா, 3.மனீஷ் சௌத்ரி, 4. ஆனந்த், ஆகிய 4 பேரை கைது செய்தனர். அவர்களிடமிருந்து 150 கிராம் எடை கொண்ட ஓஜி கஞ்சா, 1.05 கிலோ கஞ்சா மற்றும் 3 ஐபோன்கள் உட்பட 4 செல்போன்கள் பறிமுதல் செய்யப்பட்டது. கைது செய்யப்பட்ட 4 எதிரிகளும் விசாரணைக்குப் பின்னர் நீதிமன்றத்தில் ஆஜர் செய்யப்பட்டு, சிறையில் அடைக்கப்பட்டனர்.

ராணிப்பேட்டை மாவட்டத்தில்

# 44 கோடி ரூபாய் மதிப்பீட்டில் முடிவுற்ற திட்டப் பணிகளை திறந்து வைத்து 25 கோடி ரூபாய் மதிப்பீட்டிலான புதிய திட்டப் பணிகளுக்கு துணை முதலமைச்சர் உதயநிதி ஸ்டாலின் அடிக்கல் நாட்டினார்



**ராணிப்பேட்டை நவ 04-**

தமிழ்நாடு துணை முதலமைச்சர் உதயநிதி ஸ்டாலின் இன்று (3.11.2025) இராணிப்பேட்டை மாவட்டத்தில் நடைபெற்ற அரசு விழாவில் பொதுப்பணித் துறை, ஊரக வளர்ச்சித் துறை, நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கல் துறை ஆகிய துறைகளின் சார்பில் மொத்தம் 43.74 கோடி ரூபாய் மதிப்பீட்டில் முடிவுற்ற 115 திட்டப் பணிகளை திறந்து வைத்து, ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சித் துறை, தமிழ்நாடு நுகர் பொருள் வாணிபக் கழகம் ஆகியவற்றின் சார்பில் மொத்தம் 24.34 கோடி ரூபாய் மதிப்பீட்டில் கட்டப்படவுள்ள 6 புதிய திட்டப் பணிகளுக்கு அடிக்கல் நாட்டி, பல்வேறு அரசு துறைகளின் சார்பில் 72,880 பயனாளிகளுக்கு 296.46 கோடி ரூபாய் மதிப்பீட்டிலான அரசு நலத்திட்ட உதவிகளை வழங்கினார். தமிழ்நாடு துணை முதலமைச்சர் உதயநிதி ஸ்டாலின் இன்றைய தினம் ஊரக வளர்ச்சித் துறையின் சார்பில் ஆற்காடு, திமிரி, வாலாஜா, அரக்கோணம், காவேரிப்பாக்கம், நெமிலி, சோளிங்கர் ஆகிய ஊராட்சி ஒன்றியங்களில் அங்கன்வாடி மையம், ஊராட்சி மன்ற அலுவலகம், தானிய சேமிப்பு கிடங்கு, பால் கொள்முதல் நிலையம், பொது நூலகம், இருப்பிட கட்டடம், பள்ளி வகுப்பறை கட்டடம், உடற்பயிற்சி கூடம், பேருந்து நிழற்கூடம் என மொத்தம் 22.90 கோடி ரூபாய் மதிப்பீட்டில் 92 முடிவுற்ற திட்டப் பணிகளையும், பொதுப்பணித் துறை சார்பில் சோளிங்கர் ஊராட்சி ஒன்றியம் புலிவலம், காவேரிப்பாக்கம், நெமிலி ஊராட்சி ஒன்றியம் மேல்களத்தூர், அம்மூர் மற்றும் கலவை ஆகிய இடங்களில் உள்ள அரசு உயர்நிலை மற்றும் மேல்நிலை பள்ளிகளில் 9.65 கோடி ரூபாய் மதிப்பீட்டில் கட்டப்பட்டுள்ள 39 வகுப்பறை கட்டடங்களையும், நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கல் துறையின் சார்பில் ஆற்காடு, இராணிப்பேட்டை, வாலாஜாப்பேட்டை, மேல்விஷாரம், அரக்கோணம் ஆகிய நகராட்சிகளில் மேல்நிலை நீர்தேக்க தொட்டிகளுக்கு குழாய் மற்றும் பம்பு அமைக்கும் பணிகள், சமுதாய கழிப்பிடம், பசுமை பூங்கா, பள்ளி வகுப்பறை, பல்நோக்கு கட்டடம், அங்கன்வாடி மையம், பெருந்தலைவர் காமராஜர் நினைவகம் புனரமைப்பு பணிகள் என 11.19 கோடி ரூபாய் மதிப்பீட்டிலான 18 திட்டப் பணிகள் என மொத்தம் 43.74 கோடி ரூபாய் மதிப்பீட்டில் முடிவுற்ற 115 திட்டப் பணிகளை திறந்து வைத்தார். இந்நிகழ்ச்சியில் ஊரக வளர்ச்சித் துறையின் சார்பில் சோளிங்கர் ஊராட்சி ஒன்றியம் செக்கடிகுப்பம், வாலாஜா ஊராட்சி ஒன்றியம் திருமலைச்சேரி, திமிரி ஊராட்சி ஒன்றியம் அகரம் ஆகிய ஊராட்சிகளில் உள்ள நீர்வரத்துக் கால்வாய்களின் குறுக்கே கட்டப்பட உள்ள 3 உயர்மட்ட மேம்பாலங்கள் மற்றும் திமிரி ஊராட்சி ஒன்றியம் குப்பிடிச்சாத்தம் ஊராட்சியில் துணை சுகாதாரம் நிலையம் கட்டும் பணி என 17.71 கோடி ரூபாய் மதிப்பீட்டிலான 4 திட்டப் பணிகளுக்கும், தமிழ்நாடு நுகர்பொருள் வாணிப கழகம் சார்பில் நெமிலி வட்டம், மேலபுலம் ஊராட்சி தர்மநீதி கிராமம், தமிழ்நாடு நுகர்பொருள் வாணிபக் கழக கிடங்கு வளாகத்தில் 6.63 கோடி ரூபாய் மதிப்பீட்டில் 1500 மெட்ரிக் டன் கொள்ள்ளவு கொண்ட 2 கூடுதல் கிடங்குகள் மற்றும் வளாக சுற்றுச்சுவர் அமைக்கும் திட்டப் பணிகளுக்கும் என மொத்தம் 24.34 கோடி ரூபாய் மதிப்பீட்டில் 6 புதிய திட்டப் பணிகளுக்கு அடிக்கல் நாட்டினார். தொடர்ந்து தமிழ்நாடு துணை முதலமைச்சர் வருவாய் மற்றும் பேரிடர் மேலாண்மை துறை சார்பில் 12,075 பயனாளிகளுக்கு வீட்டுமனைப்பட்டா மற்றும் இயற்கை மரண உதவித் தொகை என 135.29 கோடி ரூபாய்க்கான நலத்திட்ட உதவிகளையும், தமிழ்நாடு மாநில ஊரக வாழ்வாதார இயக்கம் (மகளிர் திட்டம்) சார்பில் மகளிர் சுய உதவிக் குழுக்களுக்கு வங்கி கடன் இணைப்பு, சமுதாய முதலீட்டு நிதி, வாழ்வாதார நிதி, நுண் நிறுவன நிதிக்கடன், சுய உதவிக் குழு தனிநபர் கடன், ஒருங்கிணைந்த பண்ணை தொகுப்பு, வட்டார வணிக வள மையம், சுழல் நிதி, இயற்கை பண்ணை தொகுப்பு, மகளிர் சுய உதவிக்குழு உறுப்பினர் அடையாள அட்டை என 50,160 குழு உறுப்பினர்களுக்கு 85.58 கோடி ரூபாய்க்கான நலத்திட்ட உதவிகளையும், உணவுப் பொருள் மற்றும் வழங்கல் துறை சார்பில் 5,177 பயனாளிகளுக்கு குடும்ப அட்டைகளையும், தொழிலாளர் நலத் துறை சார்பில் 3,417 பயனாளிகளுக்கு கல்வி, திருமண உதவித் தொகை, விபத்து மரணம் நிவாரணம் என 1.16 கோடி ரூபாய்க்கான நலத்திட்ட உதவிகளையும், கூட்டுறவுத் துறையின் சார்பில் 1,263 பயனாளிகளுக்கு 7.58 கோடி ரூபாய்க்கான பயிர் கடன் மற்றும் கால்நடை பராமரிப்பு கடனுதவிகளையும், தாட்கோ சார்பில் 257 பயனாளிகளுக்கு 1.01 கோடி ரூபாய் மதிப்பீட்டில் முதலமைச்சரின் ஆதி திராவிடர் மற்றும் பழங்குடியினர் சமூக பொருளாதார மேம்பாட்டிற்கான தொழில் முனைவு திட்டம் மற்றும் தூய்மைப் பணியாளர்களுக்கான நலவாரிய அட்டை உள்ளிட்ட நலத்திட்ட உதவிகளையும், வேளாண்மை மற்றும் உழவர் நலத் துறை சார்பில் 180 பயனாளிகளுக்கு தார்பாலின், தெளிப்பு நீர்ப்பாசனம், பவர் டில்லர், நுண்ணூட்ட கலவை உள்ளிட்ட நலத்திட்ட உதவிகளையும், தோட்டக்கலை மற்றும் மலைபயிர்கள் துறை சார்பில் 14 பயனாளிகளுக்கு 13.67 இலட்சம் ரூபாய் மதிப்பீட்டில் நிழல் கூடாரம், நிரந்தர கல்தூண் பந்தல், பண்ணைக் குட்டை, மண்புழு உர கூடாரம், சிப்பம் கட்டும் அறை, நுண்ணீர் பாசனம் அமைத்தல் உள்ளிட்ட நலத்திட்ட உதவிகளையும், வேளாண்மை பொறியியல் துறை சார்பில் 4 பயனாளிகளுக்கு பவர் டில்லர்களையும், ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியினர் நலத்துறையின் சார்பில் 150 பயனாளிகளுக்கு 3.35 இலட்சம் ரூபாய் மதிப்பீட்டில் இலவச தையல் இயந்திரங்களையும், மாற்றுத்திறனாளிகள் நலத்துறை சார்பில் 45 பயனாளிகளுக்கு 30.29 இலட்சம் ரூபாய் மதிப்பீட்டில் சக்கர நாற்காலி, பெட்ரோல் ஸ்கூட்டர், காதொலிக் கருவிகளையும், பிற்படுத்தப்பட்டோர் மற்றும் சிறுபான்மையினர் நலத் துறையின் சார்பில் 43 பயனாளிகளுக்கு 2.97 இலட்சம் ரூபாய் மதிப்பீட்டில் முஸ்லீம் மகளிர் உதவித் தொகை, கிருத்துவ மகளிர் உதவித் தொகை, சலவை பெட்டி, சீர் மரபினர் அடையாள அட்டை உள்ளிட்ட நலத்திட்ட உதவிகளையும், தமிழ்நாடு தொழில் வணிக துறை, மாவட்ட தொழில் மையம் சார்பில் 33 பயனாளிகளுக்கு 110.52 இலட்சம் ரூபாய்க்கான புதிய தொழில் முனைவோர் மற்றும் தொழில் நிறுவன மேம்பாட்டு திட்டம், வேலையில்லா இளைஞர்களுக்கான வேலைவாய்ப்பு உருவாக்கும் திட்டங்களின் கீழ் மானியத்துடன் கூடிய கடனுதவிகளையும், மாவட்ட சமூக நலத் துறை சார்பில் 30 பயனாளிகளுக்கு முதலமைச்சரின் பெண் குழந்தைகள் பாதுகாப்பு திட்டத்தின் கீழ் 15 இலட்சம் ரூபாய்க்கான வைப்பு நிதி பத்திரங்களையும், ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சித் துறையின் சார்பில் 30 பயனாளிகளுக்கு 162.24 இலட்சம் ரூபாய்க்கான நலத்திட்ட உதவிகளயும் என மொத்தம் 72,880 பயனாளிகளுக்கு, 296.46 கோடி ரூபாய் மதிப்பீட்டிலான நலத்திட்ட உதவிகளை வழங்கினார். இந்நிகழ்ச்சியில் கைத்தறி மற்றும் துணிநூல் துறை அமைச்சர் ஆர்.காந்தி, நாடாளுமன்ற உறுப்பினர் எஸ்.ஜெகத்ரட்சகன், சட்டமன்ற உறுப்பினர்கள் ஜெ.எல்.ஈஸ்வரப்பன், ஏ.எம்.முனிரத்தினம், கலெக்டர் ஜெ.யு. சந்திரகலா, மாவட்ட வருவாய் அலுவலர் செ.தனலிங்கம் மற்றும் அரசு அலுவலர்கள் மற்றும் உள்ளாட்சி அமைப்புகளின் பிரதிநிதிகள் கலந்து கொண்டனர்.

திருப்பத்தூர் மாவட்டம்

# வாணியம்பாடி சட்டமன்ற தொகுதிக்குப்பட்ட வாக்குச்சாவடி நிலை முகவர்களுக்கு வாக்காளர் பட்டியல் சிறப்பு தீவிரத் திருத்தப்பணிக்கான பயிற்சி கூட்டம்

## கலெக்டர் க.சிவசவுந்திரவல்லி தலைமையில் நடைபெற்றது





**திருப்பத்தூர் நவ 04-**

திருப்பத்தூர் மாவட்டம் திருப்பத்தூர் மற்றும் வாணியம்பாடி சட்டமன்ற தொகுதிக்குட்பட்ட வாக்குச்சாவடி நிலை முகவர்களுக்கு இன்று (03.11.2025) நடைபெற்ற வாக்காளர் பட்டியல் சிறப்பு தீவிரத் திருத்தப்பணிக்கான பயிற்சி கூட்டத்தில் மாவட்ட தேர்தல் நடத்தும் அலுவலர் கலெக்டர் க.சிவசௌந்திரவல்லி வாக்குச்சாவடி நிலை முகவர்களுக்கு அறிவுரைகள் மற்றும் ஆலோசனைகளை வழங்கினார். மாவட்ட தேர்தல் நடத்தும் அலுவலர் கலெக்டர் தெரிவித்ததாவது:- இந்திய தேர்தல் ஆணையத்தின் உத்தரவின்படி இந்திய அரசியலமைப்பின் 324-வது பிரிவு மற்றும் 1950-ஆம் ஆண்டு மக்கள் பிரதிநிதித்துவச் சட்டப் பிரிவு 21 மற்றும் மக்கள் பிரதிநிதித்துவச் சட்டம் 1950-இன் பிற பொருந்தக்கூடிய பிரிவுகளின் கீழ் வழங்கப்பட்டுள்ள அதிகாரங்களை பயன்படுத்தி 01.01.2026-ஐ தகுதியேற்படுத்தும் நாளாகக் கொண்டு வாக்காளர் பட்டியல் சிறப்பு தீவரத்திருத்தப்பணிகள்மேற்கொள்ளப்படவுள்ளது. இந்திய தேர்தல் ஆணையம் மற்றும் தமிழ்நாடு தலைமைத்தேர்தல் அதிகாரி அவர்களின் ஆணையின்படி திருப்பத்தூர் மாவட்டத்தில் உள்ள நான்கு சட்டமன்றத் தொகுதிகளான ஆம்பூர் வாணியம்பாடி ஜோலார்பேட்டை மற்றும் திருப்பத்தூர் ஆகிய தொகுதிகளில் வாக்குச்சாவடி நிலை அலுவலர்கள் மூலம் வீடு வீடாக வாக்காளர் பட்டியல் சிறப்பு தீவிரத் திருத்தப்பணி மேற்கொள்ளப்பட உள்ளது. முதற்கட்டமாக 28.10.2025 முதல் 03.11.2025 வரை வாக்காளர் பட்டியல் சிறப்பு தீவிரத் திருத்தப்பணிக்கான முன்னேற்பாடுகள் பயிற்சிகள் வழங்கப்படவுள்ளது. அந்த வகையில் இன்று திருப்பத்தூர் மற்றும் வாணியம்பாடி சட்டமன்ற தொகுதிக்குட்பட்ட வாக்குச்சாவடி நிலை முகவர்களுக்கு டீடுயு-2 வாக்காளர் பட்டியல் சிறப்பு தீவிரத் திருத்தப்பணிக்கான பயிற்சி வகுப்பானது நடைபெற்றது. இந்த வாக்காளர் பட்டியல் சிறப்பு தீவிரத் திருத்த பணிகள் மேற்கொள்வதற்கு முக்கிய நோக்கம் எந்த ஒரு தகுதியான வாக்காளரையும் வாக்காளர் பட்டியலில் சேர்ப்பதில் இருந்து விடக்கூடாது தகுதியற்ற நபர்களை வாக்காளர்களாக சேர்க்கக்கூடாது என்பதாகும். மேலும் இறந்த வாக்காளர்களின் பெயர்கள் நீக்கப்படாமல் இருக்கும் அவைகளையெல்லாம் நீக்குவதற்காகவும் மேலும் வாக்காளர்கள் வேறு முகவரிக்கு மாற்றப்பட்டு இருந்தாலும் அல்லது வேறு சட்டமன்ற தொகுதிக்கு மாறி சென்று இருந்தாலும் அதனை கண்டறிந்து பெயர் நீக்கம் மேற்கொள்ளவும் மேலும் வாக்காளர் பட்டியல்களில் இரண்டு முறை வாக்காளரின் பெயர் இருந்தால் அதனை நீக்குவதற்காகவும் வாக்காளர் பட்டியல் சிறப்பு தீவிரத் திருத்த பணி மேற்கொள்ளப்பட உள்ளது. நமது மாநிலத்தில் கடந்த 2002-ஆம் ஆண்டு வாக்காளர் பட்டியல் சிறப்பு தீவிரத் திருத்த பணிகள் மேற்கொள்ளப்பட்டது அதன் அடிப்படையில் தற்போது வாக்காளர் பட்டியல் சிறப்பு தீவிரத் திருத்த பணி மேற்கொள்ளப்பட உள்ளது. திருப்பத்தூர் மாவட்டத்தில் உள்ள நான்கு சட்டமன்ற தொகுதிகளில் 9 99 411 வாக்காளர்கள் உள்ளனர். வாக்காளர் அனைவருக்கும் கணக்கெடுப்பு படிவம் நாளை முதல் வாக்குச்சாவடி நிலை அலுவலர்கள் மூலமாக வீடு வீடாக சென்று வழங்கப்படும். படிவங்களை வழங்கும் போது இறந்தவர்கள் கண்டறியப்பட்டால் அவர்களது படிவங்கள் வழங்கப்பட மாட்டாது மேலும் வாக்காளர்கள் இடம்பெயர்ந்து இருந்தால் அவர்களின் படிவங்களும் வழங்கப்பட மாட்டாது இதுகுறித்து வாக்குச்சாவடி நிலை அலுவலர்கள் பதிவேட்டில் பதிவு செய்து கொள்வார்கள். வரைவு வாக்காளர் பட்டியல் வெளியிடும்பொழுது அந்தந்த வருவாய் கோட்டாட்சியர் அலுவலகம் ஊராட்சி அலுவலகம் கிராம நிர்வாக அலுவலகத்திலும் ஒட்டப்படும். இப்பட்டியலில் மறுப்பு ஏதேனும் இருந்தால் சமர்ப்பிக்கும் பட்சத்தில் அவர்களது பெயர்கள் வாக்காளர் பட்டியலில் சேர்க்க நீக்கம் செய்யப்படும். வாக்குச்சாவடி நிலை அலுவலர்களுடன் இ வாக்குச்சாவடி நிலை முகவர்கள் (டீடுயு) அங்கீகரிக்கப்பட்ட அரசியல் கட்சி மூலம் வழங்கப்பட்ட அடையாள அட்டை அணிந்து வருவார்கள். வாக்குச்சாவடி நிலை அலுவலர்கள் வீடு வீடாக செல்லும்போது வாக்குச்சாவடி நிலை முகவர்களுக்கு றாயவளயிp செயலின் மூலமாக தகவல் தெரிவிக்கப்பட வேண்டும். வாக்குச்சாவடி நிலை அலுவலர்கள் வீடு வீடாகச் சென்று வாக்காளர் பட்டியல் சிறப்பு தீவிரத் திருத்த பணிக்கான இரண்டு படிவங்களை வழங்கி பூர்த்தி செய்யப்பட்ட விண்ணப்பங்களை பெற வாக்குச்சாவடி நிலை அலுவலர்கள் செல்வார்கள் அப்பொழுது இரண்டு படிவத்திலும் வாக்குச்சாவடி நிலை அலுவலர்கள் கையொப்பமிட்டு ஒரு படிவத்தை வாக்காளரிடமே கொடுப்பார்கள். வாக்குச்சாவடி நிலை முகவர்கள் (டீடுயு-2) நாள் ஒன்றுக்கு அதிகபட்சம் 50 படிவங்களை பெற்று என்னால் சரி பார்க்கப்பட்டது சரியாக உள்ளது என்று கையொப்பமிட்டு எந்த அரசியல் கட்சியை சேர்ந்தவர் என்பதையும் குறிப்பிட்டு படிவங்களை வாக்குச்சாவடி நிலை அலுவலர்களிடம் வழங்கலாம். மேலும் வாக்காளர்களுக்கு இது குறித்த சந்தேகங்கள் ஏதேனும் இருப்பின் படிவத்தில் வாக்குச்சாவடி நிலை அலுவலரின் தொலைபேசி எண் அச்சிடப்பட்டிருக்கும் அந்த எண்ணில் தொடர்பு கொண்டு தங்களது சந்தேகங்களை பூர்த்தி செய்து கொள்ளலாம். மேலும் படிவங்களை பெறும் பொழுது வாக்காளரின் வண்ணப்புகைப்படம் ஒன்றையும் பெற வேண்டும். இது கட்டாயம் அல்ல வாக்காளர் பட்டியலில் தெளிவான புகைப்படம் இடம்பெறுவதற்காக பெற்றுக் கொள்ளலாம். வாக்குச்சாவடி நிலை அலுவலர்கள் (டீடுழு) மூலமாக பூர்த்தி செய்யப்பட்டு பெறக்கூடிய அனைத்து விண்ணப்ப படிவங்களின் வாக்காளர் பெயர்கள் வரைவு வாக்காளர் பட்டியலில் சேர்க்கப்படும். நவம்பர் 4ஆம் தேதி முதல் டிசம்பர் 4ஆம் தேதி வரை படிவங்கள் வாக்காளர்களிடம் கொடுக்கப்பட்டு படிவங்கள் பூர்த்தி செய்து பெறப்படும். இதன் அடிப்படையில் டிசம்பர் 9-ஆம் தேதி வரைவு வாக்காளர் பட்டியல் வெளியிடப்படும். வாக்குச்சாவடி நிலை அலுவலர்கள் வழங்கும் ஒவ்வொரு படிவத்திலும் க்யூ ஆர் கோடு (ஞசு – உழனந) பதியப்பட்டிருக்கும் அதனை ஸ்கேன் செய்த பிறகு தான் வாக்குச்சாவடி நிலை அலுவலர்கள் படிவத்தை வழங்குவார்கள். அந்த படிவத்தை பூர்த்தி செய்து பெரும்பொழுதும் வாக்குச்சாவடி நிலை அலுவலர்கள் ஸ்கேன் செய்து அந்த படிவத்தை பெறுவார்கள். வாக்குச்சாவடி நிலை அலுவலர்கள் வீடு வீடாக சென்று வாக்காளர் பட்டியல் சிறப்பு தீவிரத் திருத்தப் பணிக்கான படிவங்களை வழங்கும்பொழுது அக்குடும்பத்தில் ஐந்து நபர்கள் இருந்தால் அதில் வாக்காளராக உள்ள நபரிடம் படிவங்களை வழங்குவதோடு தங்களுடைய பதிவேட்டில் எத்தனை வாக்காளருக்கான படிவங்கள் வழங்கப்பட்டது என்பது குறித்து படிவம் பெற்று வாக்காளரிடம் கையெழுத்து பெற்றிட வேண்டும். வரைவு வாக்காளர் பட்டியல் டிசம்பர் 9ஆம் தேதியும் இறுதி வாக்காளர் பட்டியல் பிப்ரவரி 7-ஆம் தேதியும் வெளியிடப்படும். மேலும் வாக்காளர் பட்டியல் தீவிரத் திருத்தம் தேர்தல் ஆணையத்தின் செயலியில் பதிவிறக்கம் செய்து அதில் பூர்த்தி செய்து படிவத்தை சமர்ப்பிக்கலாம். அனைத்து வாக்குச்சாவடி நிலை அலுவலர்களும் வாக்காளர் பட்டியல் சிறப்பு தீவிர திருத்தணிக்கு ஒத்துழைப்பு நல்க வேண்டும் என மாவட்ட தேர்தல் நடத்தும் அலுவலர் கலெக்டர் க.சிவசௌந்திரவல்லி அவர்;;;கள் தெரிவித்துள்ளார். இப்பயிற்சி கூட்டத்தில் திருப்பத்தூர் ஜோலார்பேட்டை சட்டமன்ற தொகுதி தேர்தல் நடத்தும் அலுவலர் மற்றும் வருவாய் கோட்டாட்சியர் வரதராஜன் உதவி தேர்தல் நடத்தும் அலுவலர்கள் நகராட்சி ஆணையாளர் சாந்தி வட்டாட்சியர்கள் (திருப்பத்தூர்) நவநீதன் (வாணியம்பாடி) சுதாகர் மற்றும் துறை சார்ந்த அலுவலர்கள் உடனிருந்தனர்.

# வேலூர் நாராயணி பள்ளியில் சக்தி அம்மா ஜெயந்தி விழாவை முன்னிட்டு மாநில அளவிலான சதுரங்க போட்டி



**வேலூர்,நவ 04-**

வேலூர் மாவட்டம், அரியூரில் உள்ள ஸ்ரீ நாராயணி பள்ளியில் திருமலைக்கோடி சி நாராயணி ஸ்ரீ சக்தி அம்மா அவர்களின் 50 ஆவது ஜெயந்தி விழாவை முன்னிட்டு மாநில அளவி லான சதுரங்க போட்டிகள் நடைபெற்றது.

இந்தபோட்டியில்சேலம் ஈரோடு திருச்சி திருவண்ணாமலை, கிருஷ்ணகிரி மாவட்டங்களில் இருந்து சுமார் 500 மாணவ, மாணவி கள் கலந்து கொண்டனர். இப்போட்டிகளை நாரா யணி பள்ளி இயக்குநர் சுரேஷ்பாபு துவங்கி வைத் தார் ராய வேலூர் சதுரங்க கழக தலைவர் மனோகரன் முன்னிலை வகித்தார்.பாரதி செஸ் அகாடமி தினகரன் போட்டிகளை ஒருங்கிணைத்து நடத்தினார். இதில் 8வயது 10 வயது 12 வயது. 14 வயது. 16 வயது ஆகிய ஐந்து பிரிவுகளாக ஆண்களுக்கு தனியாகவும் பெண்களுக்கு தனியாகவும் போட்டிகள் நடத்தப்பட் டன.

இதில் வெற்றி பெற்றவர்களுக்கு சான்றுகள் கோப்பைகளை பரிசுகளையும் திரைப்பட நடிகர் பாலா மற்றும் அனைக்கட்டு சட்டமன்ற உறுப்பினர் நந்தகுமார் ஆகியோர் வழங்கினார்கள். 8 வயது பெண்கள் பிரிவில் சஞ்சனாஸ்ரீயும், 8 வயது ஆண்கள் பிரிவில் ஜெரித்தும்,முதலிடம் வென்றனர். 10வயது பெண்களில் பிரிவில் அக்ஷயா ஆண்கள் பிரிவில் லக்க்ஷனும், 12 வயது ஆண்கள் பிரிவில் குருபிரசாத்தும் பெண்கள் பிரிவில் தனுஷ்கா வும், 14வயது பிரியில் பெண் களில் கீர்த்தனாவும், ஆண் பிரிவில் வேல்முருகனும், 16 வயது பிரிவு பெண்களில் இந்துலேகாவும். ஆண்கள் பிரிவில் மிதூலான் ஆகியோர் முதலிடம் வென்றனர் இந்த போட்டி யில் நடுவர்களாக பிரகாஷ் கார்த்திகேயன் தங்கமாரியப்பன் தியா சந்திரன் சிவகுமார் தரணி உட்பட பலர் கலந்து கொண்டனர் வெற்றி பெற்றவர்களுக்கு கோப்பை மற்றும் சான்றிதழும் கலந்து கொண்ட அனைவருக்கும் சான்றிதழ்களும் வழங்கப் பட்டது

Printed, Published and Owned by S.Manimaran and Printed at Manimaran Printers No.18/19 R.N.R. Arcade, Katpadi Road Vellore-4 Ph: 0416-4203997 E-Mail: velloredi@thinaboomi.com RNI. Regn No.TNTAM/2003/15101
Editor: S.MANIMARAN
Subject to Madurai Jurisdiction Only

தின பூமி நாளிதழில் விளம்பரம் செய்து பயன் பெறுங்கள்

# விநாயகா மிஷன் அறுபடை மருத்துவக் கல்லூரி - சேவா பாரதி தமிழ்நாடு சார்பில் இலவச நடமாடும் மருத்துவர் பிரிவு

## துணை நிலை ஆளுநர் கைலாஷ்நாதன் தொடங்கி வைத்தார்



**புதுச்சேரி நவ 04-**

புதுச்சேரி மாநிலம் கிருமாம்பாக்கம் விநாயகா மிஷன் அறுபடைவீடு மருத்துவக் கல்லூரி மற்றும் சேவா பாரதி தமிழ்நாடு சார்பில் இலவச நடமாடும் மருத்துவர் பிரிவு தொடக்க விழா அறுபடை வீடு மருத்துவக் கல்லூரியில் நடைபெற்றது இதில் சிறப்பு விருந்தினராக கலந்து கொண்ட துணை நிலை ஆளுநர் கைலாஷ்நாதன் குத்துவிளக்கு ஏற்றி நடமாடும் மருத்துவக் குழுவை தொடங்கி வைத்து உரையாற்றினார் இந்நிகழ்ச்சியில் ராஷ்ட் ரிய சேவா பாரதியின் ஒருங்கிணைப்பு செயலர் சுதிர் குமார், இன் பினிட்டி சேவா அமைப்பின் தலைவர் நளினி பத்மநாபன், விநாயகா மிஷின்ஸ் ஆராய்ச்சி நிறுவனத்தின் வேந்தர் டாக்டர் கணேசன், ஏம்பலம் தொகுதி அமைப்புசாரா தொழிலாளர்கள் பிரிவு தலைவர் பிரகாஷ் உட்பட மருத்துவமனை, ஊழியர்கள் பங்கேற்றனர்

# அரக்கோணம் நகரத்தில் எஸ்.ஐ.ஆர் 2026 பயிற்சி வகுப்பு



**அரக்கோணம் நவ 04-**

இராணிப்பேட்டை மாவட்டம் அரக்கோணம் நகரில் இந்திய தேர்தல் ஆணையம் ஆணைக்கிணங்க அரக்கோணம் (தனி) சட்டமன்ற தொகுதி சிறப்பு தீவிர திருத்தம் பணி - 2026 பி எல் ஏ 2 சிறப்பு பயிற்சி வகுப்பு அரக்கோணம் கோட்டாட்சியர் வெங்கடேசன் தலைமையில் நடைபெற்றது தேர்தல் துணி வட்டாட்சியர் எத்திராஜ் வரவேற்றார்

கூட்டத்தில் திமுக, அதிமுக / தமிழ் மாநில காங்கிரஸ், பாரத் ஜனதா கட்சி, இந்திய தேசிய காங்கிரஸ் தமிழக மக்கள் கட்சி உள்ளிட்ட கட்சிகளின் தலைவர்கள் கூட்டத்தில் கலந்து கொண்டனர். டிசம்பர் 4ஆம் தேதி முதல் எஸ்எல் ஏ பணியாளர்கள் வீடு வீடாக வருவார்கள் அவர்களுக்கு அரசியல் தலைவர்கள் முழு ஒத்துழைப்பு தர வேண்டும் அதற்காகத்தான் இந்த ஆலோசனை கூட்டம் என பேசப்பட்டது

முன்னதாக பாரதிய ஜனதா கட்சியை கூட்டத்திற்கு ஏன் அழைக்கவில்லை என சராமாரியாக கேள்வி எழுப்பினர் இதனால் கூட்டத்தில் பரபரப்பு காணப்பட்டது கிராம அதிகாரி முருகன் நன்றி கூறினார்

## முதல் முறையாக உலகக்கோப்பை வென்ற
# இந்திய மகளிர் அணிக்கு ரூ.51 கோடி பரிசுத்தொகை




**மும்பை, நவ. 04**

உலகக்கோப்பை வென்ற இந்திய மகளிர் அணிக்கு பி.சி.சி.ஐ. சார்பில் ரூ.51 கோடி பரிசுத்தொகை வழங்கப்படும் என அறிவிக்கப்பட்டுள்ளது.

**298 ரன்கள் குவிப்பு...**

ஐ.சி.சி. மகளிர் ஒருநாள் உலகக் கோப்பை இறுதி ஆட்டம், ஞாயிற்றுக்கிழமை மாலை நவி மும்பையில் உள்ள டி.ஒய். பாட்டீல் கிரிக்கெட் திடலில் நடைபெற்றது. இந்தப் போட்டியில், டாஸ் வென்ற தென்னாப்பிரிக்க அணி பந்துவீச்சை தேர்வு செய்தது. தொடர்ந்து, களமிறங்கிய இந்திய அணியின் வீராங்கனைகள் 50 ஓவர்கள் முடிவில், 7 விக்கெட்டுகளை இழந்து 298 ரன்களை குவித்திருந்தனர்.

**லாரா வோல்வார்ட்...**

சேஸிங்கில் களமிறங்கிய தென்னாப்பிரிக்காவுக்கு 299 ரன்கள் இலக்காக நிர்ணயிக்கப்பட்டது. நிதானமாக விளையாடி வந்த தென்னாப்பிரிக்க அணி முதல் 25 ஓவர்களில் 4 முக்கிய விக்கெட்டுகளை இழந்தது. இருப்பினும், தென்னாப்பிரிக்காவின் கேப்டனும், தொடக்க வீராங்கனையுமான லாரா வோல்வார்ட் 98 பந்துகளில் 101 ரன்களை குவித்து ஆட்டமிழந்தார். தென்னாப்பிரிக்காவுக்கு எதிரான பந்துவீச்சில் இந்திய வீராங்கனைகள் ஷஃபாலி வர்மா, தீப்தி சர்மா ஆகியோர் தொடர்ச்சியாக விக்கெட்டுகளை எடுத்து அசத்தினர்.

**முதல்முறையாக...**

45.3 ஓவர்களில் தென்னாப்பிரிக்க அணி அனைத்து விக்கெட்டுகளையும் இழந்து தோல்வியடைந்தது. இதன் மூலம், 52 ரன்கள் வித்தியாசத்தில் தென்னாப்பிரிக்காவை வீழ்த்தி, இந்திய அணி ஐ.சி.சி. மகளிர் உலகக் கோப்பை கிரிக்கெட் போட்டியில் முதல்முறையாக சாம்பியன் பட்டத்தை வென்றது. வெற்றிபெற்ற இந்திய அணியின் வீராங்கனைகளுக்கு பிரதமர் மோடி, ராகுல் காந்தி, முதல்வர் மு.க. ஸ்டாலின் உள்ளிட்டோர் வாழ்த்து தெரிவித்துள்ளனர்.

**ரூ.51 கோடி பரிசு...**

இந்த நிலையில் உலகக் கோப்பை வென்ற இந்திய மகளிர் அணிக்கு பி.சி.சி.ஐ. சார்பில் ரூ.51 கோடி பரிசுத் தொகை வழங்கப்படும் என அறிவிக்கப்பட்டுள்ளது. இந்த அறிவிப்பினை பி.சி.சி.ஐ.யின் செயலர் தேவஜித் சைகியா வெளியிட்டுள்ளார். இந்த பரிசுத்தொகை வீரர்கள், பயிற்சியாளர்கள் உள்பட அனைவருக்கும் பரிந்தளிக்கப்படவிருக்கிறது. அதே சமயம் சாம்பியன் அணியான இந்திய மகளிர் அணிக்கு ஐ.சி.சி. தரப்பில் ரூ.39.78 கோடி பரிசுத்தொகை வழங்கப்பட்டுள்ளது.

## ஐ.சி.சி. உலகக்கோப்பையை வென்று
# தோனி, கபில் தேவ் வரிசையில் இணைந்த ஹர்மன்பிரீத் கவுர்..!

**மும்பை, நவ. 04-**

13-வது ஐ.சி.சி. மகளிர் உலகக்கோப்பை தொடரில் ஹர்மன்பிரீத் கவுர் தலைமையிலான இந்திய அணி சாம்பியன் பட்டம் வென்ற தோனி, கபில் தேவ் வரிசையில் ஹர்மன்பிரீத் கவுர் இணைந்துள்ளார்.




**மழை குறுக்கீடு....**

13-வது மகளிர் ஒருநாள் உலகக்கோப்பை கிரிக்கெட் தொடரின் இறுதி ஆட்டம், மும்பை புறநகரான நவிமும்பையில் உள்ள டி.எஸ். பட்டீல் ஸ்டேடியத்தில் நடந்தது. இதில் ஹர்மன்பிரீத் கவுர் தலைமையிலான இந்திய அணி தென் ஆப்பிரிக்காவை எதிர்கொண்டது. மழை காரணமாக ஆட்டத்தை தொடங்க 2 மணி நேரம் தாமதம் ஆனது. ஆனாலும் ஓவர் ஏதும் குறைக்கப்படவில்லை. இரு அணியிலும் அரையிறுதியில் ஆடிய வீராங்கனைகள் மாற்றமின்றி அப்படியே இடம் பெற்றனர். இதில் டாஸ் ஜெயித்த தென் ஆப்பிரிக்க கேப்டன் லாரா வோல்வார்ட் பந்துவீச்சை தேர்வு செய்தார்.

**அபார வெற்றி...**

அதன்படி முதலில் பேட்டிங் செய்த இந்திய அணி நிர்ணயிக்கப்பட்ட 50 ஓவர்களில் 7 விக்கெட்டுக்கு 298 ரன்கள் குவித்தது. அதிகபட்சமாக ஷபாலி வர்மா 87 ரன்களும், தீப்தி ஷர்மா 58 ரன்களும் அடித்தனர். தென் ஆப்பிரிக்கா தரப்பில் அயாபோங்கா காகா 3 விக்கெட் கைப்பற்றினார். பின்னர் இறுதிப்போட்டியில் இதுவரை யாரும் விரட்டிப்பிடிக்காத ஒரு இலக்கை நோக்கி ஆடிய தென் ஆப்பிரிக்க அணி 45.3 ஓவர்களில் 246 ரன்களில் சுருட்டினர். இதன் மூலம் இந்தியா 52 ரன்கள் வித்தியாசத்தில் வெற்றி பெற்று முதல்முறையாக உலகக் கோப்பையை தட்டித் தூக்கியது.

**3-வது கேப்டன்....**

இதன் மூலம் இந்திய கிரிக்கெட் வரலாற்றில் ஐ.சி.சி. ஒருநாள் உலகக்கோப்பையை (ஆண்கள் மற்றும் மகளிர் இரண்டையும் சேர்த்து) வென்ற 3-வது கேப்டன் என்ற பெருமையை ஹர்மன்பிரீத் கவுர் பெற்றுள்ளார். இதற்கு முன்னர் இந்திய ஆண்கள் அணியின் முன்னாள் கேப்டன்களான கபில் தேவ் மற்றும் மகேந்திரசிங் தோனி ஆகியோர் ஐ.சி.சி. ஒருநாள் உலகக்கோப்பையை வென்றுள்ளனர். தற்போது அந்த வரிசையில் ஹர்மன்பிரீத் கவுர் இணைந்துள்ளார்.

## மகளிர் உலகக்கோப்பை கிரிக்கெட்:
# அதிக ரன்கள் குவித்த, விக்கெட் எடுத்த டாப்-5 வீராங்கனைகள்

**மும்பை, நவ. 04-**

நடந்து முடிந்த மகளிர் உலகக்கோப்பை கிரிக்கெட் தொடரில் அதிக ரன்கள் குவித்த, விக்கெட் எடுத்த டாப்-5 வீராங்கனைகள் பட்டியல் வெளியாகியுள்ளது. இதில் ரன் குவித்தவர்களில் லாரா வோல்வார்ட் (571 ரன்கள்), விக்கெட் எடுத்தவர்களில் தீப்தி சர்மா (22 விக்கெட்டுகள்) முதலிடம் பிடித்துள்ளனர்.

**சாம்பியன் பட்டம்...**

இந்தியாவில் நடைபெற்று வந்த 13-வது மகளிர் உலகக்கோப்பை தொடர் நிறைவடைந்தது. இதன் இறுதிப்போட்டியில் தென் ஆப்பிரிக்காவை 52 ரன்கள் வித்தியாசத்தில் வீழ்த்தி இந்தியா சாம்பியன் பட்டம் வென்று அசத்தியது. மகளிர் உலகக் கோப்பையை இந்தியா வெல்வது இதுவே முதல் முறையாகும்.

இந்நிலையில் இந்த தொடரில் அதிக ரன் மற்றும் விக்கெட் வீழ்த்திய டாப் -5 வீராங்கனைகள் குறித்த தகவல் வெளியாகியுள்ளது.




### அதிக ரன் - டாப்-5:

1. லாரா வோல்வார்ட் - 571 ரன்கள்.
2. ஸ்மிருதி மந்தனா - 434 ரன்கள்.
3. ஆஷ்லே கார்ட்னர் - 328 ரன்கள்.
4. பிரதிகா ராவல் - 308 ரன்கள்.
5. போப் லிட்ச்பீல்ட் - 304 ரன்கள்.

### அதிக விக்கெட் - டாப்-5:

1. தீப்தி சர்மா - 22 விக்கெட்டுகள்.
2. சதர்லேண்ட் - 17 விக்கெட்டுகள்.
3. எக்லெஸ்டோன் - 16 விக்கெட்டுகள்.
4. ஸ்ரீ சரணி - 14 விக்கெட்டுகள்.
5. அலனா/ மிலாபா - 13 விக்கெட்டுகள்.

# பெண்களுக்கு பாதுகாப்பு வழங்காத அரசு வெட்கப்பட வேண்டும்: த.வெ.க.

**சென்னை, நவ. 04-**

கோவையில் கல்லூரி மாணவியின் நண்பரை தாக்கி அப்பெண்ணை பாலியல் வன்கொடுமை செய்திருப்பது தமிழ்நாட்டையே அதிரவைத்துள்ளது. தமிழ்நாட்டின் மகள்களுக்கு பாதுகாப்பு தர முடியாத தி.மு.க. அரசு வெட்கப்பட வேண்டும் என த.வெ.க. தெரிவித்துள்ளது.

இதுகுறித்து த.வெ.க. கொள்கை பரப்பு பொதுச் செயலாளர் அருண்ராஜ் வெளியிட்ட எக்ஸ் பதிவில், "பெண்களுக்கு பாதுகாப்பு இல்லாத மாநிலமாக தமிழ்நாடு மாறியுள்ளது என்பதற்கு, கோவை தனியார் கல்லூரி மாணவி மீது நிகழ்த்தப்பட்ட கூட்டு பாலியல் வன்முறை மற்றுமொரு சாட்சி. போதை கலாச்சாரத்தால் தமிழகத்தின் இளைஞர்கள், மாணவர்கள் சீரழிந்து வருகிறார்கள் என்று பலமுறை வலியுறுத்தியும் இந்த போலி 'அப்பா' மாடல் அரசு எந்த ஒரு நடவடிக்கையும் முறையாக எடுக்காத காரணத்தால், போதையின் பாதையில் சென்ற அந்த கூட்டம் நேற்று முன்தினம் (2-11-2025) இரவு கோவை மாநகர் விமானநிலையம் ஒட்டியுள்ள பகுதியில், தனியார் கல்லூரி மாணவியின் நண்பரை தாக்கி அப்பெண்ணை பாலியல் வன்கொடுமை செய்திருப்பது தமிழ்நாட்டையே அதிரவைத்துள்ளது.

தமிழ்நாட்டின் மகள்களுக்கு பாதுகாப்பு தர முடியாத தி.மு.க அரசு வெட்கப்பட வேண்டும். குற்றவாளிகள் அச்சமின்றி சுற்றுகிறார்கள், ஏனெனில் முதல்வரின் இரும்புக் கை, தமிழ்நாட்டு மகள்களை அல்ல... தி.மு.க. அமைச்சர்களை அமலாக்கத் துறையில் இருந்து காப்பாற்ற தான் பயன்படுகிறது. தி.மு.க. ஆட்சி அராஜகம் செய்பவர்களுக்கான ஆட்சி என்பது மீண்டும் நிரூபணமாகியுள்ளது. தமிழ்நாட்டில் காவல்துறை ஒன்று இருக்கிறதா என்பதே கேள்விக்குறியாக இருக்கிறது" எனத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

# ரூ.23 கோடி எருமை மாடு உயிரிழப்பு: காப்பீட்டு தொகைக்காக கொலையா?

**ஜெய்ப்பூர், நவ. 04-**

ரூ.23 கோடி எருமை மாடு உயிரிழந்ததை காப்பீட்டு தொகைக்காக கொலை செய்யப்பட்டதா? என போலீசார் விசாரணை நடத்தி வருகின்றனர்.

ராஜஸ்தானில் புஷ்கர் என்ற பெயரில் பிரபல கால்நடைகளின் திருவிழா ஒன்று சமீபத்தில் நடந்தது. இதில், பல்வேறு வகையான ஒட்டகங்கள், குதிரைகள், பசுக்கள், எருமை உள்ளிட்ட கால்நடையினங்கள் கலந்து கொண்டன. அவற்றில் உயரத்தில் மிக சிறிய பசு இனம், விலையுயர்ந்த குதிரை உள்ளிட்டவையும் அடங்கும். ஒட்டக பந்தயங்களும் நடத்தப்பட்டன.

இதேபோன்று, ரூ.23 கோடி மதிப்பிலான எருமை ஒன்றும் இந்த கண்காட்சிக்கு கொண்டு வரப்பட்டது. இந்தியா முழுவதிலும் இருந்தும், பிற நாடுகளில் இருந்தும் கூட ஆயிரக்கணக்கான பார்வையாளர்கள் வருகை தந்திருந்தனர். ரூ.15 கோடி மதிப்பிலான ஷாபாஸ் என்ற குதிரை, ரூ.23 கோடி மதிப்பிலான அன்மோல் என்ற எருமை மாடு ஆகியவை பார்வையாளர்களை கவர்ந்திழுத்தது. 1,500 கிலோ எடை கொண்ட 8 வயதே ஆன இந்த எருமைக்கு நாள்தோறும் பால், பழங்கள், முட்டைகள் என ரூ.1,500 செலவிடப்பட்டு வந்தது. அவ்வப்போது பாதாம் எண்ணெய் மசாஜும் செய்யப்படுவது உண்டு. இந்நிலையில், திடீரென அன்மோல் இறந்து போனது.

எனினும், இயற்கைக்கு எதிராக ஊட்டச்சத்து உணவுகளை கொடுத்ததும், ஹார்மோன் வளர்ச்சியை தூண்டும் வகையிலான செயல்பாடுகளாலும் இது நடந்துள்ளது என்றும், வணிகத்தின் பெயரில் விலங்குகளுக்கு கொடூரம் இழைக்கப்படுகிறது என்றும் விமர்சனங்கள் முன் வைக்கப்பட்டன. அதில் ஒருவர், இது திடீரென ஏற்பட்ட மரணம் அல்ல. காப்பீட்டு தொகையை பெறுவதற்காக திட்டமிட்டு அதனை கொல்ல சதி செய்துள்ளனர் என்று தெரிவித்து உள்ளார். ரூ.21 கோடி என்றாலும் விதியில் இருந்து தப்ப முடியவில்லை என்றும் ஒருவர் பதிவிட்டு உள்ளார்.

## கிராந்தி கௌட்டுக்கு ரூ.1 கோடி

மகளிர் உலக கோப்பை கிரிக்கெட் தொடரின் இறுதிப் போட்டியில் இந்தியா 52 ரன்கள் வித்தியாசத்தில் வெற்றி பெற்று, முதன்முறையாக மகளிர் அணி ஐசிசி கோப்பையை வென்று சாதனைப்படைத்துள்ளது. மகளிர் கோப்பையை வென்ற இந்திய அணிக்கு பாராட்டுகள் குவிந்த வண்ணம் உள்ளது. பரிசுகளும் குவிந்து வருகின்றன. பிசிசிஐ 50 கோடி ரூபாய்க்கு மேல் பரிசு அறிவித்துள்ளது.

இந்த நிலையில் மத்திய பிரதேச மாநிலத்தைச் சேர்ந்த வேகப்பந்து வீச்சாளரான கிராந்தி கௌட்டுக்கு, மத்திய பிரதேச மாநில அரசு 1 கோடி ரூபாய் பரிசுத் தொகை அறிவித்துள்ளது. மிதவேகப் பந்து வீச்சாளரான இவர் இறுதிப் போட்டியில் 3 ஓவர்கள் வீசி 16 ரன்கள் விட்டுக்கொடுத்தார். விக்கெட் ஏதும் வீழ்த்தவில்லை. ஆஸ்திரேலியாவுக்கு எதிராக அரையிறுதியில் 6 ஓவர்கள் வீசி 58 ரன்கள் விட்டுக்கொடுத்து 1 விக்கெட் வீழ்த்தினார். உலக கோப்பையில் 8 போட்டிகளில் விளையாடி 9 விக்கெட்டுகள் வீழ்த்தியுள்ளார்.

## உலக கோப்பையுடன் தூக்கம்

மகளிர் உலகக் கோப்பை இறுதிப் போட்டி இந்திய மகளிர் அணியின் கேப்டன் ஹர்மன்ப்ரீத் கவுர், உலக கோப்பையுடன் தூங்கும் புகைப்படத்தை இன்ஸ்டாகிராமில் பகிர்ந்துள்ளார். அப்புகைப்படத்தில் ஹர்மன்ப்ரீத் கவுரின் டி சர்ட்டில் கிரிக்கெட் என்பது ஜென்டில்மேன் விளையாட்டு மட்டுமல்ல , அனைவருக்குமான விளையாட்டு" என்று எழுதப்பட்டுள்ளது. முன்னதாக கால்பந்து உலக கோப்பையை வென்ற மெஸ்ஸி, டி20 உலக கோப்பையை வென்ற ரோகித் ஆகியோர் உலக கோப்பையுடன் தூங்கிய புகைப்படம் இணையத்தில் வைரலானது குறிப்பிடத்தக்கது.

## ஸ்மிருதி மந்தனா கொண்டாட்டம்

மகளிர் உலகக் கோப்பை இறுதிப் போட்டி நவி மும்பையில் நேற்று நடைபெற்றது. இதில் இந்தியா, தென் ஆப்பிரிக்கா அணிகள் மோதின.

இந்திய வீராங்கனை ஸ்மிருதி மந்தனா தனது காதலன் பலாஷ் முச்சலுடன் உலக கோப்பை வெற்றியை கொண்டாடினார். ஸ்மிருதி மந்தனாவும் பலாஷ் முச்சல் என்பவரும் கடந்த சில ஆண்டுகளாக காதலித்து வருகின்றனர். மத்திய பிரதேச மாநிலம் இந்தூரை சேர்ந்த பலாஷ் முச்சல் இசையமைப்பாளராக உள்ளார். சில ஆல்பங்களையும் இவர் வெளியிட்டிருக்கிறார். ஸ்மிருதி மந்தனா - பலாஷ் முச்சல் ஜோடிக்கு நவம்பர் 20-ம் தேதி திருமணம் நடைபெறவுள்ளது குறிப்பிடத்தக்கது.


## விக்டோரியா எம்போகோ சாம்பியன்

பல முன்னணி வீராங்கனைகள் பங்கேற்றிருந்த ஹாங்காங் ஓபன் டென்னிஸ் தொடர் நேற்றுடன் நிறைவடைந்தது. இதன் ஒற்றையர் பிரிவின் இறுதிப்போட்டியில் விக்டோரியா எம்போகோ (கனடா) - கிறிஸ்டினா புக்ஸா (ஸ்பெயின்) மோதினர். விறுவிறுப்பாக நடைபெற்ற இந்த ஆட்டத்தில் முதல் 2 செட்டுகளை ஆளுக்கொன்றாக கைப்பற்றினர். இதனால் 3-வது செட் பரபரப்புக்குள்ளானது. ஆனால் அந்த செட்டை எம்போகோ எளிதில் கைப்பற்றினார். எம்போகோ இந்த ஆட்டத்தில் 7-5, 6-7 மற்றும் 6-2 என்ற செட் கணக்கில் வெற்றி பெற்று சாம்பியன் பட்டம் வென்றார்.

## நம்ம ஊரு பள்ளி திட்ட நிதி ரூ.ஆயிரம் கோடியை தொட்டது:
# நன்கொடையாளர்களுக்கு முதல்வர் ஸ்டாலின் நன்றி

**சென்னை, நவ. 04-**

நம்மை வளர்த்த சமூகத்துக்கும், பள்ளிக்கும் உதவ உயர்ந்த உள்ளத்தோடு நிதி அளித்தோருக்கு நன்றி என முதல்வர் மு.க.ஸ்டாலின் கூறியுள்ளார்.



முதல்வர் மு. க. ஸ்டாலின் அவர்களால், 'நம்ம ஸ்கூல் நம்ம ஊரு பள்ளி' என்ற முன்னோடி திட்டம் கடந்த டிசம்பர் 19, 2022 அன்று பள்ளிக் கல்வித் துறையின் கீழ் துவங்கி வைக்கப்பட்டது. பொதுமக்கள் மற்றும் குறு, சிறு, பெருநிறுவனங்களின் பங்களிப்புகளை பெற்று அரசுப் பள்ளிகளை மேம்படுத்தும் திட்டமே 'நம்ம ஸ்கூல் நம்ம ஊரு பள்ளி என்று அழைக்கப்பட்டது.

இந்தநிலையில், நம்ம ஸ்கூல் நம்ம ஊரு பள்ளி' முன்னெடுப்பில் இதுவரை ஆயிரம் கோடி ரூபாய் மதிப்பிலான உதவிகள் பெறப்பட்டுள்ளதாக முதல்வர் மு.க. ஸ்டாலின் பெருமிதம் தெரிவித்துள்ளார். இதுகுறித்து அவர் எக்ஸ் தள பதிவில், ஆயிரம் கோடியைத் தொட்டது நம்மஸ்கூல் நம்ம ஊரு பள்ளி நிதி; நல்லுள்ளங்களுக்கு நன்றி. இந்த ஆண்டு மட்டுமே 46,767 கோடி ரூபாய் நிதி ஒதுக்கீட்டுடன் இந்தியாவிலேயே பள்ளிக்கல்வியில் பெரும் கவனம் செலுத்தி வருகிறது நமது திராவிட மாடல் அரசு.

அரசின் முயற்சிகளுக்குப் பக்கபலமாக, 5 லட்ச ரூபாயை முதல் நன்கொடையாக வழங்கி, நான் தொடங்கி வைத்த 'நம்ம ஸ்கூல் நம்ம ஊரு பள்ளி' முன்னெடுப்பில் இதுவரை ஆயிரம் கோடி ரூபாய் மதிப்பிலான உதவிகள் பெறப்பட்டுள்ளது. அவற்றின் மூலம் ஆயிரக்கணக்கிலான ஸ்டெஸ் ஆய்வகங்கள், ஸ்மார்ட் வகுப்பறைகள், நவீன கழிப்பறைகள், திறன் பயிற்சிகள் உள்ளிட்ட பணிகளை அரசுப் பள்ளிகளில் நிறைவேற்றியுள்ளோம். நம்மை வளர்த்த சமூகத்துக்கும் பள்ளிக்கும் உதவ வேண்டுமென்ற உயர்ந்த உள்ளத்தோடு பங்களித்த 885 நிறுவனங்கள் & 1,500 நன்கொடையாளர்களுக்கும் நனிநன்றிகள்.

இத்தனை பேரின் நம்பிக்கையைக் காப்பாற்றும்படி வெளிப்படைத்தன்மையோடும் நேர்மையாகவும் செயல்பட்டு, நற்பெயரைப் பெற்றுத் தந்துள்ள அன்பில் மகேஷ் மற்றும் என்.எஸ்.என்.ஓ.பி அறக்கட்டளைத் தலைவர்வேணு சீனிவாசன் ஆகியோருக்குப் பாராட்டுகள். என அதில் பதிவிட்டுள்ளார்.

## தெரு நாய்கள் தொடர்பான வழக்கு:
# தமிழ்நாடு தலைமை செயலாளர் சுப்ரீம் கோர்ட்டில் நேரில் ஆஜர்

**புதுடெல்லி, நவ. 04-**

தெரு நாய்கள் தொடர்பான வழக்கு, சுப்ரீம் கோர்ட்டில் தமிழக தலைமை செயலாளர் முருகானந்தம் நேற்று நேரில் ஆஜரானார்.

தெரு நாய் தொல்லை விவகாரத்தை சுப்ரீம் கோர்ட்டு தானாக முன்வந்து வழக்காக பதிவு செய்து விசாரித்து வருகிறது. இதில் தெரு நாய்களை பிடித்து கருத்தடை செய்து பிடித்த இடத்திலேயே விடுவிக்க கடந்த ஆகஸ்டு மாதம் உத்தரவிட்டு இருந்தது. மேலும் இந்த விவகாரத்தில் மாநிலங்கள் மற்றும் யூனியன் பிரதேச அரசுகள் இணக்க அறிக்கையை பிரமாண பத்திரமாக தாக்கல் செய்யவும் அறிவுறுத்தி இருந்தது. அதன்படி மேற்கு வங்காளம், தெலுங்கானா மற்றும் டெல்லி மாநில அரசுகள் பிரமாண பத்திரம் தாக்கல் செய்திருந்தன.

பின்னர் இந்த வழக்கு கடந்த 27-ந் தேதி மீண்டும் விசாரணைக்கு வந்தபோது, பிரமாண பத்திரம் தாக்கல் செய்யாத பிற மாநிலங்கள் மற்றும் யூனியன் பிரதேச தலைமை செயலாளர்கள் கோர்ட்டில் நேரில் ஆஜராக நீதிபதிகள் உத்தரவிட்டனர். அவர்கள் காணொலி மூலம் ஆஜராக அனுமதி கேட்டதையும் கடந்த 31-ந் தேதி நீதிபதிகள் நிராகரித்தனர். இந்த வழக்கு சுப்ரீம் கோர்ட்டில் நீதிபதிகள் விக்ரம் நாத், சந்தீப் மேத்தா, அஞ்சாரியா ஆகியோரை கொண்ட அமர்வு முன்பு நேற்று மீண்டும் விசாரணைக்கு வந்துள்ளது. இந்நிலையில், தெரு நாய்கள் தொடர்பான வழக்கு விசாரணைக்காக, தமிழக தலைமை செயலாளர் முருகானந்தம் சுப்ரீம் கோர்ட்டில் நேற்று நேரில் ஆஜராகி உள்ளார். அவர் ஆவணங்களுடன் கோர்ட்டுக்கு சென்றுள்ளார்.



**தலைமைச் செயலகத்தில் தமிழ்நாடு உயிரிப் பல்வகைமை வாரியத்தின் 12-வது வாரியக் கூட்டம் அமைச்சர் ஆர்.எஸ். ராஜகண்ணப்பன் தலைமையில் நடைபெற்றது.**

# அ.தி.மு.க.விலும் குடும்ப அரசியல்: செங்கோட்டையன் குற்றச்சாட்டு

**சென்னை, நவ. 04-**

அ.தி.மு.க.விலும் குடும்ப அரசியல் உள்ளதாக செங்கோட்டையன் குற்றச்சாட்டியுள்ளார்.



அ.தி.மு.க. பொதுச்செயலாளர் எடப்பாடி பழனிசாமிக்கு எதிராக போர்க்கொடி தூக்கிய முன்னாள் அமைச்சர் கே.ஏ.செங்கோட்டையனின் கட்சிப் பதவிகள் பறிக்கப்பட்டன. இதனை தொடர்ந்து கடந்த சில நாட்களுக்குமுன் ராமநாதபுரம் மாவட்டம் பசும்பொன்னில் தேவர் ஜெயந்தி விழாவின் போது அ.தி.மு.க.வில் இருந்து நீக்கப்பட்ட ஓ.பன்னீர்செல்வம், சசிகலா, டி.டி.வி.தினகரன் ஆகியோரை செங்கோட்டையன் சந்தித்து பேசினார்.

இதையடுத்து, அ.தி.மு.க.வின் அடிப்படை உறுப்பினர் பொறுப்பில் இருந்தும் செங்கோட்டையன் நீக்கப்பட்டார். அதேவேளை, அ.தி.மு.க.வில் இருந்து நீக்கப்பட்டது தொடர்பாக கோர்ட்டில் வழக்கு தொடர இருப்பதாக செங்கோட்டையன் அறிவித்தார்.

இந்நிலையில், நேற்று கோவை விமான நிலையத்திற்கு வந்த அவர் நிருபர்களுக்கு பேட்டியளித்தார். அப்போது அவர் கூறியதாவது:- எம்.ஜி.ஆர். காலம் முதல் இன்று வரை ஒரே நிலைப்பாட்டுடன் நான் இருந்து வருகிறேன். தி.மு.க.வில் தான் குடும்ப அரசியலில் இருக்கிறது என்றில்லை. அ.தி.மு.க.விலும் குடும்ப அரசியல் உள்ளது.

எடப்பாடி பழனிசாமியின் மகன், மாப்பிள்ளை, மைத்துனரின் தலையீடு உள்ளது என்பது நாடறிந்தது. நான், இந்த இயக்கம் (அ.தி.மு.க.) வலுப்பெற வேண்டும், தேர்தலில் வெற்றி பெற வேண்டும் என்று பணியாற்றி வருகிறேன். ஆனால், சிலர் தன்னால் தான் முடியும் என்று தன்னையும் ஏமாற்றிக் கொண்டு, மற்றவர்களையும் ஏமாற்றக்கூடாது. இவ்வாறு அவர் கூறினார்.

# இந்திய அணிக்கு விஜய் வாழ்த்து

பெண்கள் உலக கோப்பை கிரிக்கெட் போட்டியில் தென் ஆப்பிரிக்க அணியை 52 ரன்கள் வித்தியாசத்தில் வீழ்த்தி இந்திய பெண்கள் அணி, சாம்பியன் பட்டம் வென்று அசத்தியுள்ளது. வரலாற்று வெற்றியை பதிவு செய்த இந்திய அணிக்கு வாழ்த்துகள் குவிந்து வருகின்றன. பிரதமர் மோடி, தமிழ்நாடு முதல் அமைச்சர் மு.க. ஸ்டாலின் உள்ளிட்ட பல்வேறு தலைவர்கள் மற்றும் பல்வேறு தரப்பினரும் வாழ்த்துகளை தெரிவித்து வருகின்றனர்.

அந்தவகையில் த.வெ.க. தலைவர் விஜய் வெளியிட்ட வாழ்த்து செய்தியில், மிகவும் அற்புதமான முதல் ஐ.சி.சி மகளிர் கிரிக்கெட் உலகக் கோப்பையை வென்ற இந்திய அணிக்கு வாழ்த்துக்கள். முழு நாட்டிற்கும் ஒரு உண்மையான வரலாற்று நாள். என்று பதிவிட்டுள்ளார்.

# சினிமா CINI செய்திகள்

## ‘ஆண் பாவம் பொல்லாதது’ திரைவிமர்சனம்



அழகாய் போய்க் கொண்டிருக்கும் நாயகன் ரியோ, நாயகி மாளவிகா தம்பதியின் வாழ்க்கையில் ஈகோ என்கிற புயல் வீசத்தொடங்கி குடும்பநல நீதிமன்றம் வரை நீள்கிறது. விவாகரத்து பெற்றே தீருவேன் என்ற பிடிவாதத்தில் மாளவிகா இருக்க, மனைவியுடன் சேர்ந்து வாழ்வதில் ரியோ உறுதியாக இருக்கிறார். இறுதியில் யார் வெற்றி பெற்றது என்பதே ஆண் பாவம் பொல்லாதது படம். ரியோ ராஜ் மற்றும் மாளவிகா இருவரும் முழு படத்தையும் தாங்கி பிடித்திருக்கிறாகள். அவர்கள் தினம் தினம் போடும் சண்டைகள், தற்போதைய கால கட்டத்துக்கு ஏற்றபடி உள்ளதால் படம் பார்வையாளர்களுக்கு விருந்தாகிறது. ஜோடி பொருத்தமும் துள்ளல் நடிப்பும் சிறப்பு. வழக்கறிஞராக வரும் விக்னேஷ், அவர் மனைவியாக வரும் ஷீலா,

விக்னேஷின் உதவியாளராக வரும் ஜென்சன் ஆகியோர் படத்துக்கு பக்க பலமாக இருக்கிறார்கள். சித்துகுமாரின் இசை ஓகே ரகம்.

திருமணத்திற்கு முன்பு, சோசியல் மீடியா பற்றி தெரியாத பல பெண்கள், திருமணத்திற்குப் பிறகு சோசியல் மீடியாவில் மூழ்குவதனால், குடும்பத்தில் ஏற்படும் பிரச்சனைகளை கலகலப்பான காட்சிகளாக கையாண்டிருக்கும் இயக்குநர் கலையரசன் தங்கவேல், அனைவரையும் யோசிக்க வைத்திருக்கிறார். மொத்தத்தில், ‘ஆண் பாவம் பொல்லாதது’ நிச்சயம் வெல்லும்.

## ‘கிறிஸ்டினா கதிர்வேலன்’ இசை வெளியீட்டு விழா



ஸ்ரீ லட்சுமி ட்ரீம் ஃபேக்டரி டாக்டர் ஆர். பிரபாகர் ஸ்தபதி தயாரிப்பில், எஸ்.ஜே.என். அலெக்ஸ் பாண்டியன் இயக்கத்தில் கௌஷிக் ஸ்ரீ ராம், பிரதீபா நடிப்பில் மிஸ்டர் டெல்டா கிரியேசன்ஸ் வழங்கும் படம் ‘கிறிஸ்டினா கதிர்வேலன்’. வரும் வெள்ளியன்று இப்படம் வெளியாக உள்ள நிலையில்,. இந்த படத்தின் இசை வெளியீட்டு விழா சமீபத்தில் நடைபெற்றது. இந்நிகழ்வில் இயக்குநர்கள் எஸ்.ஆர். பிரபாகரன், விஜய் ஸ்ரீ, உள்ளிட்ட பலர் கலந்து கொண்டனர். விழாவில் இயக்குநர் அலெக்ஸ் பாண்டியன் பேசுகையில், நாயகி பிரதீபாவிடம் கதையை சொன்ன போது கதை அவருக்கு மிகவும் பிடித்திருந்தது. கதை நன்றாக இருக்கிறது நடிக்கிறேன் என ஒப்புக்கொண்டார் என்றார். பின்னர் இயக்குநர் எஸ். ஆர். பிரபாகரன் பேசுகையில், பொதுவாக ஒரு எழுத்தாளர் சமூகம் சார்ந்து சாதி சார்ந்து மதம் சார்ந்து கதை எழுதும்போது சாதாரண கதையை எழுதுவதை விட கூடுதல் பொறுப்புணர்வுடன் எழுத வேண்டி இருக்கும். காதலைப் பற்றி எழுதும் தருணத்தில் காதலர்களின் பெற்றோர்களை பற்றி எழுத தவறி விடுவோம். எங்கு கை தட்டல்கள் கிடைக்குமோ அதைத்தான் எழுதுகிறோம். அதே தருணத்தில் சமூகம் சார்ந்து மதம் சார்ந்து சாதி சார்ந்து கதை எழுதும் போது ஒரு நாணயத்தின் இரண்டு பக்கங்களைப் போல் சமமாக இருக்க வேண்டும் என ஆசைப்படுகிறேன் என்றார்.

## சேத்தன் சீனு நடிக்கும் ‘வள்ளுவன்’



ஆறுபடை புரொடக்சன்ஸ் ஷைல்குமார் தயாரிப்பில் சங்கர் சாரதி இயக்கத்தில் உருவாகியுள்ள படம் வள்ளுவன். சேத்தன் சீனு நாயகனாக நடிக்க, அவருக்கு ஜோடியாக ஆஸ்னா நடிக்கிறார். அஸ்வத் இசையமைக்க, ஒளிப்பதிவை சுரேஷ் பாலா மேற்கொள்ள படத்தொகுப்பை ஷான் லோகேஷ் கவனித்துள்ளார். இப்படம் ரிலீஸுக்குத் தயாராகி வரும் நிலையில், படத்தின் இசை மற்றும் டிரைலர் வெளியீட்டு விழா சமீபத்தில் நடைபெற்றது. இந்த நிகழ்வில் ஆர்.கே செல்வமணி, ஆர்.வி உதயகுமார், பேரரசு, கே ராஜன், உள்ளிட்ட பலர் சிறப்பு விருந்தினர்களாகக் கலந்து கொண்டனர். இந்த நிகழ்வில் இயக்குநர் சங்கர் சாரதி பேசுகையில், அப்பாவிகள் தண்டிக்கப் படக்கூடாது என்பதற்காகத்தான் அம்பேத்கர் சட்டங்களை இயற்றினார். ஆனால் அதன் ஓட்டைகளைப் பயன்படுத்தி தப்பிக்கும் வழிகளைத்தான் இன்று தேடுகிறார்கள். இப்படி சட்டத்தைக் கையில் வைத்துக் கொண்டிருப்பவர்கள் தவறு செய்தால் யார் தண்டனை கொடுப்பது என்பதை மையப்படுத்தி படம் உருவாகி இருக்கிறது என்றார். நாயகன் சேத்தன் சீனு பேசும்போது, நான் ஜெண்டில்மேன் 2 படத்தில் நடிக்க ஒப்புக்கொள்வதற்கு முன்பே இந்த படத்தின் கதையை சங்கர் சாரதி என்னிடம் சொன்னார். கதையைக் கேட்டதுமே ஷங்கருக்கு எப்படி ஜென்டில்மேன் படம் ஒரு திருப்பு முனையாக ஆகியதோ அதேபோல இந்த வள்ளுவன் திரைப்படம் இந்த சங்கர் சாரதிக்கு திருப்பு முனையாக மாறும் என்று கூறினேன் என்றார்.

## சிம்ரன் வெளியிட்ட ‘ரெட் லேபிள்’ ஃபேர்ஸ்ட் லுக்




ரெவ்ஜென் பிலிம் பேக்டரி லெனின் தயாரிப்பில் கே.ஆர். வினோத் இயக்கத்தில் உருவாகியுள்ள படம் ரெட் லேபிள். கோயம்புத்தூரிலுள்ள ஒரு கல்லூரியில் நடக்கும் கொலையும் கொலை சார்ந்த சம்பவங்களையும் கொண்ட திரைப்படமாக இப்படம் உருவாகி இருக்கிறது. இப்படத்தின் கதையை பொன்.பார்த்திபன் எழுத, கே.ஆர்.வினோத் இயக்கி இருக்கிறார். படத்துக்கு சதீஷ் மெய்யப்பன் ஒளிப்பதிவு. இசை கைலாஷ் மேனன், படத்தொகுப்பு லாரன்ஸ் கிஷோர். படத்தின் நாயகனாக லெனின் நடிக்க, நாயகியாக அஸ்மின் நடித்துள்ளார். இவர்களுடன் ஆர். வி. உதயகுமார் மற்றும் முனிஷ்காந்த் முக்கிய பாத்திரங்களில் நடித்துள்ளனர். முழுக்க முழுக்க இதன் படப்பிடிப்பு கோயம்புத்தூர் நகரில் நடைபெற்றுள்ளது. படக் குழுவினரை ஊக்குவிக்கும் வகையில் சிம்ரன் இந்தப் படத்தின் ஃபர்ஸ்ட் லுக் போஸ்டரை வெளியிட்டு படக்குழுவினரை வாழ்த்தியுள்ளார்.

## ‘மெஸன்ஜர்’ திரைவிமர்சனம்



நாயகன் ஸ்ரீராம்கார்த்திக் காதல் தோல்வியால் தற்கொலை முயற்சியில் ஈடுபடும் நேரத்தில் தற்கொலை செய்து கொள்ள வேண்டாம் என அவருக்கு ஒரு மெஸன்ஜர் செய்தி வருகிறது. அந்த செய்தியை அனுப்பிய பெண் இரண்டு மாதங்களுக்கு முன்பு இறந்தவர் என தெரிய வர அதிர்ச்சியில் உறைகிறார் நாயகன். அந்த பெண் உண்மையில் இறந்து விட்டாரா என்பதை விசாரிக்கும் நாயகனுக்கு மேலும் பல திடுக்கிடும் தகவல்கள் கிடைக்கிறது. அது என்ன? அதன் பிறகு என்ன நடக்கிறது என்பதைச் சொல்லும் படமே மெஸன்ஜர். வித்தியாசமான சிந்தனை மற்றும் காட்சி அமைப்புகள் இருந்தாலும், அதனை தனது கதாபாத்திரத்தில் பொருத்தி நியாயம் சேர்த்திருக்கிறார் நாயகன் ஸ்ரீராம் கார்த்திக். நாயகி மனிஷா ஸ்ரீ குறைவின்றி இயல்பாக நடித்திருக்கிறார். மற்றொரு நாயகி பாத்திமா, பாத்திமாவின் தோழி வைசாலி ரவிச்சந்திரன் இருவரும் சிறப்பான நடிப்பைக் கொடுத்துள்ளனர். ஜீவா ரவி, லிவிங்ஸ்டன், பிரியதர்ஷினி ஆகியோர் கதாபாத்திரங்களுக்கு பொருத்தமான தேர்வாக இருக்கிறார்கள். அபுபக்கரின் இசையும் பாடல்களும் ஓகே ரகம். பிரசாந்தின் படத்தொகுப்பு பாராட்டும்படி உள்ளது. நடைமுறையில் சாத்தியம் இல்லாத கதையாக இருந்தாலும், அதை திரை மொழியில் சுவாரஸ்யமாக சொல்லியிருக்கும் இயக்குநர் ரமேஷ் இளங்கமணியை பாராட்டலாம். மொத்தத்தில் மெஸன்ஜர் ஒரு வித்யாசமான முயற்சி.

## ‘ஆர்யன்’ திரை விமர்சனம்



நிருபர் ஷரத்தா ஸ்ரீநாத் தொகுத்து வழங்கும் பிரபல தொலைக்காட்சி நேரலை நிகழ்ச்சியில் பார்வையாளராக வந்து அமர்ந்து இருக்கும் செல்வராகவன், திடீரென்று எழுந்து துப்பாக்கியில் ஒருவரைச் சுட அரங்கமே அதிர்ச்சியில் மூழ்குகிறது. ஐந்து பேரை கொலை செய்யப் போகிறேன் என்று சொல்லி விட்டு தன்னையும் சுட்டு தற்கொலை செய்து கொள்கிறார். இது பற்றி விசாரிக்க காவல் அதிகாரியாக விஷ்ணு விஷால் தலைமையில் குழு ஒன்று அமைக்கப்படுகிறது. பின்னர் என்ன நடந்தது என்பது தான் ஆர்யன் படம். காவல்துறை சீருடையில் மிடுக்கான தோற்றத்துடன் முதிர்ச்சியான நடிப்பை வெளிப்படுத்தி அசத்தி இருக்கிறார் விஷ்ணு. செல்வராகவன், அலட்டல் இல்லாத நடிப்பு, இயல்பான உடல் மொழியால் அனைவரையும் ஈர்க்கிறார். தொலைக்காட்சி நிருபராக நடித்திருக்கும் ஷ்ரத்தா ஸ்ரீநாத், மானசா சௌத்ரி, கருணாகரன், அவினாஷ் உள்ளிட்ட அனைவரும் திரைக்கதை ஓட்டத்திற்கு பலம் சேர்த்திருக்கிறார்கள் ஜிப்ரான் இசை ஓகே ரகம். எழுதி இயக்கியிருக்கும் பிரவீன்.கே, இதுவரை சொல்லப்படாத ஒரு கோணத்தில் சைக்கோ திரில்லர் கதையை கையாண்டிருப்பதோடு, அதன் பின்னணியில் மிகப்பெரிய சமூகப் பிரச்சனையை சொல்லியும் அனைவரும் பார்க்க கூடிய ஒரு சைக்கோ திரில்லர் படமாகவும் கொடுத்திருக்கிறார். மொத்தத்தில், ‘ஆர்யன்’ பரபரப்புக்கு பஞ்சமில்லை.

## கைலாசநாதர் கோவிலில் பிரதோஷ விழா கோலாகலம்



**நத்தம், நவ. 04-**

திண்டுக்கல் மாவட்டம், நத்தம் கோவில்பட்டி கைலாசநாதர் கோவிலில் ஐப்பசி மாத வளர்பிறை பிரதோஷ விழா நடந்தது. இதையொட்டி நந்தி சிலைக்கு பால்,பழம்,பன்னீர், விபூதி,சந்தனம்,இளநீர்,தீர்த்தம் உள்ளிட்ட 16 வகையான அபிஷேகங்களும், தீபாராதனைகளும் நடந்தது.தொடர்ந்து மேளதாளம் முழங்க சுவாமி புறப்பாடும் நடந்தது.பின்னர் மூலவர் செண்பகவல்லி சமேத கைலாசநாதருக்கு சிறப்பு அபிஷேகமும், அலங்காரமும், தீபாராதனைகளும் நடந்தது.இதில் சுற்றுவட்டாரங்களிலிருந்து ஏராளமான பக்தர்கள் கோவிலுக்கு வந்திருந்து சுவாமி தரிசனம் செய்தனர். அவர்களுக்கு பிரசாதம் வழங்கப்பட்டது. இதைப்போலவே நத்தம் அருகே குட்டூரில் உள்ள உண்ணாமலை அம்பாள் உடனுறை அண்ணாமலையார் கோவிலிலும் பிரதோஷ விழா நடந்தது.இதில் மூலவருக்கும், நந்திக்கும் சிறப்பு அலங்காரமும், அபிஷேகமும், தீபாராதனைகளும் நடந்தது.இங்கும் பக்தர்கள் கலந்து கொண்டு தரிசனம் செய்தனர்.

### மேலூரில் கலைஞரின் 102-வது பிறந்தநாள் விழா:

## பொதுமக்களுக்கு அமைச்சர் மூர்த்தி நலத்திட்ட உதவிகளை வழங்கினார்



**மேலூர், நவ. 04-**

திராவிட இயக்கத்தின் முன்னாள் தலைவரும், தமிழ்நாடு முன்னாள் முதலமைச்சர் கலைஞர் அவர்களின் 102 வது பிறந்தநாளை முன்னிட்டு மேலூர் ஒன்றியம், வெள்ளரிப்பட்டி, நரசிங்கம்பட்டி, தெற்குத்தெரு, டி வெள்ளாளப்பட்டி, ஆமூர் ஆகிய கிராமங்களில் குடும்ப அட்டை வைத்துள்ள அனைவருக்கும் திமுக சார்பில் வணிகவரி மற்றும் பதிவுத் துறை அமைச்சர் பி. மூர்த்தி பொதுமக்களுக்கு நலத்திட்ட உதவிகளை வழங்கினார்.

நிகழ்ச்சியில் மேலூர் தொகுதி பொறுப்பாளர் வ.து.ந.ஆனந்த், மாநில இலக்கிய அணி துணைச் செயலாளர் நேருபாண்டியன், முன்னாள் மாவட்ட காங்கிரஸ் கவுன்சிலர் வெள்ளரிப்பட்டி ஆர்.எஸ்.பி. அசோகன்,

மேலூர் ஒன்றிய கழக பொறுப்பாளர்கள் வ.ரெகுபதி (மேற்கு), ராஜேந்திர பிரபு (தெற்கு), செல்வராஜ் (வடக்கு), இளங்கண்ணன் (கிழக்கு), மேலூர் நகர்மன்ற தலைவர் முகமது யாசின், கொட்டாம்பட்டி ஒன்றிய பொறுப்பாளர்கள் ராஜராஜன் (தெற்கு), பாலசுப்பிரமணியன் (கிழக்கு), கேசம்பட்டி செ. ராஜா (மேற்கு),

பழனி (வடக்கு), ஆனையூர் பகுதி கழகச் செயலாளர் மருதுபாண்டி, மாவட்ட அமைப்பு சாரா ஓட்டுனர் அணி செயலாளர் தற்காகுடி சரவணன், வடக்கு மாவட்ட வழக்கறிஞர் அணி தலைவர் மாலை முத்தன், வடக்கு மாவட்ட இலக்கிய அணி அமைப்பாளர் கலைவாணன், மாவட்ட அமைப்பு சாரா ஒட்டுநர் அணி துணை அமைப்பாளர் அட்டப்பட்டி குமார்,

முன்னாள் ஒன்றிய கவுன்சிலர்கள் வெள்ளரிப்பட்டி சரவணன், தெற்குத்தெரு தமிழ்மாறன், முன்னாள் ஊராட்சி மன்ற தலைவர்கள் நரசிங்கம்பட்டி ராக்காயி ஆனந்த்,

டி.வெள்ளாளப்பட்டி உமாமகேஸ்வரி, அம்பலகாரன்பட்டி லெட்சுமி ராமையா, கிடாரிபட்டி மதிவாணன், கம்பூர் கதிரேசன், கொட்டகுடி அஜிதா சரவணன், நகர்மன்ற துணை தலைவர் இளஞ்செழியன், அ.வல்லாளபட்டி வீ. வேலவன், வெள்ளரிபட்டி இளைஞர் அணி வசந்த், சந்திவீரன் செல்வம், அய்யப்பன், பொறியாளர் அணி கவின் மற்றும் கட்சி நிர்வாகிகள் பலர் கலந்துகொண்டனர்.

## ராமநாதபுரம் அரசு மருத்துவ கல்லூரி ஆஸ்பத்திரியில் குருதி கொடை அமைப்பாளர்களுக்கு கலெக்டர் விருது



**ராமநாதபுரம், நவ. 04-**

ராமநாதபுரம் அரசு மருத்துவ கல்லூரி ஆஸ்பத்திரியில் தன்னார்வ குருதி கொடை அமைப்பாளர்களுக்கு கலெக்டர் சிம்ரன்ஜீத் சிங் காலோன் விருது வழங்கி பாராட்டினார். ராமநாதபுரம் அரசு மருத்துவ கல்லூரி மருத்துவமனையில் தேசிய தன்னார்வ குருதி கொடையாளர் தினத்தை முன்னிட்டு விழிப்புணர்வு உறுதிமொழி நிகழ்ச்சி நடைபெற்றது. இந்நிகழ்ச்சியில் மாவட்ட கலெக்டர் சிம்ரன்ஜீத் சிங் காலோன் தலைமையேற்று மருத்துவர்கள், செவிலியர்கள், தன்னார்வ குருதி கொடை அமைப்பாளர்கள் முன்னிலையில் விழிப்புணர்வு உறுதிமொழி மேற்கொள்ளப்பட்டது. அதனை தொடர்ந்து தன்னார்வ குருதி கொடை அமைப்பாளர்கள் 35 நபர்களுக்கு கௌரவிக்கும் வகையில் பாராட்டு சான்றிதழை மாவட்ட கலெக்டர் சிம்ரன்ஜீத் சிங் காலோன் வழங்கினார். இந்நிகழ்ச்சியில் ராமநாதபுரம் மாவட்ட அரசு மருத்துவக் கல்லூரி முதல்வர் மரு.அமுதாராணி ரத்த வங்கி பிரிவு மருத்துவ அலுவலர் மரு.மணிமொழி அரசு மருத்துவமனை கண்காணிப்பாளர் மரு.நூர் முகமது, துணை நிலைய மருத்துவர் மரு.கண்ணகி, கல்வித் தந்தை மருத்துவர் இ.எம்.அப்துல்லா நினைவு குருதிக்கொடை பாசறையின் மதுரை மாவட்ட இரத்தான ஒருங்கிணைப்பாளர் பொறியாளர் அஜீஸ் ரஹ்மான், சமூக ஆர்வலர் அப்துல் ஹமீது மற்றும் கல்வித்தந்தை மருத்துவர் இ.எம்.அப்துல்லா குருதிக்கொடை பாசறையின் ராமநாதபுரம் ஒருங்கிணைப்பாளர் பாதுஷா நூருல் சமது மற்றும் அரசு மருத்துவர், செவிலியர்கள் உட்பட பலர் கலந்து கொண்டனர்.

## அலங்காநல்லூர் அருகே குறவன் குளத்தில் ஸ்ரீ ராஜகாளியம்மன் கோவில் கும்பாபிஷேக விழா



**அலங்காநல்லூர், நவ. 04-**

மதுரை மாவட்டம் அலங்காநல்லூர் அருகே குறவன்குளம் கிராமத்தில் ராஜவம்ச சாம்பவர் குல பெருமக்களுக்கு பாத்தியப்பட்ட ஸ்ரீ ராஜகாளியம்மன் திருக்கோவில் மஹா கும்பாபிஷேக விழா நடைபெற்றது. முன்னதாக 2 கால யாக சாலை பூஜைகள், ஹோமங்கள், நடந்தது. பின்னர் யாக சாலையில் இருந்து சிவாச்சார்களின் வேத மந்திரங்கள் முழங்க அழகர்கோவில், ராமேஸ்வரம், காசி, உள்ளிட்ட பல்வேறு புனித ஸ்தலங்களில் இருந்து கொண்டு வரப்பட்ட புனித நீர் குடங்கள்கோவிலை சுற்றி வலம் வந்து, கோபுர உச்சிக்கு கொண்டு செல்லப்பட்டது. அங்கு வேத மந்திரங்களுடன் குடம் குடமாக கலசங்களில் ஊற்றப்பட்டு கும்பாபிஷேக விழா நடந்தது.இதில் சோழவந்தான் தொகுதி வெங்கடேசன் எம்எல்ஏ மற்றும்,சுற்று வட்டார கிராமங்களை சேர்ந்த ஏராளமான பொதுமக்கள் கலந்து கொண்டு சாமி கும்பிட்டனர். அவர்களுக்கு, புனித தீர்த்தம், பூஜை மலர்கள், மற்றும்அன்னதானமும் வழங்கப்பட்டது. கும்பாபிஷேக விழா ஏற்பாடுகளை ஸ்ரீ ராஜ காளியம்மன், திருக்கோவில் திருப்பணி குழு, ராஜ வம்ச சாம்பவர் குல பொதுமக்கள் உறவின்முறை சங்கத்தினர் செய்திருந்தனர்.




● முதல்வர் மு.க.ஸ்டாலின் நேற்று தருமபுரி மாவட்டம், பென்னாகரத்தில் நடைபெற்ற பாராளுமன்ற உறுப்பினர் ஆ.மணி - புவனேஸ்வரி தம்பதியரின் மகன் பிரகதீஸ்வரன் மற்றும் கோவிந்தன் - சுகுணா தம்பதியரின் மகள் மது பிரதிக்சா ஆகியோரது திருமணத்தை தலைமையேற்று நடத்தி வைத்து, மணமக்களை வாழ்த்தினார். இந்நிகழ்வின்போது அமைச்சர்கள் எ.வ.வேலு, எம்.ஆர்.கே.பன்னீர்செல்வம், ஆர்.இராஜேந்திரன், சிவசங்கர், தொல்.திருமாவளவன் எம்.பி, முன்னாள் அமைச்சர் பழனியப்பன், மாவட்ட கலெக்டர் ரெ.சதிஷ், மற்றும் உள்ளாட்சி அமைப்பின் பிரதிநிதிகள் கலந்துகொண்டனர்.




● முதல்வர் மு.க.ஸ்டாலின் நேற்று தருமபுரி வட்டம், அதகபாடி கிராமம் மற்றும் நல்லம்பள்ளி வட்டம், தடங்கம், அதியமான்கோட்டை மற்றும் பாலஜங்கமனஹள்ளி ஆகிய கிராமங்களில் மொத்தம் 1,733 ஏக்கர் நிலப்பரப்பில் அமைக்கப்பட்டுள்ள தருமபுரி சிப்காட் தொழிற்பூங்காவில் நடைபெற்று வரும், உட்புறசாலைகள், மழைநீர் வடிகால் போன்ற உட்கட்டமைப்பு மற்றும் இதர பணிகளின் கட்டுமானப் பணிகளை பார்வையிட்டு ஆய்வு செய்தார். இந்த ஆய்வின்போது அமைச்சர்கள் எ.வ.வேலு, எம்.ஆர்.கே.பன்னீர்செல்வம், ஆர்.ராஜேந்திரன், எஸ்.எஸ்.சிவசங்கர், முன்னாள் அமைச்சர் பழனியப்பன், மாவட்ட கலெக்டர் ரெ.சதிஷ் மற்றும் உள்ளாட்சி அமைப்பின் பிரதிநிதிகள், அரசு உயர் அலுவலர்கள் உடனிருந்தனர்.




● துணை முதல்வர் உதயநிதி ஸ்டாலின் நேற்று, இராணிப்பேட்டை மாவட்டத்தில் 43.74 கோடி ரூபாய் மதிப்பீட்டில் முடிவுற்ற 115 திட்டப் பணிகளை திறந்து வைத்து, 24.34 கோடி ரூபாய் மதிப்பீட்டிலான 6 புதிய திட்டப் பணிகளுக்கு அடிக்கல் நாட்டி, பல்வேறு அரசு துறைகளின் சார்பில் 72,880 பயனாளிகளுக்கு 296.46 கோடி ரூபாய் மதிப்பீட்டிலான அரசு நலத்திட்ட உதவிகளை வழங்கினார். இந்நிகழ்வில் கைத்தறி மற்றும் துணிநூல் துறை அமைச்சர் ஆர்.காந்தி, ஜெகத்ரட்சகன் எம்.பி., எம்.எல்.ஏ.க்கள் ஈஸ்வரப்பன், முனிரத்தினம், மாவட்ட கலெக்டர் சந்திரகலா மற்றும் அரசு அலுவலர்கள், உள்ளாட்சி அமைப்புகளின் பிரதிநிதிகள் உடனிருந்தனர்.

### இலங்கை கடற்படையால் கைது செய்யப்பட்டுள்ள

# தமிழக மீனவர்களை விடுவிக்க தூதரக நடவடிக்கைகள் தேவை

## மத்திய அமைச்சருக்கு முதல்வர் மு.க.ஸ்டாலின் கடிதம்

**சென்னை, நவ. 04-**

இலங்கை அரசால் சிறைபிடிக்கப்பட்டுள்ள தமிழக மீனவர்களையும், அவர்களது மீன்பிடிப் படகுகளையும் விடுவிப்பதற்கு உடனடியாக உரிய தூதரக நடவடிக்கைகளை மேற்கொள்ளுமாறு மத்திய வெளியுறவுத் துறை அமைச்சர் ஜெய்சங்கருக்கு எழுதிய அந்த கடிதத்தில் முதல்வர் மு.க.ஸ்டாலின் வலியுறுத்தியுள்ளார்.

நாகை மற்றும் ராமநாதபுரம் மாவட்டங்களை சேர்ந்த 35 மீனவர்களை இலங்கை கடற்படையினர் சிறைபிடித்தனர். இந்த நிலையில், இலங்கை கடற்படையால் சிறைபிடிக்கப்பட்டுள்ள தமிழக மீனவர்களை விடுவிக்க நடவடிக்கை எடுக்கக்கோரி மத்திய அமைச்சர் ஜெய்சங்கருக்கு முதல்வர் மு.க.ஸ்டாலின் கடிதம் எழுதியுள்ளார்.

அந்த கடிதத்தில் அவர் தெரிவித்து இருப்பதாவது; நாகப்பட்டினம் மாவட்டத்தைச் சேர்ந்த 31 மீனவர்களையும், அவர்களது மூன்று இயந்திரமயமாக்கப்பட்ட மீன்பிடிப் படகுகளையும் சிறைபிடித்துள்ள இலங்கைக் கடற்படையினர், மற்றொரு சம்பவத்தில், ராமநாதபுரம் மாவட்டத்தைச் சேர்ந்த நான்கு மீனவர்களையும், அவர்களது நாட்டுப் படகினையும் சிறை பிடித்துள்ளனர்.

மீனவர்களின் வாழ்க்கையும், அவர்களது வாழ்வாதாரமும் கடலுடன் பிரிக்கமுடியாத வகையில் பின்னிப் பிணைந்துள்ளது. இது போன்று தொடர்ச்சியாக மீனவர்கள் கைது செய்யப்படும் சம்பவங்கள் தமிழ்நாட்டின் மீனவ சமூகத்தினரிடையே ஆழ்ந்த துயரத்தை ஏற்படுத்தியுள்ளது.

ஒவ்வொரு கைது நடவடிக்கையின்போதும், மீனவர்கள் தங்களது வாழ்வாதாரத்தை இழப்பதோடு மட்டுமல்லாமல், அவர்களது குடும்பத்தினரிடையே ஆழ்ந்த அச்ச உணர்வையும், பாதுகாப்பற்ற நிலையையும் ஏற்படுத்தியுள்ளது. தற்போதைய நிலவரப்படி, 114 மீனவர்கள் இலங்கை வசம் காவலில் வைக்கப்பட்டுள்ளனர்.

மேலும், 247 படகுகளும் இலங்கை வசம் காவலில் உள்ளது.

எனவே, இலங்கை அரசால் சிறைபிடிக்கப்பட்டுள்ள அனைத்து தமிழக மீனவர்களையும், அவர்களது மீன்பிடிப் படகுகளையும் விடுவிப்பதற்கு மத்திய வெளியுறவுத் துறை அமைச்சர் ஜெய்சங்கர் உடனடியாக உரிய தூதரக நடவடிக்கைகளை மேற்கொள்ளுமாறு கேட்டுக்கொள்கிறேன். இவ்வாறு அந்த கடிதத்தில் முதல்வர் மு.க.ஸ்டாலின் தெரிவித்துள்ளார்.

# தமிழ்நாட்டில் வாக்காளர் பட்டியல்...

(1-ம் பக்க தொடர்ச்சி)

இருந்தால் அவர்களின் விவரத்தை கேட்டு வாக்காளர் கணக்கெடுப்பு படிவத்தை வழங்குவார்கள். அந்த வீட்டில் 18 வயது நிரம்பியவர்கள் இருந்தால் அதற்குரிய விண்ணப்படிவம் மற்றும் உறுதிமொழி படிவத்தை வழங்குவார்கள். அவற்றை உடனடியாக பூர்த்தி செய்து தரவேண்டியது அவசியம் இல்லை. அடுத்த முறை ஓட்டுச்சாவடி அலுவலர்கள் வரும்போது ஆவணங்களுடன் அவற்றை சமர்பித்தால் போதும் இதற்காக ஓட்டுச்சாவடி அலுவலர்கள் ஒரு வீட்டிற்கு 3 முறை வருவார்கள்.

கடந்த 2002 மற்றும் 2005-ம் ஆண்டு வாக்காளர் பட்டியலில் பெயர் இல்லாதவர்கள் தங்களது பெற்றோர், தாத்தா, பாட்டி பெயர்கள் இருந்தால் அதை தெரிவிக்க வேண்டும். உரிய ஆவணங்களை காட்டி டிசம்பர் 9-ம் தேதி வெளியாகும் வரைவு வாக்காளர் பட்டியலில் இடம் பெறலாம். முகவரி மாற்றம் எதுவும் இருந்தால் வரைவு வாக்காளர் பட்டியலில் பெயர் இடம் பெறாது. முகவரி மாறியவர்களும், 18 வயது நிரம்பிய புதிய வாக்காளர்களும் அதற்கான ஆவணங்களை டிசம்பர் 7-ந்தேதி முதல் ஜனவரி 3-ந்தேதிக்குள் சமர்ப்பித்து தங்களது பெயர்களை இறுதி வாக்காளர் பட்டியலில் இடம்பெற செய்யலாம். இவ்வாறு அவர் கூறினார்.

# எஸ்.ஐ.ஆர். பணிகள்...

...(1-ம் பக்க தொடர்ச்சி)

பணிகள் குறித்து யாரும் அச்சம் கொள்ள தேவையில்லை. இப்பணிகள் எதிர்ப்பார்த்ததைவிட சிறப்பாக மேற்கொள்ளப்படும் என தேர்தல் ஆணையம் தரப்பில் உறுதி அளிக்கப்பட்டது.

இதுபோல கரூர் சட்டமன்ற தொகுதி வாக்காளர் பட்டியலில் இடம் பெற்றுள்ள இறந்தவர்களின் பெயர்களை நீக்கக் கோரி முன்னாள் அமைச்சர் எம்.ஆர்.விஜயபாஸ்கர் தாக்கல் செய்த வழக்கு நிலுவையில் உள்ளதாகவும் தேர்தல் ஆணைய தரப்பு வழக்கறிஞர் சுட்டிக்காட்டினார். இந்த வாதங்களை பதிவுசெய்து கொண்ட நீதிபதிகள் இது தொடர்பாக தாக்கல் செய்யப்பட்டுள்ள அனைத்து வழக்குகளையும் நவம்பர் 13 ம் தேதி விசாரணைக்கு பட்டியலிட உத்தரவிட்டனர்.



● அ.தி.மு.க. பொதுச்செயலாளர் எடப்பாடி கே.பழனிசாமி தலைமையில் சென்னை, ராயப்பேட்டை, அவ்வை சண்முகம் சாலையில் உள்ள தலைமைக் கழக புரட்சித் தலைவர் எம்.ஜி.ஆர். மாளிகையில் நேற்று, சேலம், கிருஷ்ணகிரி, தருமபுரி, நாமக்கல், கரூர் உள்ளிட்ட 17 மாவட்டங்களில், பூத் (பாகம்) கிளைக் கழகங்களைச் சேர்ந்த தகவல் தொழில்நுட்பப் பிரிவைச் சேர்ந்த மாவட்டப் பொறுப்பாளர்கள் ஆலோசனைக் கூட்டம் நடைபெற்றது. இக்கூட்டத்தில், கழக தகவல் தொழில்நுட்பப் பிரிவுச்செயலாளர் ராஜ் சத்யன் உள்ளிட்டோர் கலந்துகொண்டனர்.

# தெரு நாய்கள் தொடர்பான வழக்கில் வரும் 7-ம் தேதி சுப்ரீம் கோர்ட் தீர்ப்பு

**டெல்லி, நவ. 04-**

தெரு நாய்கள் தொடர்பான வழக்கில் வரும் 7-ம் தேதி தீர்ப்பு வழங்கப்படும் என்று சுப்ரீம் கோர்ட் அறிவித்துள்ளது.

தலைநகர் டெல்லியில் தெரு நாய்கள் தொல்லை குறித்த வழக்கை தானாக முன்வந்து விசாரித்து வரும் சுப்ரீம் கோர்ட், பின்னர் அனைத்து மாநிலங்கள் மற்றும் யூனியன் பிரதேசங்களையும் இந்த வழக்கின் தரப்பினராக எடுத்துக்கொண்டது. தெரு நாய்களை பிடித்து கருத்தடை செய்து பிடித்த இடத்திலேயே விட வேண்டும் என கடந்த ஆகஸ்டு 22-ந்தேதி உத்தரவு ஒன்றை நீதிபதிகள் பிறப்பித்தனர். முன்னதாக டெல்லி மற்றும் தலைநகர் பிராந்தியத்தில் தெரு நாய்களை பிடித்து காப்பகங்களில் அடைக்குமாறு 2 நீதிபதிகள் அமர்வு பிறப்பித்த உத்தரவை 3 நீதிபதிகள் அமர்வு மாற்றியமைத்தது.

அதேபோல், தெருநாய்கள் விவகாரத்தில் மாநில அரசுகள் பிரமாண பத்திரம் தாக்கல் செய்ய சுப்ரீம் கோர்ட் உத்தரவிட்டது. ஆனால், டெல்லி, மேற்கு வங்காளம், ஆகியவை மட்டுமே பிரமாண பத்திரம் தாக்கல் செய்தது. இதையடுத்து, எஞ்சிய மாநில அரசுகளின் தலைமை செயலாளர்கள் நேரில் ஆஜராக சுப்ரீம் கோர்ட் உத்தரவிட்டது.

அதன்படி, சுப்ரீம் கோர்ட் நீதிபதிகள் விக்ரம் நாத், சந்தீப் மேத்தா, அஞ்சாரியா ஆகியோர் அடங்கிய அமர்வுமுன் தமிழகம் உள்பட பல்வேறு மாநில தலைமை செயலாளர்கள் நேற்று நேரில் ஆஜராகினர். அதன்பின்னர் மாநில அரசுகள் சார்பில் பிரமாண பத்திரங்களும் தாக்கல் செய்யப்பட்டன. இதையடுத்து, அனைத்து பிரமாண பத்திரங்களையும் ஆய்வு செய்ய சுப்ரீம் கோர்ட் உத்தரவிட்டது.

இந்நிலையில், மாநில அரசுகள் சார்பில் பிரமாண பத்திரங்கள் தாக்கல் செய்யப்பட்ட நிலையில் தெரு நாய்கள் வழக்கில் வரும் 7ம் தேதி தீர்ப்பு அளிக்கப்படும் என்று சுப்ரீம் கோர்ட் தெரிவித்துள்ளது. அன்றைய தினம் மாநில அரசுகளின் தலைமை செயலாளர்கள் ஆஜராக தேவையில்லை என்றும் நீதிபதிகள் தெரிவித்துள்ளனர். இதையடுத்து வழக்கு ஒத்தி வைக்கப்பட்டது.

### சமூக வலைத்தளங்களை பயன்படுத்த

# சிறார்களுக்கு தடை விதிக்க கோரிய மனு சுப்ரீம் கோர்ட்டில் தள்ளுபடி

**புது டெல்லி, நவ. 04-**

நாட்டில் உள்ள 14 வயது முதல் 18 வயதுக்கு உட்பட்ட சிறார்கள் சமூக வலைத்தளங்களைப் பயன்படுத்தத் தடை விதிக்க கோரிய மனுவை சுப்ரீம் கோர்ட் விசாரணைக்கு ஏற்க மறுத்து அதை தள்ளுபடி செய்தது.



நாட்டில் உள்ள சிறார்கள், சமூக ஊடகங்களைப் பயன்படுத்த தடை விதிக்க வேண்டும் என்றும், சீனா மற்றும் ஆஸ்திரேலியாவில் 14 வயது முதல் 18 வயதுடைய சிறார்கள் சமூக வலைத்தளங்களைப் பயன்படுத்தத் தடை விதிக்கப்பட்டிருப்பது போல, இந்தியாவிலும் தடை விதிக்க வேண்டும் என்ற கோரிக்கை எழுந்தது.

நாடு முழுவதும், சமூக வலைத்தளங்களுக்கு அடிமையாகி, சிறார்கள் படிப்பில் கவனம் செலுத்தாமல், வாழ்க்கை சீரழிந்து வருகிறது. பல இடங்களில் ரீல்ஸ் மோகத்தால் உயிரை இழக்கும் சம்பவங்களும் நடைபெற்று வரும் நிலையில், சுப்ரீம் கோர்ட்டில் இது தொடர்பான மனு தாக்கல் செய்யப்பட்டது.

இந்த மனுவை சுப்ரீம் கோர்ட் விசாரணைக்கு ஏற்க மறுத்துவிட்டது. நேபாளத்தில் சமூக வலைத்தளப் பயன்பாட்டை நிறுத்தியதால் என்ன விளைவு ஏற்பட்டது என்பதை பார்த்தீர்களா? என்று சுப்ரீம் கோர்ட் சுட்டிக் காட்டி, மனுவை தள்ளுபடி செய்தது.

முன்னதாக ஞாயிற்றுக்கிழமை, தூத்துக்குடியில், ரயில் மீது ஏறி ரீல்ஸ் எடுக்க முயன்ற இளைஞர், மின்சாரம் தாக்கி பலியானார். அதுபோல, அண்மையில் நேபாளத்தில், சமூக வலைத்தளப் பயன்பாட்டுக்கு தடை விதிக்கப்பட்டதைத் தொடர்ந்து, அந்நாட்டில் ஜென் இசட் இளைஞர்கள், கொதித்தெழுந்து மிகப்பெரிய வன்முறையை அரங்கேற்றியிருந்தனர். இது அந்நாட்டில் ஆளும் அரசு கவழிக் காரணமாக இருந்தது குறிப்பிடத்தக்கது.

# கோவையில் கல்லூரி மாணவி கூட்டு பாலியல் வன்கொடுமை

## தப்பியோடிய கும்பலுக்கு போலீஸ் வலை

**கோவை, நவ. 04-**

கோவையில் கல்லூரி மாணவியை கூட்டு பாலியல் வன்கொடுமை செய்த கும்பலை போலீசார் தேடிவருகின்றனர்.

கோவை விமான நிலையம் அருகே பிருந்தாவன் நகர் பகுதியில் நேற்று முன்தினம் இரவு 10 மணியளவில் கல்லூரி மாணவி தனது ஆண் நண்பருடன் காரின் அமர்ந்து பேசிக்கொண்டிருந்தார். ஆள் நடமாட்டமற்ற அப்பகுதிக்கு அப்போது வந்த 3 பேர் கொண்ட கும்பல் காரில் இருந்த கல்லூரி மாணவியின் ஆண் நண்பரை கடுமையாக தாக்கியுள்ளது. 3 பேர் கும்பல் தாக்கியதில் படுகாயமடைந்த ஆண் நண்பர் மயங்கியுள்ளார். பின்னர், கல்லூரி மாணவியை அப்பகுதியில் உள்ள மறைவான இடத்திற்கு தூக்கிச்சென்ற அந்த கும்பல் மாணவியை கூட்டு பாலியல் வன்கொடுமை செய்துள்ளது.

இதையடுத்து, தாக்குதலில் மயக்கமடைந்த ஆண் நண்பர் மயக்கம் தெரிந்து உடனடியாக போலீசாருக்கு தகவல் கொடுத்துள்ளார். தகவலறிந்து விரைந்து சென்ற போலீசார் தீவிர தேடுதலுக்குப்பின் உயிருக்கு ஆபத்தான நிலையில் முறப்புதர் பகுதியில் அரைகுறை ஆடையுடன் கிடந்த கல்லூரி மாணவியை மீட்டுள்ளனர். உடனடியாக மாணவியை மருத்துவமனையில் சிகிச்சைக்கு அனுப்பி வைத்தனர். இந்த கொடூர சம்பவம் குறித்து வழக்குப்பதிவு செய்த போலீசார் கல்லூரி மாணவியை கூட்டு பாலியல் வன்கொடுமை செய்துவிட்டு தப்பியோடிய கும்பலை தேடி வருகின்றனர். இந்த சம்பவம் கோவை மட்டுமின்றி தமிழகத்தில் பெரும் அதிர்வலைகளை ஏற்படுத்தியுள்ளது.



● சென்னை ராஜாஜி சாலையில் உள்ள பதிவுத்துறை அலுவலக கூட்டரங்கில் 25 நபர்களுக்கு இளநிலை உதவியாளர் பதவி உயர்வு ஆணைகள் மற்றும் பணியின் போது உயிரிழந்த பதிவுத்துறை அலுவலரின் வாரிசுதாரருக்கு பணி நியமன ஆணைகளை வணிகவரி மற்றும் பதிவுத்துறை அமைச்சர் பி.மூர்த்தி வழங்கினார். அருகில் வணிகவரி மற்றும் பதிவுத்துறை அரசு செயலாளர் ஷில்பா பிரபாகர் சதீஷ், பதிவுத்துறை தலைவர் தினேஷ் பொன்ராஜ் ஆலிவர், மற்றும் பதிவுத்துறை உயர் அலுவலர்கள் உள்ளனர்.